டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்

# திருவெம்பாவை

## விளக்கம்



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# திருவெம்பாவை

## விளக்கம்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்—தமிழ்மொழித்
துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற்பதிப்பு : செப்டம்பர், 1987

நறுமலர்ப் பதிப்பக வெளியீடு.

விலை ரூ. 12-00

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. உருவும் திருவும்
3. கட்டுரை வளம்
4. மனோன்மணீயம் (பதிப்பு)
5. வாழையடி வாழை
6. காரும் தேரும்
7. முருகன் காட்சி
8. இலக்கிய அணிகள்
9. சான்றோர் தமிழ்
10. நல்லோர் நல்லுரை
11. இலக்கியக் காட்சிகள்
12. மலர் காட்டும் வாழ்க்கை
13. நெஞ்சின் நினைவுகள்
14. பெருந்தகை மு. வ.
15. ஆண்டாள்
16. சங்க கால மகளிர்
17. சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்.
18. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
19. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்
20. அறவோர் மு. வ.

ஆங்கிலம் :

21. The status of women in Tamilnadu during the Sangam Age.
22. A Study of the literature of the Cera Country.
23. Papers in Tamil Literature.

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், சென்னை-600 002.

# முன்னுரை

சமயம் என்பது தத்துவம் என்ற உயிருக்கு உடல் போன்றது என்பர் விவேகானந்தர். சைவ சமயம், ஐரோப்பிய நாகரிகம் இந்தியத் துணைக் கண்டத்தில் பரவுவதற்கு முன்பே பெண்மையின் மேன்மையினை (Emancipation of Women) தனி மனித நிலையிலும் சமுதாய நிலையிலும் உயர்த்திப் பேசிய பெருமை கொண்டதாகும். சிவன் நிலைச் சக்தியென்றால் (Static Energy), பார்வதி இயங்கு சக்தியாகக் (Dynamic Energy) கருதப்பட்டிருக்கின்றார்,

இல்லறத்தை முழுமையும் விரும்பித் துறந்த மாணிக்க வாசகர் இறைவனை அடையும் எளிய வழிகளுள் ஆன்மீகக் காதல்தான் (Bridal Mysticism) சிறந்தது என்று உணர்ந்து பாவைப்பாடலை ஒரு வடிவமாகக் கொண்டு (Format) அதன் வழி இறையருட் கருத்துகளைப் படிப்படியாகத் திருவெம்பாவையில் உணர்த்துகின்றார்.

எந்த ஒரு செய்தியினையும் கல்வியறிவு மிகுதியாக இல்லாதவர்கூட அறிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும் என்றால் அவர்களுக்குப் பெரிதும் பழக்கப்பட்ட நிகழ்வுகளையும், நம்பிக்கைகளையும், கதைகளையும் பின்னணியாகக் கொண்டு இயம்பினால்தான் பயன் விளையும் என்பது செய்தித் தொடர்பு அறிவியல் (Communication Technology) கூறும் அறிவுரையாகும். மாணிக்கவாசகர் சிற்றூர்களிலுள்ள மகளிர்தம் விளை யாட்டுகள், வழிபாடு, உட்கிடக்கை, சடங்குகள் ஆகியவற்றை இயற்கைச் சூழலிலேயே பயின்றவர். கண்களுக்கு எளிமையாகத் தெரியும் கண்ணாடிப் பாத்திரத்தில் உண்ணும் மருந்தை வைப்பதைப்போல எளிமையான பாவை நோன்பு என்ற சமுதாயச்

சடங்கினைக் கொண்டு ஐந்தெழுத்தின் உட்பொருளை விளக்கினார் மணிவாசகர். இத்தகைய பாடல்கள் ஓர் இனத்தின் பண்பாட்டுத் தனித் தன்மையை விளக்கும் தொன்மையுருக்கள் (archetypes of a race) என்று உளவியல் பேரறிஞர் சி. ஜி. யூங் கூறுகின்றார். நார்மன் கட்லெர் போன்ற மேலை நாட்டுப் பேராசிரியர்கள் திருவெம்பாவையைத் தங்கள் மொழியில் ஆக்கிக் கொண்டு தங்களுக்கும் சைவத்தின் பெருமை தெரியும் என்று பூரித்துப் போகின்றார்கள்.

சைவ சித்தாந்திகளிடமும், தருக்க வல்லுநர் களிடமும், இலக்கியப் பேராசிரியர்களிடமும், மேடைப் பேச்சு வித்தகர்களிடமும் உள்ள இந்தத் திருவெம்பாவை யைப் பேருந்தும் புகைவண்டியும்கூடப் பார்த்திராத தொலை தூர ஏழை எளிய மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று சென்னை வானொலி நிலையம் எண்ணி, சென்ற ஆண்டு என்னை விளக்கம் கூற வேண்டிக் கொண்டது. சமயத் தொண்டாகவும் சமுதாயத் தொண்டாகவும் இதனை ஏற்று முப்பது நாட்களும் திருவெம்பாவையையும் திருப்பள்ளி யெழுச்சியையும் காலை நேரத்தில் வானொலியில் உரை விளக்கம் தந்து வந்தேன்.

கணக்கற்ற தொலைபேசி, கடிதம் மற்றும் நேரிடை வாழ்த்துகள் வந்து குவிந்தன. கடமையைச் சரிவரச் செய்தோம் என்ற மகிழ்ச்சி. வானொலிக்கும் வாழ்த் துரைத்த அனைவர்க்கும் என் தமிழ் நெஞ்சம் நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கின்றது. சந்தன மரத்தை வெட்டுகின்ற கோடரிக்குக்கூட மணம் கிடைத்து விடுகின்றதன்றோ!

/ திருச்சிற்றம்பலம் /

சி. பா.

# 1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி

ஆதியும் அந்தமும்
    இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
    கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ?
    வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள்
    வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே
    விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல்
    நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள்
    கிடந்தாள்என்னே! என்னே!
ஈதே எந்தோழி
    பரிசேலோர் எம்பாவாய்!

உலகில் நாம் காணும் எப்பொருளுக்கும் தொடக்கம் என்பது ஒன்று உண்டு; அதேபோல் முடிவு என்பதும் ஒன்று உண்டு. தோற்றம் பெற்ற எப்பொருளும் இறுதி நிலைக்கு உட்பட்டதே. ஆனால் உலகில் உள்ள எண்ணற்ற கோடி உயிர்களைப் படைத்திருக்கும் இறைவனுக்குத் தொடக்கமும் இல்லை; முடிவும் இல்லை. அவனை — அப்பரம்பொருளைச் சிவன் எனக் கண்டனர் நம் முன்னோர். ‘சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்’ என்று அப்பேரருட் பெரும் பிழம்பைப் போற்றினர். தமிழின் முதற்காப்பியமாம்

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளும் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்று சிவ பரம் பொருளைக் குறிப்பிட்டனர். செம்மை சார்ந்தது சிவம் என்பர். அச்சிவபெருமானே மாணிக்கவாசகப் பெருந் தகையாய் அறிவில் நிறைந்திருந்தார். வாக்கில் கலந் திருந்தார் என்றால் மணிவாசகரின் மாண்பினைக் கட்டுரைக்கவும் ஒல்லுமே! எனவே காதற்சுவையமைந்த திருக்கோவையார் எனும் திருச்சிற்றம்பலம் 'கோவை யாரைப் பாடிய மாணிக்கவாசகரை நோக்கிக் கோவை பாடிய வாயால் ஒரு பாவை பாடும்' என்று அப்பரமனே விளித்துத் திருவெம்பாவைப் பாடல்களைப் பெற்றார் என்பர். மேலும் மணிவாசகப் பெருந்தகையார் அருளிச் செய்த பாடல்களைச் சிவபெருமானே தம் திருக்கை யினால் எழுதிக் கொண்டார் என்று வழி வழியாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இவ்வாறு இறைவன் திருவாசகத்தைத் தம் திருக்கரத்தால் எழுதிக் கொண்ட தற்கு மனோன்மணீய ஆசிரியர், ஒரு காலத்தில் உலகம் அழிந்த பிறகு, தாம் மட்டும் தனித்திருக்கும்பொழுது, அத்தனிமைத் துயரைப் போக்கிக் கொள்ளத் திருவாசகம் படிப்பது என்று முடிவெடுத்து அதனை முற்றிலுமாக எழுதிக் கொண்டார் என்பர்.

> **கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்**
> **உடையார்உன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே**

மேலும் பண்டை நாளில் தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தர்கள் முடிசூடும் காலத்தே திருவெம்பாவைப் பாடல்கள் பாடப்பெற்றன என்பதனை ஊகித்தறிய இடமுண்டு என்பர் அறிஞர். தமிழர் வணிக உறவும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்டிருந்த தாய்லாந்து, சயாம் முதலிய கடல் கடந்த நாடுகளிலும் அந்நாட்டு மன்னர்கள் முடி புனையும் காலங்களில் திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்று வருகின்றன என்று கூறப்படு கின்றது.

இனி, திருவெம்பாவையின் முதற்பாடலை நோக்குவோம். 'சத்தியை வியந்தது' என்ற தலைப்பில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. திருவண்ணாமலையில் மாணிக்கவாசகப் பெருமான் தங்கியிருந்த காலையில் இத்திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியருளினார் என்று கூறுவர். மார்கழித் திங்களில், விடியற்காலையில் கண் விழித்தெழுந்து குளம், ஆறு முதலான நீர்நிலைகளுக்குக் குளிக்கச் செல்லும் பெண்டிர் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கும் தம்மொத்த தோழியரை அழைக்கு முகமாக அவர்களோடு உரையாடும் போக்கில் இப்பாடல்கள் இயற்றப் பெற்றுள்ளன. மனோன்மணி, சர்வபூததமணி, பலப்பிரமதனி, பல விகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சக்திகளுள், முன்னின்றவர் பின்னின்றவரைத் துயிலெழுப்புவதாகவும், எல்லாருங்கூடி எம்பெருமானை வந்தித்து வாழ்த்தும் பொருட்டுத் தம்முட் பாடுவதாகவும், இவ்வாறாக இயம்பிய பாடல்களின் தொகுதியே திருவெம்பாவை என்றும் தத்துவ நோக்கில் தலைப்படுவோர் கருத்துரைப்பர்.

சிவபெருமான் பிறப்பிறப்பிலி; அதாவது பிறப்பும் இறப்பும் அற்றவன். தோற்றமும் ஒடுக்கமும் அப்பெருமானுக்கில்லை. எனவே மணிவாசகப் பெருந்தகையார் தொடக்கத்திலேயே அப்பரம்பொருளை 'ஆதியும் அந்தமும் இல்லா' எனத் தொடங்கி விளிக்கிறார். அவ் ஆண்டவன் 'அரும்பெருஞ்சோதி'யாகத் திகழ்கின்றான். ''எல்லா விளக்கும் விளக்காகா' என்பது போல, எல்லாச் சோதியும் பெருஞ்சோதியாக, அதிலும் அரும்பெருஞ் சோதியாகிவிட முடியுமா? சிறு அகல் விளக்கு முதல் நாம் கண்ணாற் காணுகின்ற 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு' — அதாவது சூரியன் வரையிலும் உலகிற்கு ஒளி வழங்கும் எல்லாச் சோதிகளும் ஒரு காலைக் கொருகால் குன்றும் நீர்மையுடையனவாகும்.

ஆனால் அடிமுடி அறியவொண்ணாமல் திருவண்ணா மலையில் சோதிப் பிழம்பாய் எழுந்தருளிக் காட்சி தந்து கொண்டிருக்கும் தடங்கருணைப் பெருங்கடலாம் சிவ பெருமான், என்றும் எக்காலத்தும் குன்றாத ஒளியுடை யவன். பிறசோதிகள் மிகுங்காலத்தில் வெப்பந்தந்து உலக உயிர்களை மருட்டலாம்; வெருட்டலாம். ஆனால் அலகில் சோதியனாய், அம்பலத்தாடுபவனாய் விளங்கும் அச்சிவபரம்பொருள் திருவண்ணாமலையில் நான்முகனும் நாராயணனும் பறந்தும் கீண்டியும் சென்றும் காணாமாட்டாத் திருமுடியையும், திருவடி யையும் உடைய சோதியனாய்ப் பொலிந்தான் என்பது புராண வரலாறு. எனவேதான் மணிவாசகப் பெருந் தகையார் ‘ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி, என்று அக்கழகமோடமர்ந்த கண்ணுதற் கடவுளைக் குறிப்பிட்டார், இத்தகைய சோதியைச் சுடரொளி விளக்கை — பிழம்பை வைகறையில் துயிலெழுந்த மகளிர் புகழ்ந்து பாடிக் கொண்டே வீதி வழியே போகின்றார்கள். இவ்வாறு பாடுவதைக் கேட்டுக் கொண்டிருந்தும் ஒரு பெண் துயிலொழிந்து எழாமல் பொய்யுறக்கம் கொண்டு நிற்கிறாள். அவளை அழைக்க வேண்டும், அன்பாக அழைக்க வேண்டும். ஆண்டவன் அருளைப் பெற்றுய்ய அழைக்க வேண்டும். எனவே அவளைப் புகழும் போக்கும், அவள் நெஞ்சில் மகிழ்ச்சி சுரக்கும் போக்கில் ‘வாள் தடங்கண் மாதே’ என விளிக்கின்றனர். பெண் ணிற்கழகே கண்கள். அக்கண்களும் காதளவோடியிருக்க வேண்டும், அதுவே பேரழகு எனக் கழறுவர். விசாலமான அக்கண்களும் ஒளிபெற்றுத் திகழ்ந்தால், மீட்டும் மீட்டும் பார்க்கத் தோன்றும் வண்ணம் ஒளியுடன் கூடிய கவர்ச்சி கொண்டதாயிருப்பின் அழகுக்கு அழகு என்றாகும். ‘ஒளி வீசும் அகன்ற கண்களையுடைய பெண்ணே! இன்னும் நீ உறங்குகின்றாயே’ என்று மெல்ல அவள் செயலை அறிவுறுத்துகின்றார்கள். துயிலுதல் என்ற பொருளைத் தரும் ‘கண் வளர்தல்’ என்ற சொல் கருத்தாழம்

உடையது. 'மாதே வளருதியோ?' என்ற வினாக்குறி, 'கண்வளரக் கூடாது; உடன் எழுந்து எங்களோடு சேர்ந்து பரமன் புகழ்பாட வரவேண்டும்' என்னும் குறிப்பினை உள்ளடக்கியதாகும். அப்பொழுதும் அவள் எழுவதாகத் தெரியவில்லை. எனவே 'வன்செவியோ நின்செவிதான்' என்று சற்று வன்மையாகவே தோற்செவி யல்லாத வலிய இரும்புச் செவியோ என்று கேட்கின் றார்கள். பின்னர் தாங்கள் தேவர்களுக்கெல்லாம் தலைவனாக இருக்கக் கூடிய மாதேவனை — சிவபெரு மானை — அவன் வீரக்கழல்களை வாழ்த்திய பேரொலி வீதியிலே கேட்ட அளவில் படுக்கையில் படுத்துக்கிடந்த ஒரு பெண் விம்மி விம்மி அழுதாள். தன் மெய்ம்மறந் தாள். தான் படுத்திருந்தது மணம் வீசும் மலர்களைக் கொண்ட படுக்கையேயானாலும், அப்படுக்கையில் படுத்துக் கிடவாமல் மாதேவன் புகழ்மொழிகளைப் பிற பெண்டிர் வீதிவாய்ப்பாடக் கேட்ட அளவில், படுக்கை யிலிருந்தும் புரண்டு கீழே தரையில் விழுந்தாள். ஒன்றுக்கும் உதவாதவள் போல இப்பொழுது படுத்துக் கிடக்கிறாள். அவள் 'மாதேவன் வாழ்த்திய வாழ்த் தொலி போய் வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டும் இங்ஙன் ஏதேனும் ஆகாள் கிடந்தாள்! அவளுடைய இந்த நிலையைக் கண்டு 'என்னே என்னே!' என்று வியக்கிறார்கள். ஈதே எந்தோழி பரிசு' — எனக் கினிய தோழியே! இத்தன்மையினை யான் என்னவென்று கூறுவேன் என்கிறாள் அழைக்கும் பெண்களில் ஒருத்தி. எம்பாவாய் — எம்தோழியே! என்பது விளி. ஏல், ஓர் எனும் இரண்டு சொற்களும் அசைகள்.

எனவே இப்பாடலில், தாம் பெற்ற பயனைத் தம் தோழியும் அடைய வேண்டும் என்ற பெருநினைப்பில், மாதேவன் வார்கழல்களைப் பாடிய பெண்கள் இன்னும் விழிக்காமல் துயில் கொண்டிருக்கும் பெண்களைச் 'சேர

வாரும் ஜெகத்தீரே' எனும் தாயுமானார் மொழியில் நன்மை பெற்றுய்ய — சிவப்பேறு பெற்றுய்ய அழைத்தார்கள் என்று கொள்ளுதல் வேண்டும்.

**ஆதியும் அந்தமும்**
**இல்லா அரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக்**
**கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே! வளருதியோ!**
**வன்செவியோ நின்செவிதான்?**
**மாதேவன் வார்கழல்கள்**
**வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே**
**விம்மிவிம்மி மெய்ம்மறந்து**
**பாதார் அமளியின்மேல்**
**நின்றும் புரண்டிங்ஙன்**
**ஏதேனும் ஆகாள்**
**கிடந்தாள்என்னே! என்னே!**
**ஈதே எந்தோழி**
**பரிசேலோர் எம்பாவாய்!**

## 2. பாசம் பரஞ்சோதி

**பாசம் பரஞ்சோதிக்**
**கென்பாய் இராப்பகல் நாம்**
**பேசும்போதெப்போதிப்**
**போதார் அமளிக்கே**
**நேசமும் வைத்தனையோ?**
**நேரிழையாய்! நேரிழையீர்!**
**சீசி! இவையுஞ்**
**சிலவோ? விளையாடி**
**ஏசும் இடமீதோ?**
**விண்ணோர்கள் ஏத்துதற்குக்**
**கூசும் மலர்ப்பாதந்**
**தந்தருள வந்தருளும்**
**தேசன் சிவலோகன்**
**தில்லைச்சிற் றம்பலத்துள்**
**ஈசனார்க் கன்பார்? யாம்**
**ஆரேலோர் எம்பாவாய்!**

பாசம் பரஞ்சோதிக்கு என்று தொடங்குகின்றது. இவ்விரண்டாம் பாட்டு. முதற்பாட்டில் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்சோதி என மணிவாசகப் பெருந் தகையார் சிவ பரம்பொருளை வழுத்தினார். இத்திருப் பாட்டில் பரஞ்சோதி என்று அப்பரம்பொருளைச் சுட்டுகின்றார். முன் பாடல் போலவே பெண்டிர் தமக்குள் அமையும் உரையாடலாகவே இப்பாடலும் அமைந்துள்ளது.

உறங்கிக் கொண்டிருக்கும் பெண்ணொருத்தியை எழுப்புவதற்குச் செல்லும் மகளிர் அவளைப் புகழ்வது போல முன்னிலைப்படுத்தியே தம் பேச்சைத் தொடங்கு

கின்றனர். பொருத்தமான அணிகலன்களைப் புனைந்திருக்கின்ற பெண்ணே எனும் பொருளில் 'நேரிழையாய்' என விளிக்கின்றனர். அவ்வாறு விளித்துப் பின்னர்த் தாம் சொல்லவந்த கருத்தினைச் சொல்ல முற்படுகின்றனர். உறங்குகின்ற அப்பெண் எழுப்பவந்த பெண்களோடு நெருங்கிய நேயமும் தொடர்பும் பூண்டிருந்தாள் என்பது 'இராப்பகல் நாம் பேசும்பொழுது எப்போதும்' என்ற தொடரால் பெறப்படுகின்றது.

பெண்கள் இருவர் பேசத் தொடங்கினால் அப்பேச்சு கால தேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்படுமோ? அதுவும் அப்பேச்சு எல்லாம் வல்ல அப்பரம்பொருளைப் பற்றியதாக இருக்கையில் அது பகலென்றும் இரவென்றும் பாராது நீளுமன்றோ? அவ்வகையில்தான் உறங்குகின்ற அந்தப் பெண் இராப் பகலாகப் பேசிய பல நாட்களிலும் அவளுடைய பாசம் பேரன்பு பரஞ்சோதிக்கு என்றே மொழிந்தாள். ஒளி வடிவாகத் திகழும் உத்தமனான சிவபிரானுக்கே தன் அன்பைக் காணிக்கையாக்கி விட்டேன் என்று அவள் கட்டுரைத்த நாட்கள் பல. ஆனால் இவ்வாறெல்லாம் உறுதியாகவும் அறுதியிட்டும் பேசிய அவள் இன்று மலர்கள் நிறைந்த படுக்கையினிடத்தே பாசத்தை மாற்றி வைத்துக் கொண்டவள் போலத் தென்படுகின்றாள். ஏனெனில் மலர்ப் படுக்கையினின்றும் எழுந்துவர மனமில்லாமல் அப்படுக்கையிலேயே ஆசையை வைத்தவள் போல உறங்கிக் கொண்டு கிடக்கின்றாளே என்று எழுப்ப வந்திருக்கும் மகளிர் உறங்கும் பெண்ணை நோக்கி உரைக்கின்றனர். ஏன்? சற்றுக் கேலியுடனேயே கேட்டுவிட்டனர். அவர்கள் பேச்சில் எள்ளல் குறிப்பிருந்தது. அவ்வாறு ஏசிய அளவில், உறக்கங் கலைந்து ஒருவாறு எழ முற்படுகின்ற பெண், எழுப்புவர்கள்மீது சீறி விழாமல், சினவாமல், பொறுமையாக மறுமொழி தருகின்றாள். அவர்கள் சினத்தைத் தணிவிப்பவள் போல—அவர்கள் தன்னைப் புகழ்ந்துரைத்த

மொழியாலேயே தானும் புகழ முற்படுகின்றாள். எனவே, 'நேரிழையீர்' என்கின்றாள். பொருத்தமான அணிகலன்களைப் புனைந்து கோல எழிலுடன் அழகு குலுங்கி நிற்கும் நங்கையரே என்று கூறிவிட்டால், அப்புகழ் மொழியில் அதுவும் அவர்களே சற்று முன் அவளைப் புகழத் தேர்ந்தெடுத்த புகழ்மொழியில் சொக்கி நிற்பாரன்றோ? அவ்வளவில் தன் மறுப்புக் கருத்தினைச் சொல்லிவிடும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கிறாள் அவள்.

'சீச்சீ! உங்கள் வாயில் இங்ஙனம் ஏசும் சொற்களும் சில உள்ளனவோ?' என்று தன் வியப்பை வெளிப்படுத்துகின்றாள், உறக்கத்தினின்றும் கண்மலர்ந்த பெண். ஏமொழியில் அவர்கள்—அதிலும் அவளை நன்கு முற்றிலுமாக அறிந்தவர்கள்—அவர்கள் வாயினின்றும் அத்தகைய சுடுசொற்களை அவள் எதிர்பார்க்கவில்லை என்பது 'சீசீ! இவையும் சிலவோ! என்பதனால் முதற்கண் புலப்படுகின்றது. அடுத்தபடியாக 'விளையாடி ஏசும் இடம் ஈதோ?' என்றும் கேட்டு விடுகின்றாள். விளையாட்டாகப் பழித்துரைத்தற்கு உரிய காலமும் இடமும் இதுவாகுமோ என அவள் கூறுவது சற்றே சிந்திக்கத்தக்கது.

தருமன் சூதாட்டத்தில் சகுனியிடம் ஐவருக்கும் உரிமை பூண்ட தேவியாம் பாஞ்சாலியை சூதுப் பொருளாக வைத்திழந்தான். பாஞ்சாலியை சூதிலே பெற்ற அரவக் கொடியுயர்த்த கௌரவர் தலைவன் துரியோதனன் அவளை மானபங்கப்படுத்த முற்பட்டான். அப்பொழுது வீமன் தன் தம்பி அருச்சுனனைப் பார்த்துச் சொன்னான்: ''தம்பி, எரிதழல் கொண்டு வா; கதிரை வைத்திழந்தான்; அண்ணன் கையை எரித்திடுவோம்'' என்றான். அப்பொழுது அருச்சுனன் சொன்னான்: ''மனமாரச் சொன்னாயா வீமா! யாரிடத்துச் சொன்னாய்? எங்கு சொன்னாய்?'' என்றான் என்பதாகப் 'பாஞ்சாலி சபதத்தில்' மகாகவி பாரதி பாடுவான்.

அதுபோலவே சொல்லத் தகாத மொழிகளைச் சொல்லத் தகாத நேரத்தில் சொல்லத்தகாத இடத்திற் சொல்ல லாமா? என்று கேட்டே விடுகிறாள் உறங்கி விழித்த தோழி. இதனைக் கேட்ட அளவில் எழுப்ப வந்த மகளிரும் மனம் அமைதி பெறுகின்றனர். தணிவான குரலில், மென்மையான சொற்களில், மேன்மையான கருத்துகளை எடுத்து அவள் முன் வைக்கின்றனர்.

தேவர்கள் தொழுதலைக் கண்டு நாணி அருளாத தாமரை மலர்போன்ற திருவடிகளையுடைய சிவ பெருமான் தன்னை அன்புள்ளத்தோடு வணங்கும் அடியவர்க்கு எளிமையில் வந்து அருளுவான் என்ற பொருளில் 'விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும் தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்து ஈசன்' என்கின்றனர். அறிவு ஒளி மிக்க வனாய் ஞானாசிரியனாகத் திகழ்பவன் ஆதலின் சிவன் தேசன் எனப் பெற்றான். செம்மையே ஆய சிவபதம் அளிக்கும் செல்வனாய், சிவலோக நாதனாய் அவன் கொலு வீற்றிருக்கிறான் ஆதலின் அவன் சிவலோக னானான். எல்லையில்லாத புகழ் நிறைந்த—சைவர்கள் கோயில் என்று சொன்ன அளவிலேயே தன்னைக் குறிப்ப தாய் இலங்கும் சிதம்பரத்தில் ஈசனாய் விளங்குகின்றான். அத்தகைய திருச் சிற்றம்பலத்தில் உறைகின்ற சிவனார்க்கு நாம் யாவரும் அன்புடையவர்கள் அல்லவா? என்று எழுப்பவந்த பெண்கள், உறக்கத்திலிருந்து விழித்தெழுந்த பெண்ணிடம் அவளையும் தம்மோடு இணைத்துக் கொண்டு, அவள் சொன்னது போலவே, பாசம் பரஞ் சோதிக்கே உடையவள்' என்பதனை ஏற்றுக் கொள்ளு முகத்தான் நல்லுரை நவின்ற காலையில் அவளும் வந்த வர்களோடு கூடி.

**வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம் நின்பால்**
**தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி**

என்ற மணிவாசகரே திருச்சதகத்தில் கூறியிருப்பது போல, தேவர்களே தங்கள் வாழ்வு உயரத் தேவ தேவனாகிய சிவபெருமானைத் துதித்து நிற்கும்பொழுது, எளிமைக்கு இரங்கி அருள்வந்து ஆட்செய்யும் அப் பெருமான் நம் அன்பை ஏற்று அவன்தன் அடியாராகக் கொள்வர் என்பது இப்பாட்டால் அறியப் பெறுகின்றது. 'ஈசனார்க்கு அன்பர்யாம் ஏலோர் எம்பாவாய்' என முடியும் இத்திருப்பாடலில் கன்னியரின் கன்றிய உள்ளமும் சிவன்பால் ஒன்றிய சிந்தையும் புலப்படக் காணலாம்.

**பாசம் பரஞ்சோதிக்**
**கென்பாய் இராப்பகல் நாம்**
**பேசும்போ தெப்போதிப்**
**போதார் அமளிக்கே**
**நேசமும் வைத்தனையோ?**
**நேரிழையாய்! நேரிழையீர்!**
**சீசி! இவையுஞ்**
**சிலவோ? விளையாடி**
**ஏசும் இடமீதோ?**
**விண்ணோர்கள் ஏத்துதற்குக்**
**கூசும் மலர்ப்பாதந்**
**தந்தருள வந்தருளும்**
**தேசன் சிவலோகன்**
**தில்லைச்சிற் றம்பலத்துள்**
**ஈசனார்க் கன்பார்? யாம்**
**ஆரேலோர் எம்பாவாய்!**

## 3. முத்தன்ன வெண்ணகையாய்

முத்தன்ன வெண்ணகையாய்!
முன்வந் தெதிர்எழுந்தென்
அத்தன் ஆனந்தன்
அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்
வந்துன் கடைதிறவாய்!
பத்துடையீர்! ஈசன்
பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்
தாட்கொண்டாற் பொல்லாதோ?
எத்தோ?நின் அன்புடைமை
எல்லோம் அறியோமோ-
சித்தம் அழகியார்
பாடாரோ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும்
எமக்கேலோர் எம்பாவாய்!

இரண்டாம் திருப்பாட்டில் சிவபெருமான் பாசம் பரஞ்சோதிக்கென நேய மனத்தோடு வாழும் நேரிழை யாருக்கு, எளிவந்த பிரானாய் அருளும் மாண்பினை அழகுடன் அறிவுறுத்திய மணிவாசகப் பெருந்தகையார், இத்திருப்பாட்டில் அவ்வடியவராய் நேரிழையாரின் புன்மையைப் போக்கி, அவர்களை ஆட்கொள்ளும் அருஞ்சிறப்பினைப் புலப்படுத்துகின்றார். இப்பாடலின் தொடக்கமே 'முத்தன்ன வெண்ணகையாய்' என முன்னிலை மொழியில் — உறங்கி நிற்கும் மகளிரின் இன்முகத்தினையும். குளிர்ந்த நன்மொழிகளையும் குறிப்பிடும் போக்கில் 'முத்தன்ன வெண்ணகையாய்' என்று அமைகின்றது.

மகளிரின் பற்களின் வெண்மைக்கு முத்தின் வெண்மையினை உவமை காட்டுதல் மரபு. அவர்கள் முறுவலினையே முத்துடன் உவமித்து 'முத்துறழ் முறுவல்' என்பர் நக்கீரர். முத்து தமிழ்நாட்டின் சொத்து. கிறித்துநாதர் பிறப்பிற்கு முன்னிருந்தே தென்பாண்டி முத்து—கொற்கை முத்து உலகப் புகழ் பெற்று விளங்கியது. முத்து வாணிகத்தின்வழிப் பழந்தமிழர் பொருளும் புகழும் ஈட்டினர். தென்பாண்டி நாட்டாராம் மணிவாசகப் பெருந்தகையாருக்கு முத்தின்பால் நினைவு சென்று, நேயத்தை நிமலன்பால் வைத்த நேரிழையார் பற்களின் வெண்மையினையும் வரிசையினையும் நினைந்தது. எனவே 'முத்தன்ன வெண்ணகையாய்' என்று முருகியற் சுவையுடன் தொடங்கினார்.

இத்தகைய பெண்கள் முன்னைய நாட்களிலெல்லாம் விடியலிலேயே துயில் நீங்கி எழுந்து, வீதியில் மற்றப் பெண்களை எதிர்நோக்கி வந்து 'அத்தன், ஆனந்தன், அமுதன்' என்று 'அள்ளூறித்தித்திக்கப் பேசுவது' வழக்கம். ஆனால் அப்பெண்கள் இன்று வழக்கம் போல்படுக்கையை விட்டு எழவில்லை: வீதிவழியே தங்களை அழைக்க வரும் பெண்களை வந்து எதிர்கொள்ளவில்லை. எனவேதான் இவற்றிற்கெல்லாம் காரணம் வினவும் போக்கில் அவர்களுடைய முன்னாட்செயல்களை நினைவு கூர்கிறார்கள். வைகறையில் வழக்கமாகத் துயில் நீக்கி எழுந்து, தங்களைத் தூய்மை செய்து கொண்டு, திருவீதியிற் சென்று தங்களை எழுப்பவரும் கன்னியரைக் கனிந்த முறுவலுடன் எதிர்கொள்வது இவர்கள் வழக்கம் என்பது தெரிய வருகின்றது. இக் கன்னியர் அருளுருவான ஆண்டவனை 'அத்தன். ஆனந்தன், அமுதன்' என்பராம். இம்மூன்று சொற்களையும் ஆழ்ந்து நோக்குதல் வேண்டும்.

பெண்கள் திருமணத்திற்கு முன் தந்தையின் அரவணைப்பிலும், திருமணத்திற்குப் பின்னர்க் கணவனின்

பாதுகாப்பிலும், வயது முதிர்ந்து பேரிளம் பெண்ணாய்த் திகழ்கின்ற நிலையில் இறைவனின் அருளாட்சி நோக்கியும் விளங்குகின்றனர் என்பது தெளிவு. 'அத்தன்' என்றால் 'தந்தை'. 'அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்' என்பது திருநாவுக்கரசர் திருமொழி. 'அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே' என்பது சுந்தரர் திருப்பாட்டுத் தொடர். எனவே கன்னிப் பருவத்தில் பாசத்தோடும் பண்போடும் வளர்க்கும் தந்தையாக இறைவன் திகழ்கிறான். 'ஆனந்தன்' என்றால் மகிழ்ச்சியைத் தருபவன் என்றாகும். அதுவே காதலன் நிலை. அந்நிலையில் நாயகன் — நாயகி பாவ நிலையிலும் இறைவன் விளங்குகின்றான். மூன்றாவது நிலை 'அமுதன்' என்பதாகும். அமுதாக அனைத்துயிர்க்கும் விளங்குபவன் ஈசனாவான். 'எந்தை ஈசன் எம்பெருமான்' என்று பாடுவார் திருஞானசம்பந்தர். எவ்வுயிர்க்குத் தலைவனாய், எவ்வுயிரினையும் காப்பவனாய், காத்து அருள் செய்பவனாய் ஈசன் திகழ்கின்றான்.

எனவே கன்னியர் அச்சிவ பரம்பொருளை 'அத்தன், ஆனந்தன், அமுதன்' என்றனர். தந்தையாய், இன்புருவினனாய், சாவா மருந்தினனாய் விளங்கும் சிவனை அனுபவித்து அனுபவித்து வாய் தித்திக்கத் தித்திக்கப் பேசுவர் கன்னியர். 'அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்' என்பது மணிவாசகம். இத்தகு பெண்களே! நீங்கள் வந்து உங்கள் தலைவாசலைச் சற்றுத் திறவுங்கள் என்று வீதியிலே நிற்கும் பெண்கள் கேட்டுக் கொள்கிறார்கள். வீதியில் வந்து நின்ற கன்னியர் இவ்வாறு வீட்டினுள்ளிருக்கும் கன்னியரை விளித்த அளவில், அவர்களும் தங்கள் தங்கள் வாயிற்கதவுகளைத் திறந்து வெளிப் போந்து, வாயிற்புறத்து வந்து நிற்கும் கன்னியரை நோக்கி ஆர்வமுடன் ''அன்புடையீர், ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்! புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ'' எனக் கேட்கின்றனர்.

''ஈசன்பால் பற்றுடையவர்களே! வழிவழி அவனிடத்து அடிமைத்திறம் பூண்டு அமைந்து வாழும் பெண்டிர்களே! கடவுளிடத்து மாறாத — நிலைத்த பண்பினையுடையவர்களே! புதுவதாக அடிமை பூண்ட எங்களிடத்துள்ள கீழ்மைக் குணங்களை அகற்றி, எங்களையும் ஏற்று ஆண்டு கொள்ளுதல் வழுவாகுமா?'' என்று வெளியில் வந்த கன்னியர் இன்முகத்தோடு நயமுடன் கேட்கின்றனர். இவை கேட்டலும், எழுப்ப வந்த கன்னியர்கள் ''உன் அன்புடைமை வஞ்சகமாகுமோ? ஆகாதன்றோ! அதனை நாங்கள் எல்லோரும் நன்கறிவோம், நமது சிவபெருமானைத் தூய மனமுடையார் அனைவரும் இவ்வைகறைப் போதில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடி உருகுவது இயல்பல்லவா? எங்களிடத்தில் நீங்கள் மேலும் மேலும் பலபடியாக அடுக்கிக் கூறவும் வேண்டுமோ? வேண்டுவதில்லை'' என்றார்கள்.

வீட்டின் உள்ளிருந்து புறம் போந்த கன்னியர்தம் பேச்சினை முதற்கண் நோக்குதல் வேண்டும். அதற்கும் மேலாக, அவர்களுக்கு மறுமொழியாக வெளியே இருந்து பேசுபவர்கள் பேச்சினைச் சற்று ஆழ்ந்து நோக்க வேண்டும். 'எத்தோ நின் அன்புடைமை! எல்லாம் அறியோமோ' சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை! எமக்கு இத்தனையும் வேண்டுமோ' எனும் மொழிகளை மாணிக்க அடிகள் எனலாம். 'சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை' எனும் மணிவாசகத்தோடு 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒரு பொழுதும் இருந்தறியேன்' என்னும் திருநாவுக்கரசரின் திருவதிகை வீரட்டானப் பதிகத் தொடர்களை இயைபுபடுத்திக் காணும்போது கழிபேருவகை ஏற்படுகின்றது. 'பத்து' என்று இப்பாட்டில் வரும் சொல்லினைப் 'பற்று' எனக் கொள்ளாது, 'பத்து' என்றே கொண்டால் ''பத்துகொலாம் அடியார் செய்கை தானே'' எனும் அப்பர் பெருமான் அருண்மொழிவழி உணரப்படுவது

பிறிதொரு கருத்தாகும். அடியவர்களது பத்துச் செயல்கள் வெண்ணீறு, உருத்திராக்கம் அணிதல், ஆசாரியனுக்கு வழிபாடாற்றுதல், சிவனைப் பாடுதல், சிவன் திருப் பெயர்களை ஓதுதல், சிவனுக்கு வழிபாடு செய்தல், சிவ தருமங்கள் ஆற்றுதல், சிவ கதை கேட்டல், சிவால யத்தைப் பாதுகாத்தல், தொண்டர்களிடத்தில்தான் உண்ணுதல், தொண்டருக்குத் தொண்டராயிருத்தல் முதலியன என்பர்.

எனவே, மனம் தூயராய் இருப்பவர் சிவ பரம் பொருளை மனத்தினால் நினைத்து, வாயினால் பாடிப் பரவுவர் என்பது 'சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை' என்னும் முத்தான தொடரால் சத்தாகப் பெற்ற வாறு காண்க.

**முத்தன்ன வெண்ணகையாய்!**
**முன்வந் தெதிர்எழுந்தென்**
**அத்தன் ஆனந்தன்**
**அமுதன்என் றள்ளூறித்**
**தித்திக்கப் பேசுவாய்**
**வந்துன் கடைதிறவாய்!**
**பத்துடையீர்! ஈசன்**
**பழவடியீர்! பாங்குடையீர்!**
**புத்தடியோம் புன்மைதீர்த்**
**தாட்கொண்டாற் பொல்லாதோ?**
**எத்தோ?நின் அன்புடைமை**
**எல்லோம் அறியோமோ?**
**சித்தம் அழகியார்**
**பாடாரோ? நம்சிவனை**
**இத்தனையும் வேண்டும்**
**எமக்கேலோர் எம்பாவாய்!**

## 4. ஒண்ணித்தில நகையாய்

ஒண்ணித் திலநகையாய்!
இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார்
எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா
சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே
காலத்தைப் போக்காதே!
விண்ணுக் கொருமருந்தை
வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப்
பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக
யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில்
துயிலேலோர் எம்பாவாய்!

'முத்தன்ன வெண்ணகையாய்' என்று தொடங்கும் மூன்றாவது திருப்பாட்டில் சிவபெருமானது பழவடியவராகிய கன்னியர், புத்தடியார்களாகிய கன்னியரது புன்மை தீர்த்தாட்கொள்ளும் சிறப்பினை உணர்த்திய மாணிக்கவாசகப் பெருமான், 'ஒண் நித்தில நகையாய்' எனத் தொடங்கும் இத்திருப்பாட்டில் வாழ்நாள் வீழ்நாள் ஆகாது, மருந்தாகவும், வைப்பு நிதியாகவும் எல்லார்க்கும் இனியனாகவும் விளங்கும் சிவபிரானைப் பாடிப் பரவி உய்யுநெறி எய்துமின் என அறிவுறுத்தும் போக்கில் அமைந்திருக்கின்றது.

இத்திருப்பாடலும் உறங்கிக் கொண்டிருக்கும் கன்னியரை உளங்கொள மகிழ்வித்துப் புகழ்ந்து பேசித் தொடங்கும் போக்கிலேயே அமைந்திருக்கக் காணலாம். 'ஒளிவிடுகின்ற முத்தினையொத்த பற்களையுடைய பெண்ணே' என்பதுதான் 'ஒள் நித்தில நகையாய்' என விளி கொண்டுள்ளது.

இவ்வாறு தூங்கும் தோழியரைத் துயிலெழுப்பவந்த கன்னியர் அவர்களை முன்னிலைப்படுத்தித் தாம் கூறவந்த செய்தியினை உரைக்க முற்பட்டனர். ''இன்னும் பொழுது விடியவில்லையா?'' என்றதை அடுத்து சுடுசொல் வெளியில் வாயிற்படியில் வந்து நிற்கும் கன்னியர் வாயினின்றும் பிறக்கின்றது. 'இன்னம் புலர்ந்தின்றோ?' இவ் ஏச்சுரை கேட்ட அளவில், படுக்கையிலிருந்து எழவும் மனம் இல்லாமல் தூங்கவும் ஒல்லாமல் கிடந்த கன்னியர், அழகுடைய கிளி போன்று கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் கன்னியர் எல்லாரும் வந்து சேர்ந்து விட்டனரா? எனக் கேட்கின்றனர். ''வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ?'' என்பது மணிவாசகம்.

சிறந்த சொற்களைச் சிறந்த இடத்திற்பெய்து, சிறந்த முறையில் அடுக்குவது சிறந்த கவிதை (Putting best words in the best place in the best order) என்பர் மேனாட்டறிஞர். அக்கூற்றிற்கு எடுத்துக்காட்டாக ''வண்ணக்கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?'' எனும் தொடர் அமைந்துள்ளது. 'ஒண் நித்தில நகையாய்' என்று பாடல் தொடங்கி, 'வண்ணக்கிளி மொழியார்' என்று மேலும் அடுக்கப் பெறும்பொழுது சொல்லாட்சிச் சிறப்பிற் சொக்கி நிற்க வைக்கிறது. மேலும் 'இன்னம் புலர்ந்தின்றோ?' என்ற தொடரும் உன்னி நோக்க வேண்டியுளது. 'இன்னம்' என்ற சொல் 'இன்னமும்' என்ற கருத்தில் வந்தது. இன்னமும் என்ற சொல்லில் இடம்பெறும் உம்மை—இன்னமும் கூடவா நீவிர் எழுந்திருக்கவில்லை என்பதைச் சுட்டி நின்றது.

பொழுது புலர்ந்ததும் தெரியாமல் இவ்வாறு உறங்குதலும் ஒல்லுமோ எனக் கேள்வி கேட்பார் போலவும், அக்கேள்வியிலேயே தங்கள் சினக் குறிப்பை, ஏச்சுரையினை எடுத்துரைப்பார் போலவும் அமைந்துள்ள திறம் வியக்கத்தக்கது.

மேலும் எல்லாரும் என்பதனால் முன்னரே தோழிகள் இது பற்றிக் கலந்து பேசி இத்துணை பேர் நாளை வைகறைப் போதில் எழுந்து நீராட வர வேண்டும் என்று ஒரு எண்ணிக்கை குறித்த செய்தி புலனாகின்றது. உறக்கத்திலிருந்தும் உடனே விழிக்காமல், விழிக்க மனமில்லாமல், எழவும் முடியாமல், பொய்யுறக்கங்கொண்டு இவ்வினாவினை உள்ளே இருப்பவள் கேட்கிறாளேயன்றி, விடை வேண்டும் வேணவாக் கொண்டு கேட்கவில்லை என்பது எழுப்ப வந்திருக்கும் மகளிருக்கு எட்டுகின்றது.

ஏதோ வினா விடுத்துக் காலத்தைக் கழிக்க முற்படுகிறாள் இவள் என்பதனை வீட்டிற்கு வெளியில் வீதியில் உள்ளவர்கள் நினைத்து ஒரு முடிவுக்கு வந்து விடுகிறார்கள். எனவே உடனே அவர்கள் வந்திருக்கும் எல்லாரையும் கணக்கெடுத்து உள்ளவாறு பின்னர்த் தெரிவிப்போம். நாங்கள் அவ்வாறு அறிவிக்கும் வரையிலும் கண்களை மூடித் திருவனந்தல் கொண்டு காலத்தை வறிதே கழிக்காதே என்று கழறினர். ''எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம். அவ்வளவும் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே'' என்று கடிந்துரைக்கின்றனர். தவமாக நினைக்கவேண்டிய காலம் அவமாகப் போகலாமா? இம்மார்கழி நீராட்டினைச் சங்க இலக்கியம் 'தைந்நீராட்டு' என்றது. கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை, 'தைநீராடிய தவம் தலைப்படுவாயோ பாவாய்'' என்று பேசிற்று.

சிவ சிந்தனையோடு இருக்க வேண்டிய வேளையில் தூங்கிக் கழிப்பது எற்றுக்கு என ஏசுகின்றனர் அழைக்க

வந்திருக்கும் கன்னியர். உள்ளிருப்பவள் அவமே நேரம் கழிக்கலாம். தாங்கள் அவ்வாறு அவளை விட்டு விடுதல் தகுமா? தவமாய சிவத்தை நினைத்தல் வேண்டும் அன்றோ? ''செம்மையே ஆய சிவபதம் அருளிய செல்வமே சிவபெருமானே'' என்றன்றோ ஆளுடைய அரசு புகன்று, ''இம்மையே உனைச் சிக்கெனப் பிடித்தேன்; எங்கெழுந் தருளுவதினியே'' என்றார். எனவே கன்னியர் விண்ணு லகத்துத் தேவர்க்கெல்லாம் ஒரு மருந்து போல் விளங்குகின்றவனை, மறைகளுக்கெல்லாம் மேலான பொருளாய் விளங்குகின்றவனை, காண்பவர் கண்களுக் கெல்லாம் இனிமை பயக்கின்றவனை, சிவபெருமானைப் பாடிக் கசிந்து உள்ளம் நெக்கு நெக்காய் உருகி நிற்க வேண்டும்—அதுவே இப்போது செய்யத்தக்க செயல் என்கின்றனர் புறம் நிற்கின்ற கன்னியர்.

''விண்ணுக்கொரு மருந்தை, வேத விழுப்பொருளை, கண்ணுக்கினியானை'' என்று அவர்கள் சிவ பரம் பொருளை வழுத்தும் அழகை நோக்க வேண்டும். ''மருந்தவன் வானவர் தானவர்க்கும்'' என்று திருவிடை மருதூருறை ஈசனைத் திருஞானசம்பந்தர் கிளத்திக் கூறுவர். பிறவி என்னும் பெரு நோய்க்கு ஒப்பற்ற உயர் மருந்து இறைவனே ஆவன்.'' பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேராதார்'' என்பார் திருவள்ளுவர். பிறவி எனும் பிணிக்கு மருந்து இறைவனே.

அடுத்து, ''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியன்'' சிவ பரம்பொருளேயன்றோ? அடுத்து அவ் ஆண்டவன் கண்ணுக்கினியானாகக் காட்சி தருகின்றான். ''கண்டார் காதலிக்கும் கணநாதன் என் காளத்தியான்'' என்று சுந்தரரும் திருக்காளத்தியப்பரைப் போற்றுவர். ''அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்'' என்பார் திருமூலர். சிவபெருமானை அகத்தில் நிறுத்தி யன்றோ காணுதல் வேண்டும். அவனைப் பாட

வேண்டும். அவனை நினைந்து கசிந்து உள்ளம் உருக வேண்டும்.

இவ்வாறு பேசி வந்த கன்னியர் உடனே சொன்னார்கள்: முன்னர் நாங்கள் உன்னிடத்தில் சொன்னபடி இங்கு வந்திருப்பவரைக் கணக்கெண்ணிச் சொல்ல மாட்டோம். நீயே படுக்கையிலிருந்து எழுந்து வந்து போந்துள்ள யாவரையும் கணக்கிட்டுக் கொண்டு, குறித்த எண்ணிக்கையுடைய கன்னியர் வாராமலிருந்தால், மீண்டும் சென்று உறங்குவாயாக என்றனர். ஈண்டு ''ஒல்லைநீபோதா யுனக்கென்ன வேறுடையை, எல்லாரும், போந்தாரோ, போந்தார்போந் தெண்ணிக் கொள்'' என்னும் திருப்பாவையின் அடிகளையும் ஒப்பிட்டுக் காணலாம்.

**ஒண்ணித் திலநகையாய்!**
**இன்னம் புலர்ந்தின்றோ?**
**வண்ணக் கிளிமொழியார்**
**எல்லாரும் வந்தாரோ?**
**எண்ணிக்கொ டுள்ளவா**
**சொல்லுகோம் அவ்வளவும்**
**கண்ணைத் துயின்றவமே**
**காலத்தைப் போக்காதே!**
**விண்ணுக் கொருமருந்தை**
**வேத விழுப்பொருளைக்**
**கண்ணுக் கினியானைப்**
**பாடிக் கசிந்துள்ளம்**
**உள்நெக்கு நின்றுருக**
**யாம்மாட்டோம் நீயேவந்து**
**எண்ணிக் குறையில்**
**துயிலேலோர் எம்பாவாய்!**

## 5. மாலறியா நான்முகனும் காணா மலை

மாலறியா நான்முகனும்
காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள
பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப்
படிறீ கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே
பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட்
கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச்
சிவனே! சிவனே! என்(று)
ஓலம் இடினும்
உணராய் உணராய்காண்!
ஏலக் குழலி
பரிசேலோர் எம்பாவாய்!

'ஒண்நித்தில நகையாய்'' என்னும் சென்ற பாட்டில் வீழ்நாள் படாது வாழ்நாள் முழுதும் சிவனை முழுதும் மறவாத சிந்தையராய் வாழ்ந்து 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' அவனைக் கண்ணினிக்கக் கண்டு, வாயூறப் பாடி, மெய்யூற நெகிழ்ந்து நிற்கவேண்டும் என்று அறிவுறுத்திய மணிவாசக அடிகளார், இப்பாடலில் திருமாலாலும் நான்முகனாலும் காண முடியாத அவ் அண்ணாமலையான் அன்பால் நினைந்து எளிமையில் இணைந்து நெஞ்சு நெக்குருகி நிற்பவர்க்குத் தானே வந்து தலையளி செய்து ஆட்கொண்டருளுவான் என்று சாற்றுகின்றார்.

மயிர்ச்சாந்தினை அணிந்த கருத்த கூந்தலையுடைய பெண்ணே என்று விளித்துக் கன்னியர், இன்னும் எழுந்து வாராத நிலையில் உள்ள கன்னியரோடு உரையாடநிற்கும் போக்கில் இப்பாட்டு அமைந்துள்ளது.

கூந்தலுக்கு அழகு அதன் நீளம், கருமை நிறம், அதன் மணல் வார்ந்தன்ன நெய்ப்பு நிலை, மணம் வரும் போக்கு முதலியனவாம். நறுமணமும் கருமையும் கொண்டு மயிர்ச் சாந்து பூசப்பெற்று அக்கன்னியரின் கூந்தல் திகழ்கிறது. ஆனால் அவர்களுக்கு இன்னும் விழிப்பு வரவில்லை, எனவே அவர்களுக்குச் சிவனின் அருமை பெருமைகளை உணர்த்தும் நோக்கில் இப்பாடல் அமைந்துள்ளது.

ஒருமுறை ஒரு போட்டி ஏற்பட்டது, சிவனுடைய திருவடியையும் திருமுடியையும் காண முடியுமா? என்று. போட்டியில் ஈடுபட்டவர் இருவர். அவ்விருவரும் எளியவர்கள் அல்லர். மும்மூர்த்திகளில் இருவர். ஒருவர் படைத்தல் தொழில் செய்யும் பிரம்மன்; பிறிதொருவர் காத்தல் தொழில் செய்யும் திருமால். திருமால் பன்றி வடிவந்தாங்கி நிலத்தைக் கீண்டி அகழ்ந்து சென்று சிவனுடைய திருவடி கிடைக்குமா? என்று பார்த்தார்; கிடைக்கவில்லை. நான்முகனோ அன்னப்பறவை வடிவு கொண்டு பறந்து சென்று சிவனது திருமுடியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் முயற்சியிலும் வெற்றி வாய்த்தெய்தவில்லை. சிவபெருமான் அண்ணாமலையாக — சோதிப் பிழம்பாக நின்றார். மலையாக வெளிப்பட்டு நின்றும் இருவரும் அறிந்திலர். இது நிகழ்ந்தது திருவண்ணாமலை என்பர். அடிகள் திருவெம்பாவை பாடியதும் திருவண்ணாமலைத் திருத்தலமேயாதலால் அடிமுடி அறியவொண்ணாத ஆண்டவன் சோதிப் பிழம் பாய்க் காட்சி தரும் திருவண்ணாமலை பற்றிய புராணக் குறிப்பொன்றனை ஈண்டுப் பொருத்தமுறப் புகன்றன ராதல் வேண்டும். இதனையே ''மாலறியா நான்முகனும் காணா மலை'' என்றார் மணிவாசகர்.

''இத்தகைய அரியவனும் பெரியவனுமாய் உள்ள சிவ பெருமானை நாம் எல்லோரும் அறியும் ஆற்றல் உடையோம் என்று உண்மையாகப் பொய்யுரைகளையே சுரக்கின்ற பாலெனவும், மலையினின்றும் கிடைக்கின்ற தேனெனவும் போல இனிக்க இனிக்கப் பேசுகின்ற வாயினையுடைய வஞ்சகி! நின்னுடைய வாயிற் கதவினைத் திறப்பாயாக'' என்று நீராடக் கூட்டிப் போக வந்திருந்த கன்னியர் பொய்யுறங்கும் கன்னியரை விளித்துக் கூறினர். ''நாம் போலறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும் பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்'' சற்றுக் கூடுதலான ஏச்சுரைதான். ஏனெனில், 'ஏலக் குழலி' என்று புகழ்ந்து விளித்தவர்கள் இப்போது 'வஞ்சகி' என முத்தாய்ப்பு வைக்கின்றனர். அறிய மாட்டாததோர் அருமைப் பொருள் ஒன்றனை அறிந்தேன் என்று அடக்கமின்றி இனிக்கப் பேசும் திறம் அவள் திறமாதலின் அவளை படிறீ — வஞ்சகீ என்று அழைக்க வைத்தது. படிற்றொழுக்கம் வஞ்சகவொழுக்கம் என்று சிலப்பதிகாரம் பேசும். மயக்கவுணர்வு உடையவர்கள் சிவனை அறியமாட்டார்கள். மனத்தை ஒருமுகப் படுத்தாமற் போனால் — சித்தத்தைச் சிவன்பாலே வைக்காமற் போனால் அவன் எளிதில் வயப்படுபவன் அல்லன். மலையாக அவன் வெளிப்பட்டும் திருமாலும் நான்முகனுமே அறிந்து கொள்ள முடியாமற் போயிற் றென்றால் மற்றையோர் முயற்சிகள் எம்மாத்திரம்? இதனையே சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுளொன்று ''குறைவிலா அளவினாலும் கூறொனாதாகி நின்ற இறைவனார் கமலபாதம்'' என்று குறிப்பிடுகின்றது. அளக்கலாகாத பொருள் ஆண்டவன் ஆதலின் அவனுக்கு ஒப்புமை கூற ஓர் அளக்கலாகாத பொருளையே மணிவாசகர் எடுத்துக் கொண்டார் எனலாம். ''அளக்கல் ஆகா அளவும் பொருளும் துளக்கல் ஆகா நிலையும் தோற்றமும், வறப்பினும் வளம்தரும் வண்மையும்

மலைக்கே'' என்று மலையினது மாட்சியினை நன்னூல் தந்த பவணந்தி முனிவர் பகருவர். வஞ்சகர் பேச்சு பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலிருக்கும். பால் சுவை யுடையது; தேன் அதனினும் சுவையுடையது. ''பாலொடு தேன் கலந்தற்றே பனிமொழி வாலெயிறு ஊறிய நீர்'' என்பார் வள்ளுவப் பெருந்தகை. 'பாலூறுதேன்வாய்ப் படிறீ' என்பது அவள் வாயில் பாலும் தேனும் ஊறுவது போலும் பொய்யே மெய்போலப் பேசப்படும் என்றார். உள்ளிருந்து உறங்கும் கன்னியர் எழுந்து வெளியே வாராமையின், வெளியில் — வாயிற்படிக்கு வெளியில் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்த கன்னியர் சிவபெருமான் திருப்பெயரை ஓதத் தொடங்கினர். மண்ணில் வாழ்வாரும், விண்ணில் வாழும் தேவர்களும், பாதாள லோகத்தில் வாழ்வாரும் மற்றையோரும் அறிதற் கியலாத தன்மையுடையவனது வடிவத்தையும், நம் போன்ற உயிர்களை ஆட்கொண்டருளிக் குற்றங்களைப் போக்கும் அருட்பண்புகளையும் புகழ்ந்து பாடி, சிவனே சிவனே என்று ஓலமிட்டுக் கதறி அபயம் அபயம் என அவனருளைப் பரவி நின்றாலும் நீ அவன் பெருமையை— அருமையை—சீர்மையை—எளிமையை— அருளுடைமையை அறியப் போவதில்லை. நீ உறக்கத்தினின்றும் இப்பொழுது விழிப்பதாயும் இல்லை. இதுதான் உன்னுடைய இயல் பானால் நாங்கள் என்ன செய்யக் கடவோம் என்று தங்களையே நொந்து கொண்டனர்.

''ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்''. இஃது இறைவனின் அருமையைச் சுட்டிய தொடராகும். ''கோலமும் நம்மையாட்கொண்டருளிக் கோதாட்டும் சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய் உணராய் காண்'' — இத்தொடர்கள் அடிய வர்கள்பால் அம்பலத்தாடும் அரசாம் சிவன் காட்டும் எளிமையைச் சுட்டி நிற்கின்றன.

'சிவனே சிவனே' என்று இரண்டு முறை அடுக்கி வந்தது அவனே அடைக்கலம் தரவல்லவன் எனும் குறிப்பினது. 'உணராய் உணராய்' என இருமுறை அடுக்கி வந்ததும் இன்னும் கதவு திறக்காமல் உள்ளிருந்து உறங்கிக் கிடக்கும் கன்னியரின் அறியாமையினை அறிவுறுத்தியவாறு. 'பரிசு' என்ற சொல் கழிவிரக்கப் பொருளில் வந்தது. உன் இயல்பு இதுவாயின் நாங்கள் என்ன செய்ய வல்லேம் என்னும் ஆற்றாமைக் குறிப்பினை அறிவுறுத்தியவாறாகும்.

**மாலறியா நான்முகனும்**
**காணா மலையினைநாம்**
**போலறிவோம் என்றுள்ள**
**பொக்கங்க ளேபேசும்**
**பாலூறு தேன்வாய்ப்**
**படிறீ கடைதிறவாய்!**
**ஞாலமே விண்ணே**
**பிறவே அறிவரியான்**
**கோலமும் நம்மைஆட்**
**கொண்டருளிக் கோதாட்டுஞ்**
**சீலமும் பாடிச்**
**சிவனே! சிவனே! என்(று)**
**ஓலம் இடினும்**
**உணராய் உணராய்காண்!**
**ஏலக் குழலி**
**பரிசேலோர் எம்பாவாய்!**

# 6. மானே

மானே ! நீ நென்னலை
நாளைவந் துங்களை
நானே எழுப்புவன்
என்றலும் நாணாமே
போன திசைபகராய்
இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே
பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத்
தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி
வந்தோர்க்குன் வாய்திறவாய்!
ஊனே உருகாய்
உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப்
பாடேலோர் எம்பாவாய்!

முந்தைய திருப்பாட்டில் சிவபெருமான் உலக உயிர்களை ஆட்கொள்ளும் அருளொழுக்கம் நிரம்ப வுடையவர் என அறிவுறுத்திய திருவாதவூரர், இத்திருப் பாட்டில் உலகில் மயலில் மயங்கிக் கிடக்கும் உயிர்கட் கெல்லாம் சிவ பரம்பொருள் தாமே போந்து தலையளித்து நிற்பதை உணர்த்துகின்றார்.

'மானையொத்த மருட்சியையுடைய பார்வை கொண்ட கண்களையுடைய பெண்ணே' என விளிக்கும் வகையில் 'மானே' என இப்பாட்டு தொடங்குகின்றது. இங்கும் உறங்குகின்ற பெண்ணை 'மானே' என அவள் மருட்சி நிறைந்த கண்களைப் புகழ்வது, பின்னர் அவளை

ஏசப் போவதற்கு முன், முன்னிலைப்படுத்துவதாய் அமைகிறது. உள்ளே போதார் அமளியில் உறங்கும் பெண் நேற்று மற்றவர்களை நோக்கி, ''நாளை நான் உங்கள் எல்லோரையும் வந்து எழுப்புவேன்'' என்று தானாகவே முன்வந்து சொன்னாள். ஆனால் அப்பேச்சு காற்றிலே கரைந்து போயிற்று; எத்திசையிலோ ஓடி ஒளிந்து போனது. அது எந்தத் திசைக்குப் பரந்தோடி விட்டது என்பதனை வெட்கப்படாமற் சொல் என்றார்கள். ''நீ நென்னலை நாளை வந்து உங்களை நானே எழுப்புவன் என்றலும் நாணாமே போன திசை பகராய்''. இவ்வடிகளின் கருத்தாழம் காணத்தக்கது. இன்று இப்பொழுது உறங்கிக் கொண்டிருப்பவள் நேற்றுதான் தானே வலிய வந்து சொன்னாள். என்ன சொன்னாள்? நாளைக்கு நானே வந்து உங்களைத் துயிலிலிருந்து எழுப்புவேன் என்றாள். நேற்றுப் பேசிய பேச்சு நேற்றோடே போய் விட்டதே! நானே வந்து உங்களை எழுப்புவேன் என்றாள். வலிய அவளே வந்து சொன்ன வாய் வார்த்தைகள் காற்றோடு கலந்து விட்டனவே! நானே — என்பதிலுள்ள 'ஏ' — ஏகாரம் எனப்படும். அதனைப் பிரிநிலை ஏகாரம் என இலக்கண நூலார் உரைப்பர். வேறு யாரும் வந்து உங்களை எழுப்பப் போவதில்லை. நானே வந்து எழுப்பப் போகிறேன் என்றாள். அவள் பேச்சுக்கு அவளே இப்போது நாணித் தலைகுனிய வேண்டும். அவள் பேச்சு எந்தத் திசையில் போய் ஒளிந்ததோ தெரியவில்லை என்பது மட்டுமல்ல. மற்றவர்களைத் தானே வந்து எழுப்பு வதாகச் சொன்னவள், இப்பொழுது மற்றவர்கள் வந்து தன்னை எழுப்பும் நிலையில் உள்ளாள். அது மட்டுமல்ல. 'இன்னம் புலர்ந்தின்றோ' என்று வந்த பெண்கள் கேட் கின்றார்கள். ''எல்லோருக்கும் பொழுது விடிந்து விட்டது; உனக்கு மட்டும் இன்னும் பொழுது விடிய வில்லையா?'' என்னும் குறிப்பினையும் உட்கொண்ட தொடராக விளங்குகின்றது எழுப்ப வந்த பெண்களின்

பேச்சு. தங்களைத் தான் அவள் சொன்னபடி எழுப்ப வில்லை; அவளாவது பிறர் எழுப்பாமல், தன் கடமையாற்ற வைகறையில் எழுந்திருந்திருக்கலாமே என்பார் 'இன்னம் புலர்ந்தின்றோ' என்றார்.

நாங்கள் வணங்கப் புகுகின்ற சிவன் எத்தகையவன்? வானத்திலுள்ளவர்கள், நிலத்தில் வாழ்கிறவர்கள், பிற உலகங்களில் உயிர்க்கின்றவர்கள் என்ற இம்முத்திரத் தாரும் அறிதற்கு அரியவன் அவன், வானத்தில் வாழ்பவர் தேவர்; நிலவுலகில் வாழ்பவர்களில் அந்தணர் உயர்ந்தவர்; பிறவுயிர்களில் செம்மை சான்றது பசுவினம். எனவே தான் சீகாழிப் பிள்ளையாராம் திருஞானசம்பந்தப் பெருமானும் ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம். உலகவர் இன்புறத் தேவர்களை வாழ்த்த வேண்டியது முறையாகும். திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் ''அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்க என்று இம்மெய்ம்மொழிப் பயன் உலகம் இன்புற'' எனக் குறிப்பிட்டிருப்பது கண்டு உணரலாம். திருமூலரும் முதற்கண் இறைவனையும், அவரை அடுத்துப் பசுவினை யும், இறுதியில் மாந்தரையும் சொல்லியுள்ளதை நினைவு கூர வேண்டும்.

**''யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பகவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே''**

என்னும் திருமந்திரப்பாட்டான் இறைவன், பசு, உலக உயிர்கள் தொடர்பும் செயலும் கிளத்தப்பட்டன.

இவ்வாறு வானவர்களாலும், மானிடர்களாலும், பிறவுயிரினங்களாலும் அறிவதற்கு அரும்பொருளாய், அரிய பொருளாய் விளங்குபவனுமாகிய சிவபெருமான்

தானாகவே என்னிடத்து வந்து, தன் தலையளியை — தனிக்கருணையைச் செலுத்தி என்னை ஆட்கொண்டருளினான் என்று கன்னியர் குறிப்பிடுகின்றனர், ''கும்பிடுவான் யாரென்று தேடுகின்றான் கோவிந்தன்'' என்று திவ்யப் பிரபந்தமும் முழங்கும். உலக உயிர்களை உய்விக்கும் பொருட்டுத் தானே வந்து தலையளி செய்வது. சிவபெருமானது தடங்கருணைப் பெருந்திறத்தினையும், அடியவர்க்கருள எளியனாய் வந்து ஆட்கொள்ளும் அருட்டிறத்தினையும் பகரும். அவனுடைய ஒப்பற்ற பெருமைக்குரிய நீண்ட திருவடிகளைப் பாடிவந்துள்ள கன்னியர்கள், உள்ளே இருக்கும் கன்னியை நோக்கி ''சிவன் திருவடிகளைப் பாடி வந்த எங்கட்கு உன்னுடைய வீட்டு வாயிற் கதவைத் திறக்கவில்லை. உன்னுடைய உடம்பு இறைவனுக்காக உருகி நிற்கும் மெய்ப்பாட்டினையும் பெறவில்லை, உனக்கே இந்த நிலை பொருந்துவதாகும். எனவே இந்நிலையினை உடனே விட்டொழித்து, எங்களுக்கும் மற்றையோர்க்கும், ஏன் எல்லோருக்குமே தலைவனாயிருக்கின்ற சிவபெருமானைப் பாடுவாயாக'' என்று கேட்டுக் கொள்கிறார்கள்,

''வான் வார் கழல் பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்! ஊனே உருகாய் உனக்கே உறும். எமக்கும் ஏனோர்க்கும் தம் கோனைப் பாடல்'' (தகும்) என்றார்.

இங்குத் ''தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும் வான்வார் கழல்'' என்ற அடிகள் நம்பியாரூரர் வரலாற்றை நினைவுபடுத்தும். புத்தூர்ப் பெண்ணை மணம் முடிக்கவிருந்த சுந்தரரை வெண்ணெய் நல்லூர்ப்பித்தன் கிழவேடந்தாங்கி, வலியவந்து ஆட்கொண்ட திறத்தினைப் பெரியபுராணம் கொண்டு அறியலாம். ''மன்றுளீர் செயலோ வந்து வலிய ஆட்கொண்டதென்றார்''. பித்தன் என்று தன்னை இகழ்ந்த நம்பியாரூரரையே ''பித்தா பிறைசூடி பெருமானே

அருளாளா'' என்று பாடும்படிச் செய்தவர் சிவனே அன்றோ! எனவே தானே வந்து தலையளி செய்து ஆட்கொள்ளுதல் என்பது சிவபெருமானின் எல்லையற்ற கருணைப்பெருக்கிற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

**மானே ! நீ நென்னலை**
**நாளைவந் துங்களை**
**நானே எழுப்புவன்**
**என்றலும் நாணாமே**
**போன திசைபகராய்**
**இன்னம் புலர்ந்தின்றோ?**
**வானே நிலனே**
**பிறவே அறிவரியான்**
**தானேவந் தெம்மைத்**
**தலையளித்தாட் கொண்டருளும்**
**வான்வார் கழல்பாடி**
**வந்தோர்க்குன் வாய்திறவாய்!**
**ஊனே உருகாய்**
**உனக்கே உறும்எமக்கும்**
**ஏனோர்க்கும் தங்கோனைப்**
**பாடேலோர் எம்பாவாய்!**

## 7. அன்னே இவையும் சிலவோ

**அன்னே! இவையுஞ்**
**சிலவோ? பலஅமரர்**
**உன்னற் கரியான்**
**ஒருவன இருஞ்சீரான்**
**சின்னங்கள் கேட்பச்**
**சிவன்என்றே வாய்திறப்பாய்!**
**தென்னாஎன் னாமுன்னம்**
**தீசேர் மெழுகொப்பாய்**
**என்னானை என் அரையன்**
**இன்னமுதென் றெல்லோமுஞ்**
**சொன்னோங்கேள் வெவ்வேறாய்**
**இன்னந் துயிலுதியோ**
**வன்னெஞ்சப் பேதையர்போல்**
**வாளா கிடத்தியால்**
**என்னே துயிலின்**
**பரிசேலோர் எம்பாவாய்!**

*இதுகாறும் 'வாள் தடங்கண் மாதே' என்றும் 'நேரிழையாய்' என்றும், 'முத்தன்ன வெண்ணகையாய்' என்றும், 'ஏலக் குழலி' என்றும் 'மானே' என்றும் பள்ளி விட்டெழாது நின்ற மகளிரைக் குறிப்பிட்ட—கூப்பிடும் நிலையை மேற்கொண்டுள்ள கன்னியர் இப்பொழுது உள்ளே உறங்குபவளைப் பார்த்து 'அன்னே' என்று அன்பொழுக விளிக்கின்றனர். 'தாய் போன்றவளே' என்று அவளை விளிப்பதன் நோக்கம், இறைவனுக்கடுத்த நிலையிலே பெருமையுடனும் மதிப்புடனும் நடத்தப்பெற வேண்டியவள் தாயேயாதலின் 'அன்னே' என அழைத்*

தனர். மாணிக்கவாசகரே பிறிதோரிடத்தில் 'கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே' என்று தாய்ப் பசுவின் பாசத்தின் எல்லையினைப் பாங்குறப் பகர்ந்தார். 'தாயிற் சிறந்த தயாவான தற்பரனே' என்பர் பெரியோர்.

இப்பொழுது வீடு வீடாகச் சென்று உறங்கிக் கொண் டிருப்பவர்களை எழுப்பிக் கொண்டிருக்கும் கன்னியர் "தாய் போன்றவளே" என்று விளித்து, "வீடுதோறும் செல்லுவதும் அவ்வீட்டினுள்ளே உறங்குவோரை எழுப்பு தலும் ஆகிய இப்பணிகள் எங்கள் கடமைகளுள் சிலவாக அமைந்துவிட்டன போலும்" எனக் கூறுகின்றனர். "அன்னே இவையும் சிலவோ" என்னுந் தொடரை உன்னுக. தேவர்கள் பலர் நினைத்தற்கு அரியவனும், ஒப்பில்லாதவனும், பெரும்புகழுடையவனும் ஆகிய சிவ பரம்பொருளின் அடையாளங்களைக் கேட்குந்தோறும் 'சிவா' என்று சொல்லிக் கொண்டே உன்னுடைய வாயைத் திறப்பாயாக!' என்று முதற்கண் வேண்டுகோள் விடுத்தனர். "பல அமரர் உன்னற்கரியான் ஒருவன் — அவன் இருஞ்சீரான் — சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய் திறப்பாய்". தேவர்கள் காண்டற்கும் எண்ணு தற்கும் அரியவனாக இருக்கிற சிவனின் சின்னங்களை ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய முதற்பாடல் கொண்டே தெளியலாம். தோடுடைய செவியன், விடை யேறி, தூவெண் மதிசூடி, காடுடைய சுடலைப் பொடி பூசி — இவையெல்லாம் சிவனெனத் தெளிதற்குரிய சின்னங்கள் — அடையாளங்கள். இவ்வாறு அவன் அடை யாளங்களைப் பிறர்வாய்க் கேட்டவுடனே 'சிவசிவ' என வாய்திறந்து அலறி, அன்பால் அகங்கனிந்து கசிந்துருகி நிற்றல் வேண்டும். 'சிவ சிவ' என்கிலர் தீவினையாளர் என் பார் திருமூலர். "சிவாய நம என்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை நெஞ்சே" என்றும் சமயச் சான்றோர் பாடியருளினர். "சிறையாரும் மடக்கிளியே இங்கே வா" என விளித்து "தேனொடு பால் முறையாலே

உணத்தருவன்'' என்று ஆசை காட்டி, ''மொய் பவளத் தொடு தரளம் துறையாரும் கடற்றோணி புரத்தீசன் பிறை யாளன் நாமம் எனக்கொருகால் பேசாயே'' என்று சிவம் பெருக்கும் திருஞான சம்பந்தர் — நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தர் பாடினார். அடுத்து, ''தென்னவனே என்று கூறி முடிப்பதற்குள் நெருப்பி னிடைப்பட்ட மெழுகுபோல் உருகுவாய்'' என்று மேலும் கிளத்தும் பாங்கில் ''தென்னாவென்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்'' என்கின்றனர் கன்னிப் பெண்டிர். 'தென்னா' எனும் சொல் தென்னவனைக் குறித்து நின்றது. தென்னவன் பாண்டியன். சிவபெருமான் ஒரு ஞான்று பாண்டி நாட்டை அங்கயற்கண்ணி அம்மை யாரோடு அரசர் பெருந்தகையாக ஆண்ட காரணம் பற்றித் தென்னவன் எனச் சிவன் குறிக்கப் பெற்றார். ''தென்பாண்டி நாடே சிவலோகம் என்று முன் வாதவூரர் மொழிந்தார்'' என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும் தம் மனோன்மணீயத்திற் குறிப்பிட்டுள்ளார். ''தென்னவன் எனையாளும் சிவனவன்'' என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு. ''தென்னாடுடைய சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்பது சைவப் பெருமக்களுக்கு மணிவாசகர் வழங்கிய தாரக மந்திரமன்றோ? தமக்கு வேண்டியவர் திருப்பெயர் கேட்டவுடனேயே உள்ளம் நெக்குருகி நிற்றல் என்பது பேரன்புடையார் மாட்டுக் காணும் செயலாகும்.

**முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே**

என்னும் திருநாவுக்கரசர்தம் திருத்தாண்டகத் திருப் பாடல், நாமங்கேட்ட நங்கையின் செயலை உணர்த்தும்.

''எனது தந்தை, எனது தலைவன், இனிமை பயக்கும் அமுதன் என்று எல்லோரும் வெவ்வேறு பெயரிட்டு அவன் பெருமையினைக் கட்டுரைத்தோம். வெவ்வேறாய்ச் சென்ற நாங்கள் தனித்தனியாகவும் அவன் புகழைப் புகன்றோம். அவற்றை யெல்லாம் கேட்பாயாக! நாங்கள் இவ்வளவு சொல்லியும் உறங்குகின்றாயோ, வலிய நெஞ்சினையுடைய அறிவற்றவர்களைப் போல வீணாகப் படுத்து அசைவற்றுத் தூங்குகின்றாயாதலின் நினது தூக்கத்தை என்னவென்று சொல்வது?

''என் ஆனை என் அரையன் இன்னமுது என்று எல்லோரும் சொன்னோம் கேள். வெவ்வேறாய், இன்னம் துயிலுதியோ? வன்நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்! என்னே துயிலின் பரிசு? ஏலோர் எம்பாவாய்.''

''ஒப்புடையன் அல்லன், ஒருவன் அல்லன், ஓரூரன் அல்லன்; ஒருவமனில்லி'' என்று நாவுக்கரையர் நவின் றதுவும், ''ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம், திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்னும் திருவாசகத் திருத்தெள்ளேணப் பாடலும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

அருளாளனின் அருட்பாடல்களைக் கேட்ட அளவில் அவளது நெஞ்சம், நெருப்பிடை நின்ற மெழுகாய் உருகி யிருக்க வேண்டும். அவ்வாறு உருகாமையால் அவள் நெஞ்சம் கல்போல் வலிமையுடையதாயிற்று. அவ்வாறு அவள் உருகாதிருப்பதற்குக் காரணம் அவள்தன் அறியாமையே ஆகும். ''மலவிருள் உற்று உறங்காமல் மன்று பரிபாகர் அருள் செல, முழுக வருக, எனச்செப்பல் திருவெம்பாவை'' என்ற ஆன்றோர் அருளுரைக்கேற்ப,

மனவிருள் நீக்கி, சிவபெருமானின் அருளொளி பரவ வாய்ப்பாயிருப்பது இத்திருப்பாடலாகும். எனவேதான் துயிலின் பரிசு ஈதோ என்று வியப்பாள் போலத் தோழியின் செயலை எள்ளி நகையாடினர், அவளை அழைத்துப் போகவந்த கன்னியர்.

**அன்னே! இவையுஞ்**
**சிலவோ? பலஅமரர்**
**உன்னற் கரியான்**
**ஒருவன் இருஞ்சீரான்**
**சின்னங்கள் கேட்பச்**
**சிவன்என்றே வாய்திறப்பாய்!**
**தென்னாஎன் னாமுன்னம்**
**தீசேர் மெழுகொப்பாய்**
**என்னானை என்அரையன்**
**இன்னமுதென் றெல்லோமுஞ்**
**சொன்னோங்கேள் வெவ்வேறாய்**
**இன்னந் துயிலுதியோ**
**வன்னெஞ்சப் பேதையர்போல்**
**வாளா கிடத்தியால்**
**என்னே துயிலின்**
**பரிசேலோர் எம்பாவாய்!**

## 8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்

**கோழி! சிலம்பச்**
**சிலம்புங் குருகெங்கும்**
**ஏழில் இயம்ப**
**இயம்பும்வெண் சங்கெங்கும்**
**கேழில் பரஞ்சோதி**
**கேழில் பரங்கருணை**
**கேழில் விழுப்பொருள்கள்**
**பாடினோங் கேட்டிலையோ?**
**வாழியீ தென்ன**
**உறக்கமோ? வாய்திறவாய்!**
**ஆழியான் அன்புடைமை**
**ஆமாறும் இவ்வாறோ?**
**ஊழி முதல்வனாய்**
**நின்ற ஒருவனை**
**ஏழைபங் காளனையே**
**பாடேலோர் எம்பாவாய்!**

ஏழாவது திருப்பாட்டில் இறைவன் திருப்பெயரையும் அடையாளங்களையும் கேட்ட அளவில் நெஞ்சம் நெக்குருகி நிற்கும் மகளிரைக் காட்டிய மாணிக்கவாசகப் பெருமான், இத்திருப்பாட்டில் வைகறைப் போதில் சோதியுள் மேலான சோதியாகவும் அருள் வடிவாகவும் விளங்கும் ஆண்டவனது புகழினை ஏத்திப் பாடுவதே உயிர்களுக்குரிய கடமையென்று உணர்த்துகின்றார்,

இந்தப் பாட்டில் ஒரு புதுமை, எழுப்ப வந்த கன்னியர் அனைவரும், எழுப்ப நின்ற கன்னியரை முன்னரே நன்கு அறிவராதலின் அவளை யாதொரு புகழ் மொழியோ அடையோ கூறி முன்னிலைப்படுத்தாமல், நாட்காலையில்

உலகில் நிகழும் இயல்பான செயல்களை எடுத்துக் காட்டிப் பேசலுற்றார்கள். நேய நெருக்கமும் பழக்க மிகுதியும் உடையாரை எந்த விளியுமின்றி எடுத்த எடுப்பி லேயே பேச முயல்வது உலக வழக்கன்றோ!

பொழுது புலர்ந்து விட்டது என்பதனை அறிவிக்கக் கோழி கூவுகிறது. மாணிக்கவாசகர் என்னும் ஆன்ம ஞானிதான் என்றில்லை, இருபதாம் நூற்றாண்டில் புரட்சிக்கவிஞர் என்று போற்றப் பெற்றவரான பாவேந்தர் பாரதிதாசன் கூடத் தம் 'எதிர்பாராத முத்தம்' என்னும் குறுங்காப்பியத்தில் பூங்கோதை என்னும் கதைத் தலைவியின் பாத்திரத்தில் வைத்துப் பேசுவார் போல் "சேவலுக்கும் இன்னும் என்ன தூக்கம்" என்று குறிப்பிட்டார்.

தொன்னெடுங்காலந் தொட்டுச் சேவல் வைகறையிற் கூவுவது என்பது 'கோழி கூவப் பொழுது விடிந்தது' என்று இலக்கணக் குறிப்பில் இடம்பெறும் அளவிற்குப் பழமையுடையதாகும், இக்கோழி கூவும் 'கொக் கரக்கோ' என்னும் ஒலியினைக் கேட்ட அளவில் எல்லா விடங்களிலும் சிறு பறவைகள் உடன் ஒலிக்கின்றன. திருக்கோயில்களில் திருப்பள்ளியெழுச்சிக் காலத்தை அறிவிக்கக் குழலூதப் பெறுதலும், வெள்ளிய சங்கங்கள் ஒலிக்கப் பெறுதலும் உண்டு. எல்லாவிடங்களிலும் அவ் வொலிகள் இப்பொழுது கேட்கின்றன. சிலப்பதிகாரம் யாத்த செம்மல் இளங்கோவடிகளாரும் ஊர்காண் காதையில் இதனைக் குறிப்பர். பாண்டிய மன்னனின் கோநகராம் மாநகர் மதுரையில் வாழும் மக்களைத் துயிலெழுப்ப, நுதல் விழி நாட்டத்து இறையோனாம் சிவபெருமான் திருக்கோயிலிலும், கருடக் கொடியை உயர்த்திய திருமால் கோயிலிலும் கலப்பைப் படையுடைய பலராமன் கோயிலிலும் கோழிச்சேவற் கொடியைக் கொண்ட முருகன் திருக்கோயிலிலும் அறத்துறையில் அசையாது வாழும் அறவோர் பள்ளியிலும், மறத்துறை

...ம் விரத்துறையில் விளக்கமுற நிற்கும் மன்னவன் ...லாம் அரண்மனையிலும் வெண்சங்குடன் ...சங்கள் முழங்கின என்று குறிப்பிடுவர். பண்பு நிறைந்த ...த்துறையில் மேம்பட்ட வல்லுநர்கள் இவ்வாறு ...றப்போதில் தங்கள் கடமையைச் செய்து ஊர் ...களைத் துயிலெழுப்புகிறார்கள். முதற்கண், இயற்கை ... — எவரொருவரும் எழுப்பாமல் தானே எழுந்து ...ற்குரல் கொடுக்கும் கோழியைக் கூறிய மணிவாசகப் பெருமான் அடுத்துக் குருகுகள் சிலம்பலைக் கூறினார். ...ர் இசைகாரர்களால் குழலும் சங்கும் ஒலிக்கப்படு ...தைக் குறிப்பிட்டார். ஒருவரோடும் உவமை சொல்ல முடியாத — அருட்பெருங்கடலாக உள்ள அண்ணாமலை ...னை அவன்தன் மேலான பொருள் சேர்ந்த புகழ் ...ளை நாங்கள் பாடினோமாக, அவற்றை நீ கேட்க ...ல்லை போலும்'' என்று எழுப்ப வந்த கன்னியர் செப்ப ...ற்றனர்.

''கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்...ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும் கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை கேழில் விருப்பொருள்கள் பாடி னோம் — கேட்டிலையோ?'' என்பதே அவர்கள் கேள்வி.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்பது தொல்காப்பிய நூற்பா. ஒவ்வொரு சொல்லும் ...ாயம் குறைந்தது ஒரு பொருளைக் குறித்து நிற்கும், ''சொல்லும் அதன் பொருளுமாய் இருக்கிற மகா ...தவனை நான் வணங்குகின்றேன்'' என்று மகாகவி காளிதாசன் குறிப்பிட்டான். அம்முறையில் பாடலுக்கே பொருளாயுள்ள இறைவனது தன்மைகளைப் பாடி நிற் ...றாம் என்கிறார்கள். வேற்றுப் பொருளை உணர்த்தும் பாடல்களைப் பாடாமல் இறைவன் பெருமையினைப் புகழும் அருட்பாடல்களையே பாடினோம் என்று ...ர்த்தவே கேழில் விழுப்பொருள் என்றார். விழுப் பொருள் என்பது மேலான புகழ் என்னும் பொருண்

மைத்து. திருக்கடவூர் உறையும் அபிராமி அம்மையை 'விழுத்துணை' என்பார் அபிராமி பட்டர். இங்கு மாணிக்கவாசகப் பெருமான் விழுப்பொருள் என்று சிவனைக் குறிப்பது சற்றுச் சிந்திக்கத்தக்கது. சிவனுடைய புகழைப் பேசுவதாகவே பாடல்கள் அமைய வேண்டும் என்று குறிப்பிட்ட அடிகளார் கூற்றுடன், ''ஞாலம் நின் புகழே மிக வேண்டும் தென் ஆலவாயுள் உறையும் எம் ஆதியே'' என்னும் ஞான சம்பந்தப் பிள்ளையாரின் கூற்றையும் நாம் ஒருங்கு வைத்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு சிவனெனும் நாமம் தனக்கே உரிய செம் மேனி எம்மானை எல்லாரும் பாடியும்கூட, உள்ளே உறங்குபவள் உறங்கிக் கொண்டே இருக்கின்றாள். எனவே வாயிலுக்கு வெளியே பரம்பொருளின் புகழைப் பாடிநின்ற பெண்கள் ''இங்ஙனம் அறிவின்றித் தூங்கிக் கொண்டிருப்பது என்ன முறைமையிற் சேர்த்தியோ?'' என்று நெருங்கிக் கேட்கிறார்கள். 'ஈதென்ன உறக்கமோ?' என்ற வினா அவர்கள் வியப்பின் எல்லையை வெளிப்படுத்துகின்றது. ''சற்றுத் திருவாயையாவது திறந்து பேசலாம் இல்லையா?'' எனும்படி ''வாய் திறவாய்'' என்கிறார்கள். அப்போதும் அவள் எழுந்த பாடில்லை. எனவே அவளை ''வாழ்வாயாக'' ''வாழி'' என்னும் எள்ளற் குறிப்பமைய வாழ்த்துகின்றார்கள். பிறகு மேலும் அவளோடு பேசத் தொடங்குகின்றார்கள். ''நமக்கு அரசனாகும் ஆண்டவனுக்கு, அன்பு செலுத்தும் முறை இவ்வகை தானோ, உலகிற்கு முதல்வனாக விளங்கும் ஒப்பற்றவனும் உமை பங்கனுமாகிய உமாபதி யையே நீ பாடுவாயாக'' என்று அவளுக்கு நல்லறிவு கொளுத்துகிறார்கள்.

**''ஆழியான் அற்புடைமை ஆமாறு இவ்வாறோ?''**

ஆழியான் என்பதனை அரசனாகக் கொண்டால் பழந்தமிழர் கொள்கை விளக்கமுறும். ''நெல்லும்

உயிரன்றே நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகம்'' என்பது புறநானூறு. ''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும்'' என்பது ஆழ்வார்தம் பாடலடி. அரசன் உறையும் அரண்மனை அன்று கோயில் எனப்பட்டது.

''மன் ஆனவன் மழை ஆனவன் பொன் ஆனவன்'' என்றெல்லாம் இறைவனைக் கூறும் சம்பந்தர் 'முதலானவன்' என்றும் சிவனைக் குறிப்பர். அடுத்து, பெண்ணின் நல்லாளாம் உமையம்மையோடு — உண்ணா முலை யுமையாளொடு உடனாகிய ஒருவனாய் — அண்ணாமலையானாய் வீற்றிருக்கும் இடம் திருவண்ணாமலை என்பதும் இப்பாடல் வழிப் பெறப்படுகின்றது.

**கோழி! சிலம்பச்**
**சிலம்புங் குருகெங்கும்**
**ஏழில் இயம்ப**
**இயம்பும்வெண் சங்கெங்கும்**
**கேழில் பரஞ்சோதி**
**கேழில் பரங்கருணை**
**கேழில் விழுப்பொருள்கள்**
**பாடினோங் கேட்டிலையோ?**
**வாழியீ தென்ன**
**உறக்கமோ? வாய்திறவாய்!**
**ஆழியான் அன்புடைமை**
**ஆமாறும் இவ்வாறோ?**
**ஊழி முதல்வனாய்**
**நின்ற ஒருவனை**
**ஏழைபங் காளனையே**
**பாடேலோர் எம்பாவாய்!**

# 9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே

முன்னைப் பழம்பொருட்கு
முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்தும்அப் பெற்றியனே!
உன்னைப் பிரானாகப்
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர்
ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே
தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே
எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும்
இலோம் ஏலோர் எம்பாவாய்!

உலகில் தோன்றிய எப்பொருளுக்கும் பருவநிலைகள் உண்டு; முடிவு நிலையும் உண்டு. இதனைப் 'பாளையாம் தன்மை, பாலனாம் தன்மை, காளையாம் தன்மை, காமுறும் இளமை, மேல்வரும் மூப்பு'' என்றெல்லாம் குண்டலகேசியில் குறிப்பிட்டு ''நாளு நாள் நாம் சாகின்றாமல் நமக்கு நாம் அழாததென்னே'' என்பார் அதன் ஆசிரியர் நாதகுத்தனார்.

ஆனால் சிவபெருமான் அவ்வாறில்லை. அவன் பிறப்பற்ற பிஞ்ஞகன். ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி. அவனுக்கும் தொடக்கமும் இல்லை;

தளர்ச்சியும் இல்லை; முதுமையும் இல்லை; உதிர்வும் இல்லை. எனவே முன்னைத் தோன்றிய—முற்பட்டனவாக விளங்குகின்ற பழைய பொருள்கள் யாவற்றிற்கும் முற்பட்ட பழைய பொருளாக உள்ளான். முளைப்பும் [illegible] முதிர்வும் முடிவும் இல்லாது அவன் திகழ்வது போலவே, பிற்பட்டவனாகத் தோன்றிய புதிய பொருள்கள் எல்லாவற்றிற்கும் அவன் மீண்டும் அப்புதுமைத் தன்மை வாய்ந்தவனாகத் திகழ்கிறான் என்கிறார்கள் கன்னியர். முன்னைத் திருப்பாட்டுகளில் சிவபரம் பொருளை வைகறைப் போதில் எழுந்து வழுத்துவதே தமது கடமை என்று குறிப்பிட்ட மணிவாசகர். இத்திருப் பாட்டில் அக்கன்னியர் சிவபெருமானை முன்னிலைப் படுத்தி, தங்களின் உறுதியான உள்ளத்தினை வெளிப் படுத்தும் பாங்கில் இப்பாடலைப் புனைந்துள்ளார்.

''பழமையினால் சாகாத இளையவன் காண்'' என்று அழகைச் சிறப்பிப்பார் புரட்சிக் கவிஞர். ஈண்டு மணிவாசகப் பெருந்தகையார் சிவபெருமான் முன்னைப் பழமைக்குப் பழமையாகவும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாகவும் இருக்கும் தன்மையினை ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே'' என்று விளிக்கின்றார்.

உலகில் நாம் காணும் திங்கள் எவ்வளவு பழமை உடையது? அது போன்றே கதிரவனின் தோற்றத்தினைச் சொல்லலும் ஒல்லுமோ? வானம் எப்போது தோன்றியது? நட்சத்திரக் கூட்டங்களின் காலத்தைக் கணக்கிட முடியுமா? கடல் தோன்றியதைக் கண்டவர் உண்டா? இதனால்தான் தமிழின் பழமையைச் சுட்டவந்த பாவேந்தர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் ''திங்களொடும் செழும்பருதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மல்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழோடு பிறந்தோம்'' என்று தமிழின் பழமையினைச்

சுட்டினார். அத்தமிழ் பேசும் தமிழ்க்குடியின் தொன்மையினையும் ஒருங்கே காட்டினார், ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடி'' எனப் பேசப்பெறும் தமிழ்க்குடி இற்றைக்குச் சற்றேறக்குறைய ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே சிவ பரம்பொருளை — சிவனெனும் முழுமுதற் பொருளை வழுத்தி வந்தது என்பதற்குச் சிந்து கங்கைச் சமவெளி நாகரிகம் சான்றுரைக்கும். ஹரப்பா, மொகஞ்சதாரோ இடிபாடுகளை அகழ்ந்து பார்த்த பொழுது, அவ்விடத்தில் இலிங்க வழிபாடு நிலவியது என்பதனை, ஆராய்ச்சியாளர் கண்டுள்ளனர். கடல் கடந்த நாடுகளிலும் சிவ வழிபாடு அந்நாளில் சிறந்திருந்தது. எனவே முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ச் சிவனைக் கொள்ளுதல் சாலப் பொருத்தமுடைத்தேயாகும். மேலும் இன்றும் சிவபரம்பொருளின் வழிபாடு எங்கும் இடையறாது நிலவுகின்றது. எனவே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாகத் திகழ்கின்றான். அப்பேரருட் பெருந்தகையினன்.

இப்போது இறைவனின் பழமையினையும் புதுமையினையும் ஒருங்கே புலப்படுத்திப் புகழ்ந்த கன்னியர், அப்பெருமானிடம் தம் உறுதியான உள்ளப் பாங்கினை உரைக்கலுறுகின்றார்கள்.

''உன்னை ஆண்டவனாகக் கிடைக்கப் பெற்ற உன்னுடைய உண்மை அடிமைகளாகிய நாங்கள் உன் தொண்டர்களுடைய திருவடிகள் வணங்கி நிற்போம். அவ்வாறே அவர்களுக்கே உரிமை உடையவர்கள் ஆவோம். அத்தகுதி வாய்ந்த அடியார்களே எங்கட்குக் கணவர்களாகும் தகுதித் திறம் சான்றவர்கள் ஆவர். அவர்கள் விரும்பி எங்களை எவ்வெவ்வாறு பணி செய்ய ஏவலிடுகின்றார்களோ அவ்வகையிலேயே அவர்களுக்கு அடிமையாக அவர்களிட்ட பணிகளைப் பாங்குறச் செய்து

புரிவோம். இங்குக் குறித்த இம்முறையிலேயே எம் தலைவனாகிய நீ அருள் செய்வாயாயின் யாங்கள் எந்தக் குறைபாடும் இல்லாதவர்களாக வாழ்வோம்'' என்று கன்னியர் உரைத்தனர்.

பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் விளங்கும் சிவம்பரம்பொருள் மூப்பும் முடிவும் இல்லாதவன் என்பது முன்னரே பெறப்பட்டது. இச்சிவனார் என்றும் சக்தி குன்றாமல் விளங்குபவராவர். உலக உயிர்கள் ஒரு காலைக்கொருகால் சத்தி கூடலும், குறைதலும், ஒரு தோன்று முற்றிலுமாக நீங்கலும் கொள்ளும். ஆனால் சத்தியோடு சிவமாய் வாழும் சிவனெனும் முழு முதற் பொருள் எக்காலத்தும் சத்து சித்து உடைய ஆனந்தனாய்— சச்சிதானந்தனாய் விளங்குகின்றான். அத்தகையவனைக் காக்கும் கடவுளாக — ஆதரிக்கும் ஆண்டவனாகப் பெற்ற நாங்கள் உள்ளபடியே உண்மையான அடியார்களாவோம். உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்! என்றனர். பின் 'உன் அடியார் தாள் பணிவோம்' என்றனர். சிவ சிந்தனையற்றவர்களை யாம் பணிய மாட்டோம் என்னும் குறிப்பு இவ்வடியில் தொக்கி நிற்கின்றது. ஆக, உன்னை உள்ளன்பு மிகப் போற்றி வந்தித்து வணங்கும் அடியார்களின் பாதங்களையே யாம் பணிவோம் என்னும் தங்களின் உள்ள உறுதிப்பாட்டினை உரைத்தவராயினர். மேலும் நாங்கள் அவர்க்கே உரிமை உடையவர்கள் ஆவோம் என்றனர். ''ஆங்கவர்க்கே பாங்காவோம்''. 'அன்னவரே எம் கணவர் ஆவார்' என்ற அடுத்த தொடர் அவர்கள் உறுதிப்பாட்டின் உச்ச நிலை எனலாம். 'சிவன் கழல் ஏத்தும் செல்வமே செல்வம்' என்று எவர் ஒருவர் சிவனுக்கு மாறாத அடியாராக விளங்குகின்றாரோ அவரே இக்கன்னியர்க்குக் கணவராக ஆதற்குத் தகுதியுடையவராவர் என்பது இத்தொடராற் பெறப்படுகின்றது. ''அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்'' என்பதுதான் ஓர் உண்மையான இல்லத்தரசியின் இனிய கடமையாகும்.

'கற்பு' என்பதற்கே 'கணவன் கற்பித்த வழியிலே நிற்றல்' எனப் பொருள் கூறுவர் பண்டைச் சான்றோர். அவ்வகையில் அக்கணவன்மார் மகிழ்ச்சியுடன் என்னென்ன செயல்களைச் செய்யுமாறு ஏவுகின்றார்களோ, அச்செயல்களையெல்லாம் விருப்புடனே விரைந்து செய்து முடிப்போம் என்னும் பாடறிந்தொழுகும் பண்பன்றோ! மேற்குறித்த வகையில் உன் அடியவரையே எங்கட்குக் கணவராக அமைய நீவிர் அருளாணை பிறப்பிப்பீராயின் எங்கட்கு இவ்வுலகில் யாதோர் குறையும் இல்லை; நன்கு வாழ்வோம் என்று புகன்றவாறு. இத்திருப்பாட்டு, ''இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல் என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்'' என்று நம்பிக்கையொளியோடு கூடிய உறுதிப்பாட்டுடன் முடிகின்றது.

**குறைவிலோம் கொடுமாநுட வாழ்க்கையால்**
**கறை நிலாவிய கண்டன்என் தோளினன்**
**மறைவலான் மயிலாடு துறையுறை**
**இறைவன்நீள் கழலேத்தி யிருக்கிலே**

என்பது திருநாவுக்கரசர் தேவாரம்.

**முன்னைப் பழம்பொருட்கு**
**முன்னைப் பழம்பொருளே!**
**பின்னைப் புதுமைக்கும்**
**பேர்த்தும் அப் பெற்றியனே?**
**உன்னைப் பிரானாகப்**
**பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம்**
**ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எங்கணவர்**
**ஆவார் அவர்உகந்து**
**சொன்ன பரிசே**
**தொழும்பாய்ப் பணிசெய்வோம்**
**இன்ன வகையே**
**எமக்கெங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையும்**
**இலோம்ஏலோர் எம்பாவாய்!**

## 10. பாதாளம் ஏழினும்

பாதாளம் ஏழினுங்கீழ்
சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும்
எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒருபால்
திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும்
மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா
ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன்
கோயிற்பி ணாப்பிள்ளைகாள்!
ஏதவன்ஊர்? ஏதவன்பேர்?
ஆர்உற்றார்? ஆர்அயலார்
ஏதவனைப் பாடும்
பரிசுஏலோர் எம்பாவாய்!

மேலைத் திருப்பாட்டில் கன்னியர்தம் உள்ளத்து முதிர்ப்பாட்டினை உணர்த்திய மாணிக்கவாசகர் பெருமான், இத்திருப்பாட்டில் அவர் எதிரே வந்துற்ற திருக்கோயிற் பணிமகளிரைக் கண்டு, காலமும் இடமும் அனைத்தும் கடந்து நிற்கும் சிவபரம்பொருளின் உண்மை இயல்பினை ஆராயும் போக்கில் வினவிய முறையை அறிவுறுத்தலுறுகின்றார்.

திருக்கோயிலிற் பணிசெய்யும் பெண்களைக் கண்ட கன்னியர், அவர்கள் அரன் பணியினை நித்தலும் அவருக்குத் தொண்டராய் அமைந்து ஆற்றும் பேறு பெற்றவராதலின் ''கோதில் குலத்து அரன்தன் கோயிற்

பிணாப் பிள்ளைகாள்'' என விளித்தனர். இறைவனுக்கு உண்மையாக உறுதியாகத் திருப்பணியாற்றும் அடியவர்கள், தம்முன் எதிர்ப்படும் சிவனடியார்களைத் தம்மினும் அவர்கள் சித்தம் சிவன்பாலே வைத்தவர்கள், 'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்' என்று நினைப்பவர்கள் என்று கருதி, அவர்தம் வழி இறையருளைப் பெற விழைதலும், தம்மை இறைவன் வந்து ஆட்கொண்டு நலம் செய்வாரோ என வினவுவதும் தம் ஆர்வ மிகுதியான் என்ப. திருநாவுக்கரசர் பெருமானைக் காணாத நிலையிலும் அவர்தம் திருப்பெயரினைத் தம் பிள்ளைகளுக்கும், தண்ணீர்ப் பந்தலுக்கும், மலர்ச் சோலைக்கும், அளவைச் சாதனங்களுக்கும், ஏன்? அனைத்துப் பொருள்களுக்கும் வைத்து அப்பதி அடிகளார் தம் பேரன்புப் பெருக்கினைப் புலப்படுத்திக் கொண்டமையினைத் திருத்தொண்டர் புராணம் கொண்டு தெளியலாம்.

திருக்கோவிலில் பணியாற்றும் அரனுக்கே ஆட்பட்ட தொண்டு மகளிர் குற்றமற்ற ஒரு குறிக்கோள் வாழ்க்கையை உடையவராவர். ''தம்பியார் உளராக வைத்த தயாவினால், அம்பொன் மணிநூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி இம்பர் மனைத்தவம் கிடந்த'' திலகவதியார், தம்பி மருள்நீக்கியார் நம்பர் அருளாமையினால் தென்பாடலியாம் திருப்பாதிரிப் புலியூர் சார்ந்து தருமசேனர் எனும் பட்டம் பெற்றுச் சமண சமயத் தொடக்குற்று வாழும் நாளில், தாம் பிறந்த திருவாமூர்ப் பதியை விட்டகன்று அண்மையிலிருக்கும் திருவதிகைப் பதிபோந்து, கெடில நதிக்கரையில் விளங்கும் திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலில் திருத்தொண்டு செய்யத் தலைப்பட்டமை ஈண்டு நினைக்கற்பாலதாம்.

வைகறையில் எழுந்து, நீராடி, தம் உடம்பைத் தூய்மை செய்து, திருவலகு கொண்டு திருக்கோயிலைச் சுத்தம் செய்து, நந்தவனத்து மலர்களைக் கொய்து

கொண்டுவந்து மலர் மாலைகள் புனைந்து இறைவன் திருத்தொண்டுக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் திருக்கோயிற் பெண்டிர்கள் ஆவர். இவர்கள் மணம் முடித்தல் இன்றித் தெய்வ காரியங்களுக்கே திருக்கோயில்களில் வாழ்பவராவர். எனவே இவர்கள் குற்றமில்லாத வாழ்க்கையை யுடையவராவர். கீழுலகங்கள் ஏழாகும். அவை அதல, விதல, சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதாளம் என்ற ஏழாகும். அந்தக் கீழுலகங்கள் ஏழினும் கீழாகவும் சொல்லின் அளவைக் கடந்த நிலையிலும் உள்ளது சிவனது செந்தாமரையன்ன திருவடிகள். அவனுடைய திருமுடியோவென்னில் மலர்களால் அணிசெய்யப் பெற்று, எல்லாப் பொருள்களின் முடிவிடமாக உள்ளது. இக்கருத்தினையே மாணிக்கவாசகப் பெருமான் குயிற்பத்தில்,

**கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்**
**பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கப்பால்**
**சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை**
**ஆதிகுண மொன்றுமில்லா அந்தமிலான் வரக்கூவாய்** (1)

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே இறைவன் அடிமுடி அறியவொண்ணாதவன் என்பது பெற்றாம். இவ்வாறு கற்பனை கடந்த சோதியாக, இடத்தாலும், காலத்தாலும் எல்லையற்று விளங்கும் பரம்பொருள், விளக்கமாய் எவரும் அறிந்து கொள்ள முடியாத பொருளாய் விளங்கினாலும் அவனை அன்போடு வழிபட்டு, அருள் நோக்கத்தோடு தொண்டு செய்யும் அடியவர்க்கு எளியனாய் இருக்கிறான். பாலிற் படுநெய்போல் மறைய நின்றுளளாயினும், உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் கடைய அவன் முன் நிற்பன் என்று அப்பரடிகளும் அருளினார் அன்றோ! ''யாதொரு தெய்வம் கொண்டீர்

ஆதொரு தெய்வமாக மாதொரு பாகனார்தாம் வருவார்'' என்பது சைவப் பெருமக்களது நம்பிக்கை அல்லவா? ''பாதாளம் ஏழினும் கீழ், சொற்கழிவு பாதமலர் போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே'' என்று குறிப்பிட்டதுடன் அமையாமல் 'பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்' எனும் உண்மை யினையும் உரைத்து நிற்கின்றார். ஈண்டுப் பேதை என்பது பெண்ணின் நல்லாளாய் விளங்கும் பெருமாட்டி யைக் குறிக்கும். ''இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென் இல்லவள் மாணாக் கடை'' என்பதன்றோ வள்ளுவம். எல்லாப் பேறுகளும் உலகில் ஒருவனுக்குக் கிட்டியும் நல்ல மனைவி வாய்க்கவில்லையென்றால் பயனொன்றுமில்லை; எப்பேறும் வாய்க்காத நிலையிலும் ஒருவனுக்கு நல்ல மனைவி வாய்த்துவிட்டால் அவன் வாழ்க்கை பேறு பெற்ற வாழ்க்கை என்றே கூறவேண்டும். ஐயன் தந்த இரு நாழி நெல் கொண்டு அகிலத்திற்கே படியளந்த பரமேட்டி, அகிலாண்டகோடி உயிர்களை வளர்க்கும் அபிராமி அன்னை ஆவள் அன்றோ! எனவே உமையம்மை இறைவனின் ஒரு பாதியினை—வாம பாகத்தினை—இடப்பாகத்தினைக் கொண்டாள் என்பது வரலாறு.

''உமையலாது உருவம் இல்லை'' என்றும், ''அரிதரு கண்ணியாளை ஒரு பாகமாக அருள்காரணத்தில் வருவார்'' என்றும் திருநாவுக்கரசர் பெருமான் கிளத்துவது காண்க. ஒரு நாமம் ஓர் உருவம் அற்றவனாக இறைவன் விளங்கினாலும், நினைவார் உள்ளத்துள்ளே எழுந்தருளுவதற்கு ஒரு வடிவம் வேண்டும் அன்றோ! அவ் வடிவமே பேதையினை யொருபாற்கொண்ட திருமேனி யாகும்.

''ஒண்சுடரை, முத்தியும் ஞானமும் வானவர் அறியா முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக் கற்பனை

கரித்த கடவுளை அடியேன் கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே'' என்று காதல் களிகூரப் பாடுகின்றார் வன்றொண்டர் திருக்கழுமலப் பதிகத்தில்.

இவ்வாறு ஓர் திருமேனியல்லாது பல திருமேனி கொண்டருளுபவனை விண்ணுலகில் உள்ளாரும், மண்ணுலகில் உள்ளாரும் பரவித் தொழுது இன்புறுகின்றனர். அவன் எல்லாருக்கெல்லாம் முதல்வன்; புகழ்ச்சி; நீங்காத ஒப்பற்ற உயிர்த் துணைவன்; தொண்டர்தம் மனங்களையே கோயிலாகக் கொண்டவன். அத்தகைய இறைவனது ஊர் எது? அவனது பேர் யாது? அவனுக்கு உறவினர் யார்? அவனுக்கு அயலவர் யார்? அப்பெருமானைப் புகழ்ந்து பாடும் தன்மை யாது?'' என்று வினவுகின்றனர். ''ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? யார் உற்றார்? யார் அயலார்? யாது அவனைப் பாடும் பரிசு?'' என்று கேட்கிறார்கள்.

நினைப்பவர் மனமே கோயிலாகக் கொண்டவன் இறைவன். 'காயமே கோயிலாக' என்பர் அருளாளர். ''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'' என்பார் திருமூலர். இவ்வாறு ஓர் ஊரன்றி எல்லா ஊர்களையும் தனக்கு உரிமையாகக் கொண்டவனும், ஒரு திருப் பெயரன்றி, ஆயிரம் திருப்பெயர் கொண்டவனும், எல்லாரையும் உற்றவராகக் கொண்டவனும் எவரையும் அயலார் என்று அகற்றாதவனும் ஆன சிவபெருமானைப் பாடிப் பரவி நிற்கும் திறத்தினைத் திருக்கோயிற் பெண்டிரை நோக்கி வினவிக் கன்னியர் விடைபெறும் போக்கில் பத்தாவது பாட்டு அமைந்துள்ளது.

**பாதாளம் ஏழினுங்கீழ்**
**சொற்கழிவு பாதமலர்**
**போதார் புனைமுடியும்**
**எல்லாப் பொருள்முடிவே!**

**பேதை ஒருபால்**
**திருமேனி ஒன்றல்லன்**
**வேதமுதல் விண்ணோரும்**
**மண்ணுந் துதித்தாலும்**
**ஓத உலவா**
**ஒருதோழன் தொண்டருளன்**
**கோதில் குலத்தரன்தன்**
**கோயிற்பி ணாப்பிள்ளைகாள்!**
**ஏதவன்ஊர்? ஏதவன்பேர்?**
**ஆர்உற்றார்? ஆர்அயலார்**
**ஏதவனைப் பாடும்**
**பரிசுஏலோர் எம்பாவாய்!**

# 11. மொய்யார் தடம் பொய்கை

மொய்யார் தடம்பொய்கை
புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து
குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழிஅடியோம்
வாழ்ந்தோங்காண்! ஆரழல்போற்
செய்யா!வெண் ணீறாடி!
செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண்
மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்
டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்
வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய்!
எமைஏலோர் எம்பாவாய்!

சிவபெருமானது உண்மை இயல்புகளை வினாவுரைப் போக்கில் பாடிச் சென்ற கன்னியர்கள், பூ மலர்ந்து பொலியும் பொய்கையினைச் சென்று சேர்கின்றனர். பளிங்கெனத் தெளிந்து நிறைந்திலங்கும் அந்நன்னீரைக் கண்டதும், அதில் மூழ்கித் திளைத்து நீராட வேண்டும் என்ற வேட்கை அவர்தம் நெஞ்சில் மீதூருகின்றது. அதுவும் பொழுது முற்றிலும் புலராத அவ்வைகறைப் போதில் குளிர்ந்த நீரில் குதித்து ஆடும் வேட்கை நெஞ்சில் நிறையவும், அதற்குக் காரணமாயமைந்த திருவருளை வழுத்துகின்றனர். அதன் வெளிப்பாடாகவே 'ஆரழல் போல் செய்யா' என்று பாடிப் பரவுகின்றனர்.

செறிந்த தீயைப் போலும் செம்மை நிறமுடைய திருமேனி வாய்ந்தவனே! வெண்மை நிறமுடைய திருநீறு பூசியவனே; அருட்செல்வத்தை யுடையவனே! சிறிய குடையினையும் மை தீட்டிய அகன்ற கண்களையும் உடைய பெண்ணாகத் திகழும் உமையம்மையாருக்குக் கணவனே! தன்னிகரற்ற தலைவனே! என்று சிவபிரானை ஏத்தி இறைஞ்சுகின்றனர்.

சிவன் என்றதும் நினைவுக்கு வருவது அவனுடைய கரிய நிறம். அப்பர் பெருமானும் 'செய்யனே கரிய கண்டனே' என்று பாடுவர். ஞானசம்பந்தரும் 'செய்யன் வெள்ளியன் ஒள்ளியார்' என்பர். இவ்வாறு சிவனைக் கன்னியர்கள் நினைத்துக் கொள்வதற்குக் காரணம் உளது. 'புறத்தூய்மை நீரான் அமையும்' என்பார் திருவள்ளுவர். எவ்வாறு நீர் உடல் அழுக்கைப் போக்கித் தூய்மை செய்கின்றதோ அதுபோல, நெருப்பு, தன்பாற்பட்ட பொருளின் அழுக்கினைச் சுட்டெரிக்கும் திறம் சான்றதாகும். சிவனும் உயிர்களைப் பாசம் நீக்கித் தன்பாற் படுத்திச் செம்மை சேர்க்கும் திறம் சான்றவனாவன். எனவேதான் தங்கள் மனமாசுகளைத் தூய்மை செய்யும் சிவனை முதற்கண் நினைத்து அவனை 'ஆரழல்போற் செய்யா' என அமைத்தனர். இவ்வாறு சிவனது சிவந்த திருமேனியை நினைத்தவர்கள், அம்மேனியின் மீது தும்பை மலரின் நிறமெனத் துலங்கும் திருவெண்ணீறு கண்டவராய் 'வெண்ணீறாடி' என அவனை மேலும் அழைத்தனர். 'செய்ய மேனி வெளிய பொடிப் பூசுவர் சேரும் மடியார் மேல், பைய நின்றவினை பாற்றுவர்' எனத் திருஞான சம்பந்தரும் பேசுவார். ஒருவர் தம் பாசப் பிணிப்பை அகற்றிவிட்டால் அவர்க்குச் சிவன் முத்தியருளுவது என்பது நிச்சயமாகும். எனவேதான் மூன்றாவதாக முத்திச் செல்வத்தை அளிப்பவன் என்னும் பொருளில் 'செல்வா' என்றார்கள் கன்னியர்கள். சிவனை அடையும் எளிதான வழி அவனது அருட்சத்தியாக விளங்கும் அம்மையை நினைவு கொள்வதாகும். எனவே சிற்றிடை

…யும் மையுண்ட விசாலமான கண்களையும் உடைய …ந்தையாம் உமாதேவியைக் கன்னியர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். அத்தகு உமாதேவியாரின் மணவாளனே என்று எண்ணும்பொழுது ஒரு நெருக்க இணக்கம் வந்து விடுகின்றது. அடுத்து அக்கன்னியர்கள் ஐயா என விளிக்கின்றனர், ஐயா என்பது ஈண்டுத் தலைவனே என்னும் பொருளில் வந்துள்ளது. அருள் காரணமாக எளிமையாகக் காட்சி தந்து தம்மை அடிமை கொள்பவன் என்ற பொருளில் 'ஐயா' என்றனர்.

இவ்வாறு இக்கன்னியர்கள் 'ஆரழல்போல் செய்யா' என்றும், 'வெண்ணீறாடி' என்றும், 'செல்வா' என்றும், 'சிறுமருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளா' என்றும், 'ஐயா' என்றும் ஐந்து வகையாக ஆண்டவனை எப்போது விளிக்கின்றார்கள் என்பதனை இனிக் காண்போம்.

வண்டுகள் மொய்த்து ரீங்காரம் கூட்டுகின்ற நீர்த் தடாகம். அத்தடாகத்தின் உட்புக்கு நீராடுகின்றனர். தம் கைகளால் நீரினை 'முகேர்' என்னும் ஓசை எழும்பக் குடைந்து குடைந்து நீராடுகிறார்கள். அப்போது அவன் திருவடிச் சிறப்பைப் பற்றிப் போற்றிப் பேசுகிறார்கள். 'சிவன்தன் வழியடியோம்' என்கிறார்கள். பரம்பரை பரம்பரையாகச் சிவனுக்குத் தொண்டு செய்யும் மரபினை உடையவர்கள் என்று தாங்களே சொல்லிக் கொள்கிறார்கள்.

பல பிறவிகளும் தொடரும் அடிமைத் திறத்தைச் சுந்தரர் 'எம்மான் எந்தை முத்தப்பன் ஏழேழ் படிகால் எமையாண்ட பெம்மான்' என்பர்.

தெய்வச்சேக்கிழார் பெருமானும் 'மாதொரு பாகனார்க்கு வழிவழியடிமை செய்யும் வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனார்' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையாரைக் குறிப்பர். சிலப்பதிகாரம்

யாத்த இளங்கோவடிகளும் குன்றக் குரவையில், குன்றத்து வேட்டுவர்கள் மலைவளங் காணவந்த சேரர் செம்மல் செங்குட்டுவனைக் கண்ட அளவில் 'ஏழ் பிறப்படியோம் வாழ்க நின் கொற்றம்' என்றே ஏத்திப் பரவுகின்றனர். இப்பிறப்பிலன்றி இனி எழும் எப்பிறப்பிலும் இறைவனின் திருவடியினை நினைத்து வாழும் வாழ்க்கையே தமக்குத் தேவை என்றுரைப்பாராய் அமையும் உறுதி மொழியாகும் இது.

முகேரெனும்படி ஓசையுண்டாக நீரைத்தட்டித் தங்கள் உடல்கள் மீது நீரை வாரி இறைத்துக் கொள்ளும் அந்த நேரத்திலும் சிவன் கழல் பாடுவதே நியமம் என்பாராய் "உன்கழல் பாடி" என்றார். 'கழல்' என்ற சொல் வீரத்தின் விளைவாய் நிற்கும் சிறப்பிற்றாகும். எனவே சிவனாரது வீரத்தினையே நீராடப் புகுந்த கன்னியர் விளம்பி நின்றனர் எனலாம்.

பரம்பரையாக அடிமைப்பட்டு வருதலினால் இது காறும் உன் அருளினால் வாழ்ந்து வந்தோம் என்று கூறிக் கொண்டனர். 'தலைவனாகிய நீ எங்களை ஆட்கொண்டு மேலருளுகின்ற திருவிளையாடலினால் உன் திருவடியைச் சரணம் என்று சார்ந்த பேரடியவர்கள், திருவருட் பேற்றிற்குரிய தவநெறிகள் யாவும் அடைந்து பிழைத்து நிற்பதானோம். எனவே நாங்கள் இளைத்தல் இல்லாமல் எங்களை அரவணைத்துக் காப்பாயாக' என்று கன்னியர்கள் மனங்கசிந்து வேண்டினர்.

மேலும் பல்வேறு உயிர்களின் பக்குவ நிலைகள் வேறு படுதலின் அதனை ஈசன் கண்டறிந்து உயிர்களிடத்துள்ள பாசவுணர்ச்சியை வேரறுத்து, தன்பாற்படுத்தித் தன்னறிவு தருகின்றமையை ஆட்கொளல் என்பர் ஆன்றோர்.

அவ்வகையில் சிவன் ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்த உயிர்களைக் குறைவுபடாமல்—இளைத்துப்

ாகாமல் காக்க வேண்டியது, கருணை வடிவான வளின் பணி ஆனதனால் 'எய்யாமற் காப்பாய் எமை லோர் எம்பாவாய்' என்று கன்னியர்கள் கண்ணுதற் வளிடம் கசிந்துருகி வேண்டி நிற்கின்றனர்.

மொய்யார் தடம்பொய்கை
புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து
குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழிஅடியோம்
வாழ்ந்தோங்காண்! ஆரழல்போற்
செய்யா!வெண் ணீறாடி!
செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண்
மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்
டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்
வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய்!
எமைஏலோர் எம்பாவாய்!

## 12. ஆர்த்த பிறவித் துயர்கெட

**ஆர்த்த பிறவித்**
**துயர்கெடநாம் ஆர்த்தாடும்**
**தீர்த்தன்! நற் றில்லைச்சிற்**
**றம்பலத்தே தீயாடும்**
**கூத்தன்! இவ் வானும்**
**குவலயமும் எல்லோமும்**
**காத்தும் படைத்தும்**
**கரந்தும் விளையாடி**
**வார்த்தையும் பேசி**
**வளைசிலம்ப வார்கலைகள்**
**ஆர்ப்பரவஞ் செய்ய**
**அணிகுழல்மேல் வண்டார்ப்பப்**
**பூத்திகழும் பொய்கை**
**குடைந்துடையான் பொற்பாதம்**
**ஏத்தி இருஞ்சுனைநீர்**
**ஆடேலோர் எம்பாவாய்!**

தங்களை இளைப்பு ஏதும் இன்றிக் காக்க வேண்டும் என்று மேலைத் திருப்பாட்டில் வேண்டிக் கொண்ட கன்னியர்கள், இத்திருப்பாட்டில் அவனது பரந்த அருளைப் பாராட்டி நீராட நினைவு கொண்டு, அதற்கேற்ற வண்ணம், 'ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' என்று தொடங்கினர்.

வினைகள் இருவகைப்படும். அவை நல்வினை, தீவினை என்பனவாம். நல்வினை செய்வார் பொற்படி

சேர்தலும், தீவினை செய்வார் அருநரகு சேர்தலும் இயல்பு எனச் சிலப்பதிகாரம் செய்யும். அவரவர் தாம் தாம் செய்யும் வினைகளுக்கேற்பவே இறைவனால் கூலி பெறுகின்றனர். ஒருவனை விட்டு நீங்காத நிழல்போல், நல்வினையும், தீவினையும் ஒருவனை விடாது தொடர்கின்றன. எழுபிறப்பு உண்டென்று நம்புவது நம் மரபு. 'எழுமை எழுபிறப்பும்' என்பர் திருவள்ளுவர்.

**" ஏழ்பிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப்**
**பண்புடை மக்கள் பெறின்"**

என்னும் திருக்குறளால் திருவள்ளுவர்க்கு எழு பிறப்பு உடன்பாடாதல் உறுதி. "செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்" என்ற மணிவாசகரின் மணிமொழி, ஈண்டு 'ஆர்த்த பிறவி' என வந்துள்ளது. 'ஆர்த்த பிறவித்துயர்' என்பது வினைப் பயன்களை நுகர்விக்க வந்த பிறவியாகிய துன்பமாகும். "இறந்த பிறப்பில் எய்திய வெல்லாம் பிறந்த பிறப்பிற் காணாயோ நீ" என்பது சிலம்பு உணர்த்தும் செந்நெறி. எனவே பிறவி என்பதே துன்பம் என்ற கருத்தும் உண்டு. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார்" என்னும் திருவள்ளுவர் குறளை நோக்கும்பொழுது இறைவன் திருவடிப் பேறு பெறாதார் மீண்டும் மீண்டும் இவ்வுலகிற் பிறந்து கொண்டேயிருப்பர் என்பது பெற்றாம். "பிறந்தார் உறுவது பெருகிய துன்பம் பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்" என்று மணிமேகலைக் காப்பியம் முழங்கும். எனவே உலகின் பல சமயங்களும் பிறவியினைப் பிணியென்றே கருதியமை புலப்படும். ஆனால் அருளாளர்கள் கிடைத்த பிறவியைச் சிவனது அருள்பெற்று உய்தற்குரிய நல்ல வழி எனக்கொண்டு "அவனருளாலே அவன்தாள்" வணங்கினர். "வாய்த்தது ஈது நந்தமக்கு ஒரு பிறவி" என்று கருதியமை அவனோடு உற்றுப் பெறும் இன்பமேயாகும்.

பிறவிப் பிணி அகல வேண்டுமெனில் இருவகைத் தூய்மைகளும் எய்த வேண்டும். ஒன்று புறத்தூய்மை, பிறிதொன்று அகத்தூய்மை. புறத்தூய்மை நீரான் அமையுமாதலால் பொய்கையிற் புகுந்து நீராட வந்தனர். அதனால் உடல் மாசு அகன்றது. ஆண்டவன் அருளைப் பரவிப் பாடி நிற்றலால் மனம் மாசு நீங்குகிறது. எனவே மனவிருள் அகன்று ஒளி துலங்குகின்றது. ''சென்றாடு தீர்த்தங்களானார் தாமே'' என்று திருவாலங்காட்டுத் திருத்தாண்டகம் குறிப்பிடுமாப் போல், சிவன் தூய தெளிந்த நீரைப் போன்றவனாயிருத்தலின் 'தீர்த்தன்' என அழைக்கப் பெற்றான்.

அடுத்து, 'தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்' என்றனர். சைவர்கள் கோயில் என்று சொன்ன அளவிலேயே அது சிதம்பரத்தைக் குறிக்கும். தெய்வச் சேக்கிழார் பெருமானும் 'ஆனாத சீர்த்தில்லை' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் தில்லையின் சிறப்பைத் திருத்தமுறக் குறிப்பிடுவார்.

அகண்ட வெளியையே அரங்கமாக்கிப் பெருமான் கூத்தாடுகிறான். ஆதலின் 'சிற்றம்பலத்தே கூத்தன்' என்றார். கையில் அனலை ஏந்தி ஆடுவதனால் 'தீயாடும் கூத்தன்' என்றார். கூத்து இருவகைப்படும். ஒன்று விநோதக் கூத்து; பிறிதொன்று சாந்திக் கூத்து. இறைவன் ஆடுங்கூத்து சாந்திக் கூத்தாகும். இக்கூத்து, உயிர்கட்குப் பிறவி வெப்பத்தை மாற்றி இன்பமூட்டும் தன்மை வாய்ந்ததாகும். மேலும் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு, இறைவன் ஐந்தொழில் இயற்றும் பான்மையையுணர்த்துவது இக்கூத்து என்பாருமுளர். 'வானும், குவலயமும் எல்லோமும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' என்றார். வான், காற்று, நீர், தீ, நிலம் என்னும் ஐந்து பூதங்களும் இறைவனால் உலக உயிர்களின் நன்மையை நோக்கிப் படைக்கப்பட்டவை. இவ்வைந்தையும் குறிப்பாகச் சுட்டவே முதலாவது வானையும், இறுதி

மாக உள்ள நிலத்தையும் 'வானும் குவலயமும்' என்று கூறி, மற்ற மூன்று பொருள்களையும் உள்ளடக்கினார். இறைவன் புரியும் ஐந்தொழில்களாவன: படைத்தல், காத்தல், கரத்தல் அல்லது அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். காத்தலில் மறைப்பும், அழித்தலில் அருளலும் அடங்கும் காரணம் பற்றி முத்தொழில்களாக—காத்தல், படைத்தல், கரத்தல்—என்று கூறப்படுதலுமுண்டு.

சிவபெருமான் வினைப்பயன்களை நுகர்விக்கவந்த பிறவியாகிய துன்பம் நீங்கும்படி, நாம் அனைவரும் ஒலியெழுப்பி மகிழ்ச்சியோடு ஆடுதற்கமைந்த தூய நீர் வடிவானவனும், நன்மை தரும் தில்லைத் தலத்தின்கண் ஞானசபையினிடத்தே கையில் அனலேந்திக் களிப்புடன் கூத்தினை இயற்றுபவனும், சுட்டி அறியப்படுவதான ஆகாயத்தையும் நிலவுலகத்தையும் மற்றெல்லா உயிர்ப்பொருள்களையும் உயிரில்லாப பொருள்களையும் காத்தும் படைத்தும் ஒடுக்கியும் விளையாடுபவனாகிய சிவபெருமானது 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தையும் ஓதி, கையில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒலிக்கவும், நீண்ட மேகலைகள் பேரொலியை உண்டாக்கவும், மலர்களால் புனையப்பட்ட கூந்தலின்மேல் வண்டுகள் மகிழ்ச்சியுடன் ஒலிக்கவும், தாமரை மலர்கள் பூத்துக் குலுங்கும் பொய்கையினிடத்தே நீரைத் துளைத்து, நம்மை உடைப்பொருளாகவுடைய சிவபிரானது அழகிய திருவடிகளைப் போற்றி, பெருமையும், குளிர்ச்சியும், குடிப்பதற்கு இனிமையும் உடைய சுனைநீர்போலும் குளத்து நீரினில் நீராடுவோமாக— என்று சொல்லிக் கன்னியர்கள் நீராடி மகிழ்ந்தனர் என இத்திருப்பாட்டு கூறுகிறது.

ஆர்த்த பிறவித்
துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்! நற் றில்லைச்சிற்
றம்பலத்தே தீயாடும்
கூத்தன்! இவ் வானும்
குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும்
கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி
வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய
அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை
குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர்
ஆடலோர் எம்பாவாய்!

## 13. பைங்குவளைக் கார்மலரால்

பைங்குவளைக் கார்மலரால்
　　செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்
　　பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு
　　வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும்
　　எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற்
　　புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச்
　　சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக்
　　குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்
　　தாடேலோர் எம்பாவாய்.

நம் முன்னோர்கள் இயற்கையில் ஈடுபாடு மிக்கவர்கள். தொல்காப்பியனார் முதற்பொருள் என நிலத்தையும் பொழுதினையுமே குறித்தார். இயற்கையின் இனிய பின்னணியில் மனித வாழ்வு ஏற்றம் பெற்றது. இயற்கை என்னும் பின்புலம் இல்லாமல் பழந்தமிழ் இலக்கியங்களில் மனித வாழ்க்கை சித்திரிக்கப்படுவதில்லை. ஐவகை நிலத்திலும் வாழ்ந்த மக்களும் தத்தம் நிலக் கடவுளரை இனிய இயற்கைச் சூழலிலேயே வைத்துக் கண்டனர். அவ்வகையில் மாணிக்கவாசகப் பெருமான் இத்திருப்பாடலில் ஓர் அழகிய இயற்கை வருணனையினை நம்முன் கொண்டு வந்து காட்டுகின்றார். அவர் காட்டும் உவமை,

உமையம்மைக்கும் பொருந்துகிறது; உமை கேள்வனாம் சிவனுக்கும் பொருந்துகிறது. ஏன்? இருவருக்குமேகூட ஒரு சேரப் பொருந்துகின்றது.

''பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம் போதால் அங்கம் குருகு இனத்தால், பின்னும் அரவத் தால், தங்கண் மலங் கழுவுவார் வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்குமடு'' என்பது தொடக்க வருணனையாகும்.

பிராட்டியார் உமையம்மையை வைத்து இவ் வருணனையைக் காணும்பொழுது பசுமை தங்கிய குவளை யாகிய கரிய மலர் போன்று கண்கள் உடைமையானும், சிவந்த தாமரையாகிய அழகிய மலர் போன்று திருமுக முடைமையானும், கரங்களில் வளையல் தொகுதியாக அணிந்திருத்தலினானும், பின்னிய பாம்புகளை அணிகலன் களாக உடைமையானும், உயிர்கள் தங்களைப் பிணித் துள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் அழுக்குகளைப் போக்கிக் கொள்வதற்கு வேண்டி வந்தடைதலானும், எங்கள் தலைவியாகிய இறைவியாம் உமாதேவியாரை ஒத்த மடு இது என்பது பொருளாகின்றது.

அடுத்து சிவபெருமானை ஒக்கும் திறமாவது:

பசிய குவளையாகிய கரிய மலரையொத்த கழுத் துடைமையானும், சிவந்த தாமரையாகிய அழகிய மலரை யொத்த திருமுகம் உடைமையானும், உடலில் வெண்மை நிறம் வாய்ந்த வெண்ணீறு பூசியுள்ளமையானும், பின்னிய பாம்புகளை அணிகலன்களாக அணிந்துள்ளமையானும், உயிர்கள் தங்களைப் பிணித்துள்ள மூவகை அழுக்குகளைப் போக்கிக் கொள்ள வந்தடைதலானும், எங்கள் தலைவனாகிய சிவபெருமானையொத்துள்ளது இத்திருக் குளம் என்பது.

அடுத்து, பிராட்டியையும் பிரானையும் ஒக்கும் திறமாவது:

பசிய குவளையாகிய கரிய மலரையொத்த கருமை நிறம் வாய்ந்த திருமேனியையுடைய பிராட்டியையும், செந்தாமரையாகிய அழகிய மலரையொத்த செம்மை நிறம் வாய்ந்த திருமேனியுடைய பெருமானையும் திருக்கைகளில் வளையல்களைத் தொகுதியாகவுடைய பிராட்டியையும், பின்னிய பாம்புகளை அணிகலன் களாகத் தரித்த பெருமானையும் உயிர்கள் தமக்குள்ள மலமாகிய அழுக்குகளைத் துடைத்துக் கொள்வதற்கு வேண்டி, எங்கள் பிராட்டியினிடத்தும் பெருமானிடத்தும் வந்தடைதலினாலும் இம்மடு அவரிருவரையும் ஒத்தது என்பது மேலைத் திருப்பாட்டில் சிவபிரானது புகழ்பாடி நீராடுதற்கு மனம் துணிந்த கன்னியர்கள் இத்திருப் பாட்டில், தாங்கள் நீராடுதற்குப் புகுந்த பொய்கை உமாதேவியாரையும், சிவபிரானையும் ஒத்ததென மனம் துணிந்தவராய்ப் 'பைங்குவளைக் கார் மலராய்' எனச் சொல்லத் தொடங்கினர்.

இவ்வாறாக உமாதேவியையும், சிவனையும் ஒத்துக் காணப்படுகின்ற மடுவில் புகுந்து, தாவித்தாவி, முன் கையிலுள்ள சங்கு வளையல்கள் ஒலிக்கவும், கால்களில் அணிந்துள்ள சிலம்புகள் வளையல்களை ஒலிக்கக் கலந்த முறையாக ஆரவாரிக்கவும், நகில்கள் மேலெழவும், அளைக்கப்படும் நிர் மேலெழவும், தாமரை மலர்கள் நிறைந்த அழகிய நீரில் தாவி நீராடுவோமாக—என்று கன்னியர்கள் களிப்புடன் கூறுகின்றார்கள்.

குவளை மலர்கள் உமையம்மையின் அருளொழுகும் கண்களுக்கு ஒப்பாகும் என்பது 'குவளைக் கண்ணிக் கூறன் காண்க' என்னும் திருவாசகத் திருவண்டப் பகுதியான் அறியலாம். இறைவியின் மேனியின் வண்ணம் கருமை நிறம் என்பது ''சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே சுடர் மரகதமடுத்தாற்போல், அத்தனால் உமையோடு இன்புறுகின்ற ஆலவாயாவதும் இதுவே'' என்னும்

திருஞானசம்பந்தரின் திருவாலவாய்ப் பதிகத்தானும் அறியலாம்.

அப்பர் பெருமான் தம் திருவேகம்பப் பதிகத்தில் 'குன்றியில் அடுத்த மேனிக் குவளையங் கண்டர்' என்பதனால் இறைவன் குவளை மலரன்ன கண்டத்தவர் என்பது விளங்கும்.

எல்லாப் பொருள்களிலும் இறைவனையே கண்டார்கள் என்பதே இப்பாடற் குறிப்பாகும். இக்கருத் தமைந்த நம்மாழ்வார் தம் திருப்பாசுரம் ஒன்று ஈண்டுக் கருதத்தக்கது.

ஒன்றிய திங்களைக் காட்டி
ஒளிமணி வண்ணனே என்னும்
நின்ற குன்றத்தினை நோக்கி
நெடுமாலே வாஎன்று கூவும்
நன்று பெய்யும் மழைகாணில்
நாரணன் வந்தான்என்று ஆலும்
என்றுஇன மையல்கள் செய்தான்
என்னுடைக் கோமளத் தையே.

* * *

பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்
பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவு
வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும்
எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற்
புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச்
சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக்
குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்
தாடேலோர் எம்பாவாய்.

## 14. காதார் குழையாட

காதார் குழையாடப்
பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட
வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச்
சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி
அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச்
சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி
அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை
வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி
ஆடேலோர் எம்பாவாய்!

சென்ற திருப்பாட்டில் நாட்காலே நீராடப்போந்த கன்னியர் தாமரைப் பூம்பொய்கையிற் பாய்ந்து பாய்ந்து, முகேரென்னக் குடைந்து குடைந்து, இறைவன் கழல் பாடி நீராடத் தொடங்கியதனை அறிவுறுத்திய மணிவாசகப் பெருந்தகையார், இத்திருப்பாட்டில், அவர்கள் உடம்பின் உறுப்புகளின் மேல் அணிந்திருந்தனவும், பிறவும் அசைந்து நின்ற காட்சியினை வருணிப்பார் ''காதார் குழையாடப்

பைம்பூண் கலனாடக் கோதை குழலாட வண்டின் குழா மாட'' என்று தொடங்கினார்.

குழை என்பது மகளிருடைய காதணியாகும். பழங் காலத்தில் அஃது ஓலையான் இயன்றதாயிருந்தது. பின்னர்ப் பொன்னால் இயன்றதாயிற்று. 'குழை' என்ற சொல் இளந்தளிரை உணர்த்தி நிற்கும். இளந்தளி ரன்னவோர் அணிகலனைப் பெண்டிர் தம் செவிகளில் அந் நாளில் அணிந்திருந்தனர். சங்க இலக்கியத்திலேயே 'குழை' கூறப்பட்டுள்ளது. 'குழையாட' என்றதனால் செவியும் செவியினையுடைய தலையும் அதனைத் தாங்கி ஏந்தி நின்ற கழுத்தும் அசைந்தன எனப் பெறப்பட்டது. பசிய பொன்னாலாகிய அணிகலன்கள் 'பைம்பூண்' எனப் பட்டன. நீராடுகின்ற காலையிலும் அவர்கள் அணிகலன் களை அணிந்திருந்தனர் என்பது அவர்களின் செல்வச் செழிப்பைக் குறித்தவாறாம். தலை அசைந்ததாலும் உடன் குழலும் அசைந்தது. கூந்தல் அசைந்த அளவில் அக்கூந்தலில் சூடப்பெற்றிருந்த மலர்களில் அமைந்திருந்த தேனை உண்டு உறங்கிக் கிடந்த வண்டின் கூட்டங்களும் அசைந்தனவாயிற்று. எனவே 'வண்டின் குழாமாட' என்றார். இவ்வாறு நான்கு முறை 'ஆட' என்ற வினை யெச்சம் ஆடி, பாடி என்ற வினையெச்சங்களைத் தொடர்ந்து 'ஆடுக' எனும் வியங்கோள் வினையீறாக முடிந்திருப்பது ஓர் உயரிய உண்மையை உணர்த்தும் என்பர் சைவ சித்தாந்திகள். இங்ஙனம் உரைத்தது இறையருள் நிலையை அடைதற்குப் படிமுறையைக் கற்பிப்பது போலும் என்றும், ஞானம் வீடு பெறுதற்குச் சாதனம் என்று அருள் நூல்கள் குறிப்பிடும் என்றும், அது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் என நான்கு கூறுபாடுகளையுடையது என்றும் குறிப்பிட்டு, அதற்கு எடுத்துக்காட்டாக,

**கேட்டலுடன் சிந்தித்தல் நிட்டை கிளத்தலென**
**ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்** — *சுபக்கம்:276*

என்னும் சிவஞான சித்தியார்ப் பாடலையும் கூறுவர். காது கேட்டலையும், பைம்பூண் கலன் சிந்தித்தலையும், குழல் தெளிதலையும், வண்டின் குழாம் நிட்டையினையும் குறிப்பாற் புலப்படுத்தி நிற்கின்றன என்பர்.

கன்னியர்கள் குளிர்ந்த நீரில் குளித்து, சிற்றம் பலத்தைப் பாடியும், நான்மறையின் பொருள் அமைந்த புகழ்ப் பாடலைப் பாடியும், அப்புகழ்ப் பாடலால் உணர்த்தப்படும் பொருளாகும் திறத்தைப் பாடியும் ஒளி வடிவாய்த் திகழும் சிவபிரானது மேன்மையைப் பாடியும், இறைவனது அடையாள மாலையாக விளங்கும் கொன்றை மாலையைப் பாடியும், சிவன் எல்லாவுயிர்க்கும் முன்னவனாகத் திகழும் திறத்தைப் பாடியும், அவன் யாவர்க்கும் எல்லாவற்றிற்கும் முடிவிடமாயுள்ள தன்மை யைப் பாடியும், உலகியலில் வெறுப்பு வருமாறு வேறு படுத்தி, உயிர்களுக்குச் சிவஞான அமிர்தை ஊட்டிப் பாதுகாத்து, மேலேறி நிற்கும் வளையல்கள் அணிந்த கைகளையுடைய இறைவியினது திருவடி மலர்களின் பெருமையைப் பாடியும் நீராடுவோமாக என்கின்றனர்.

ஞானம் கைவரப் பெற்றவர் பிறவி வெப்பத்தை நீக்கிக் கொள்ள முனைவர். எனவே அது கருதிச் சீதப் புனலாடுகின்றனர். மார்கழிப் பனிக் காலத்து வைகறைப் போது நீராடுதலின் அது சீதப்புனலாயிற்று. பிறவி வெப்பந்தீர முயல்வர், அடுத்துச் சிவன் கழலே சிந்திக்க முற்பட வேண்டுமன்றோ! எனவே சிற்றம்பலம் பாடினர். அதன்பின்னர் வேதங்களுக்கெல்லாம் வித்தகப் பொருளாய் விளங்கும் எம்பெருமானைப் பாடினர். பின்னர் அப் பொருள் ஆமாறு பாடினர். ஏனெனில் மணிவாசகரே பிறிதோரிடத்தில் இறைவனை,

**மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து**
**என் மனத்திடை மன்னிய மன்னே**

— கோயிற் திருப்பதிகம்:5

என்பர். சோதி என்பது பேரொளி. இறைவன் சோதிப் பிழம்பாய் விளங்குகிறார். 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்பது அருளாளர் மொழிந்த தொடரன்றோ! ''சொல்லக விளக்கது சோதியுள்ளது'' என்பது அப்பர்தம் நமச்சிவாயத் திருப்பதிகம். கொன்றைமாலை சிவ பிரானது அடையாளப் பூமாலை. கொன்றைமரம் பூத்துத் தாழ்ந்திருந்த காட்சியைக் கண்ட ஆனாய நாயனார்க்கு அக்காட்சி சிவபெருமான் திருவுருவை நினைவூட்டியது.

**சென்றணைந்த ஆனாயர்**
**செய்தவிரைத் தாமமென**
**மன்றல்மலர்த் துணர்தூக்கி**
**மருங்குதாழ் சடையாம்போல்**
**நின்றநறுங் கொன்றையினை**
**நேர்நோக்கி நின்றுருகி**
**ஒன்றிய சிந்தையி லன்பை**
**உடையவர்பால் மடை திறந்தார்.**

— ஆனாய நாயனார் புராணம்:21

ஆதியும் அந்தமுமாய் முதலும் முடிவுமாய் இறைவன் விளங்குகிறான் என்பதனை ஆளுடைய பிள்ளையாரும்,

**அந்தமா யுலகாதியும் ஆயினான்** — திருவாரூர்:1

என்று குறிப்பிடுவர்.

உயிர்கட்கு உலகியல்பில் உவர்ப்புத் தோன்றுமாறு செய்வித்துத் துன்பக் குறியினின்றும் தூக்கிக் கரை சேர்த்து, மெய்ஞ்ஞான நிலைக்கேற்றுவது இறைவனது திருவடிகளாகும் திருவருட்பேறே என்பர் அப்பர் பெருமானும் என்பதனை,

**இருள்தரு துன்பப் படல**
**மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்**
**பொருள் தரு கண்ணிழந்து உண்**
**பொருள் நாடிப் புகலிழந்த**

குருடரும் தம்மைப் பரவக்
கொடுநரகக் குழிநின்று
அருள்தரு கைகொடுத்தேற்
றுமையாறன் அடித்தலமே — திருவையாறு:4

என்றும் திருவையாற்றுப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இறைவனது புகழையும், அவனது கருவியாக விளங்கி வினையாற்றும் இறைவியாகிய சத்தியினது புகழையும் பாடி நீராடுவோமாக என்றனர்.

காதார் குழையாடப்
பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட
வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச்
சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி
அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச்
சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி
அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை
வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி
ஆடேலோர் எம்பாவாய்!

## 15. ஓரொரு காலெம்பெருமான்

ஓரொருகால் எம்பெருமான்
என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா
நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே
பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம்
ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்!
வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய்!

இறைவன், இறைவி ஆகிய இருவர்தம் சிறப்பினைக் குறிப்பிட்ட மாணிக்கவாசகர், இறைவனுக்கு ஆட்பட்டு விட்ட ஒருத்தியின் சொல்லும் செயலும் இவ்வாறிருந்தன என்று கன்னியருள் ஒருத்தி, மற்றையோருக்கு அறிவிப் பாள் போன்று உணர்த்தும் போக்கில் இத்திருப்பாட் டினை அமைத்துள்ளார்.

'வார் உருவ பூண் முலையீர்' என்பது விளி. 'கச்சினை யுடைய அழகிய அணிகலன்கள் அணிந்த நகில்களை யுடையீர்' என்பது இதன் பொருளாகும். 'வார் உருவி நிற்றல்' என்ற குறிப்பால் கன்னி மணப்பருவம் உற்றிருக் கிறாள் என்பது பெறப்பட்டது. 'பூண்முலை' என்ற குறிப்பால் முலை சுரக்கும் பாலைக் குழவிகட்கு ஊட்டி வளர்க்கும் தாய்போல், இறைவனது சத்தி, உயிர்களுக்குப் பரிந்து நிற்கும் நிலையினை வெளிப்படுத்தியவாறாம்.

இவ்வாறு விளித்துச் சிவபெருமான் திருவருள் பெற் றாள் ஒருத்தியின் சொல்லும் செயலும் இவ்வாறு இருந் தன என அறிவிப்பாள் ஒருத்தி,

**ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே**
**நம்பெரு மான்சீரொருகால் வாயோவாள்**
**சித்தங்களிகூர, நீரொருகால் ஓவா**
**நெடுந்தாரை கண்களிப்பப் பாரொருகால்**
**வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்**

என்றாள்.

''ஒவ்வோர் சமயத்தில் எமது தலைவனே என்று பல முறை சொல்லிச் சொல்லியே, நமது தலைவனுடைய புகழினை ஒருமுறையோடு நிறுத்தாது வாய் ஓயாது பேசுவாள்'' என்றாள். உலகில் வாழும் உயிர்கள் துன்பப் படுவதெல்லாம் 'தான்' என்னும் அகந்தையால் அமைவ தென்றும், தம்மையும் ஏனைய பொருள்களையும் உடைப் பொருள்களாக இறைவன் உடையவன் என்றும், அனுபவத்தால் இறைவனே தமக்குக் கதியாவான் என்றும் நினைவுக்குக் கொண்டுவரும் அடியவர், ஒவ்வோர் அமையத்தில் எம்பெருமான் என்று பலமுறை அரற்றுவார் என்பது விளங்க, 'ஓரொருகால் எம்பெருமான் என் றென்றே' என்றார். ஒருயிர் எப்பொழுது தன்னை இறை வனுக்கு முற்றிலும் அடிமை என்று நினைத்துக் கொள் கிறதோ அப்போதுதான் இறைவனை உணர்தல் கூடும்.

''தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்'' என்னும் சிவஞானபோத அவையடக்க வெண்பா இக் கருத்துடன் மிளிர்தல் காணலாம்.

**என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்**
**தன்னை நானும் முன்னேதும் அறிந்திலேன்**
**என்னைத் தன்னடி யான்என்று அறிதலும்**
**தன்னைநா னும்பிரான் என்றறிந் தேனே**

(தனிக்குறுந்தொகை: 8)

என்ற திருநாவுக்கரசர் அருள்மொழி இக்கருத்தினை உள்ளடக்கியதாகும்.

இறைவன் திருப்புகழினையே இடையறாது உலக உயிர்களின் வாய் ஓதல் வேண்டும் என்னும் கருத்தில் திருஞானசம்பந்தப் பெருமானும்,

**அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை எப்போதும்**
**பன்னுஞ்சீர் வாயதுவே** (திருப்பிரமபுரம்: 3)

என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை—இவனை—பிறவா யாக்கைப் பெரியோனை—உலக முதல்வனைத் தனது தலைவனென்று நினைவூட்டிக் கொள்கையினாலும், அவனது திருப்புகழ் களை வாய்விட்டு அரற்றியதாலும், அவள் மனத்தே மகிழ்ச்சி மீதூர்ந்தது. எனவே 'சித்தம் களிகூர' என்றார். இதுவே சிவானந்த நிலை எனப்படும்.

**கண்பனிக்கும் கைகூப்பும் கண்மூன் றுடை**
**நண்பனுக்கென நாள் கொடுப்பேனெனும்**
**வண்பொலித் தேன் வலஞ்சுழி மேவிய**
**பண்பனிப்பொனைச் செய்த பரிசிதே''**

(திருவலஞ்சுழி: 9)

என்பது திருக்குறுந்தொகை. தன்னை இறைவன்பால் ஒப்புவித்து விட்டாளாதலினால் மற்றைத் தேவரை மதி

...துவள் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள் என்பதனை 'விண்ணோரைத் தான் பணியாள்' என்றாள்.

**திருவும் மெய்ப்பொருளுஞ் செல்வமும்**
**எனக்கு உன் சீருடைக் கழல்கள் என்றெண்ணி**
**ஒருவரை மதியாது உருமைகள் செய்து**
**மூடியும் உறைப்பனாய்த் திரிவேன்**
(வட திருமுல்லைவாயில்: 1)

என்கிறார் சுந்தரர். இறையருள் வாய்க்கப் பெற்றோர் சித்தராவர். அரசர்க்கெல்லாம் அரசனாக— பேரரசனாக விளங்குபவன் சிவபெருமான். அவன்மாட்டுப் பித்தேறி நின்றான். இவ்வண்ணமாக அடிமை கொள்ளுகின்ற ஞானவடிவினர் எவரோ அவரது திருவடிகளை வாய் நிரம்ப நாம் பாடிக்கொண்டு, அழகும் மணமும் மிக்க தாமரைத் தடாகத்து நீரில் திளைத்துத் தாவித் தாவி நீராடுவோமாக என்றாள்.

**மயிலாகும் தன்னடியார்க்கு அருளும் தோன்றும்**
என்பர் அப்பர்.

இப்பாடல் கருத்துடன் திருநாவுக்கரசர் பெருமானின் ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்'' என்று தொடங்கும் திருத்தாண்டகப் பாடல் நினைவுகொள்ளத் தக்கதாம். மேலும்,

**சிந்தனை நின்தனக்காக்கி நாயினேன்தன்**
**கண்ணினை நின்திருப்பாதப் போதுக்காக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குஉன்**
**மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள்ஆர**
**வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை**
**மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்**
**தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்**
**தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே**

என்னும் திருவாசகத் திருச்சதகப் (26) பாடலும் ஒப்பிட்டுக் காண வேண்டும்.

ஓரொருகால் எம்பெருமான்
  என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள்
  சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா
  நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள்
  விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே
  பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம்
  ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர்!
  வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்(து)
  ஆடேலோர் எம்பாவாய்!

## 16. முன்னிக் கடலைச் சுருக்கி

முன்னிக் கடலைச்
 சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை
 ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம்
 பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற்
 சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி
 நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா
 எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு
 முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய்
 மழையேலோர் எம்பாவாய்!

இறையருள் நிலை இதுவென்று கூறியருளிய மணிவாசகப் பெருந்தகையார், 'முன்னிக் கடலைச் சுருக்கி' எனத் தொடங்கும் இத்திருப்பாட்டில் சிவானுபவ நிலைக்குக் காரணமாகத் திகழ்வது இறைவன் தன்

கணக்கிலாத் திருவருளே என்று கூறி, அத்திருவருள் உயிர்களுக்குக் கிட்டும் நிலையினை மழையெனும் எடுத்துக் காட்டுத் தந்து விளக்குகின்றார்.

கன்னியர்கள் முதலில் மழை மேகத்தினை வாழ்த்துகிறார்கள். ''மழையே! கடலை முன்னிச் சுருக்கி எழுந்து உடையாள் என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டு இடை இன்மின்னி பொலிந்து, எம்பிராட்டி திருவடிமேல் பொன்னம் சிலம்பு இன்சிலம்பி, திருப்புருவம் என்ன சிலை குலவி, நம் தம்மை ஆளுடையாள் தன்னில் பிரிவிலா எம் கோமான் அவள் அன்பர்க்குள் நமக்கும் முன் முன்னிச் சுரக்கும் இன் அருள் சூழ என்னப் பொழியாய்'' என வேண்டுகின்றனர்.

சிவனார் திருவடிகளை வாயாரப் புகழ்ந்து பாடி நீராடுகின்ற கன்னியர்கள் தடாகத்து நீரைக் கண்டு, அது மழை பொழிந்ததன் பயனால் வாய்த்தது என்று கருதி, அதனைச் சிவனும் உமையும் திருவருளைச் சொரிந்து நிற்கின்ற தன்மையாக நீரைப் பொழிவாய் என்று போற்றத் தொடங்கி, முதற்கண் மழையை விளிப்பாராய் 'மழையே' என்றார். ஈண்டு மழை என்பது ஆகுபெயராய் மேகத்தை உணர்த்தியது. மேகத்தை விளித்த அவர், அதன் படிப்படியான செயல்களைத் தொடர்ந்து சிந்திப்பாராய் வெண்முகிலாகத் தொடக்கத்தில் துலங்கிய அம்மேகம், கடலைச் சென்றடைந்து நீரை முகந்து கொண்டு வானிடை வலமாக எழுந்தபொழுது, கருநிறம் பெற்று மழைமேகம் ஆன நிலையினைக் குறிப்பிடுவார் போன்று, 'முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள் என்னத்' திகழ்ந்தது என்றார். உமாதேவியாரின் திருமேனி கருநிறமாதலின் கடலில் நீர் முகந்த மேகம் வானிடை எழுந்துபோது கருநிறம் பெற்று மழைமேகம் ஆயினமையை உவமை கூறினார். திருவிளையாடற்புராணத்திலும்,

**தெய்வ நாயகன் நீறணி மேனிபோற் சென்று**
**பௌவம் ஏய்ந்து உமை மேனிபோற் பசந்து**
**பல்லுயிர்க்கும்**
**எவ்வ மாற்றுவான் கரந்திடும் இன்னருளென**
**கௌவை நீர் சுரந்தெழுந்தன கனைகுரன் மேகம்**
(திருநாட்டுப் படலம்: 2)

என்று குறிப்பிடுவதும் ஒப்பு நோக்கற்குரியது. மேலே வானவீதியில் எழுந்த மேகம் மின்னலை உமிழ்ந்தது 'எம்மை ஆளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து' என்றார்கள். சிற்றிடை மின்னலின் கீற்றுக்கு உவமிக்கப் படுதல் மரபு. மின்னல் மின்னிய பிறகு இடி இடித்தல் வழக்காதலின் 'எமபிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி' என்றார்கள். உமாதேவியார் கால்களில் அணியும் பொற்சிலம்புகள் ஒலிப்பன போல இடி இடித்தது என்றனர். இவ்வாறு மழைக்குரிய அறிகுறிகள் வானிடைத் தோன்றும்பொழுது, வானவில் தோன்றுவதுண்டு. அதுவும் தோன்றியது என்று குறிப்பிடும் போக்கில் 'திருப்புருவம் என்னச் சிலை குலவி' என்றார். உமாதேவியாரின் திருப்புருவங்கள் போலும் வானவில் வானிற் றோன்றியது என்பது குறிப்பு. பின்னர் மழை பொழிவதனைச் சிவனாரும் உமாதேவியாரும் தம்மை வந்தித்து வாரம் காட்டி வழிபடும் அடியவர்களுக்கு அருள்பாலிக்கும் திறம் ஒக்கும் என்பார். நம்தம் 'ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான்' அன்பர்க்கும் முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய்' என்றனர்.

இக்கன்னியர்கள் உமாதேவியாரை 'நந்தம்மையா ளுடையாள்' என நவின்றனர். 'உடையாள் தன்னிற் பிரிவிலா எஙகோமான்' என்பது, 'உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன்' என்றும், 'வண்டார் குழல் அரிவையொடு பிரியா வகை பாகம் பெண்தான்

மிகவானான்' என்றும் திருஞானசம்பந்தர் (வேணிபுரப் பதிகம் - 1) கூறியுள்ளமை கொண்டு அறியலாம். மேலும் மணிவாசகரே கோயில் மூத்த திருப்பதிகத்தில் (1) ''உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி' என்றும் குறிப்பிட்டுள்ளதனால் உமையொடு உடனுறையும் இறைவன் திறம் காணப் பெற்றோம்.

இத்திருப்பாட்டு, பாவைப்பாட்டின் உறுப்பாயுள்ள மழை வேண்டுதலைக் குறித்து நின்றதாகும். இத்திருப் பாட்டில் உமாதேவியாரை உடையாள், எம்மை யாளுடையாள், எம்பிராட்டி, நந்தம்மையாளுடையாள், அவள் என ஐமுறையாகப் பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். ஐந்து வகையாக இறைவி குறிக்கப்படுவது அவள் ஐந்து சக்திகளாக அமைந்து உயிர்களுக்குப் பேரின்பத்தைக் கூட்டுதற்பொருட்டே என்பர். உலகின் நலம் குறித்து மழை பொழிவது போல, உயிர்கள் நலம் குறித்து அருள் பொழிய வேண்டும் என்று ஆண்டவனைக் கன்னியர் வேண்டினர் என்று கொள்ளலாம்.

**அருளே யுலகெல்லாம் ஆள்விப்பது ஈசன்**
**அருளே பிறப்பறுப்ப தானால் — அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்**
**எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவ தெனக்கு**

என்ற காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதிப் பாடல் (9) இக்கருத்தை உணர்த்தும். மழை வேட்டலைக் குறித்தும் ஆண்டாள் திருப்பாவைப் திருப்பாட்டொன்றும் ஈண்டுக் கருதத்தக்கதாகும்.

**ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்**
**ஆழியுட் புக்குமுகந்து கொடு ஆர்த்தேறி**
**ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்**
**பாழியந் தோளுடை பற்பநாபன் கையில்**

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து ஏலோர் எம்பாவாய் (4)

முன்னிக் கடலைச்
சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை
ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம்
பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற்
சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி
நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா
எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு
முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய்
மழையேலோர் எம்பாவாய்!

## 17. செங்கணவன்

செங்க ணவன்பால்
　　திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர்
　　இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி
　　நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள்
　　தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந்
　　தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை
　　அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்
　　பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து)
　　ஆடேலோர் எம்பாவாய்!

இறைவி இறைவர்களது திருவருள் போன்று மழை பொழியுமாறு கன்னியர்கள் வேண்டினர். இத் திருப் பாட்டில் இறைவி உயிர்களின் குற்றங்களை நீக்குதலும், இறைவன் அவைகள் ஈடேற்றம் பெற அருளும் திறமும் உணர்த்தப்படுகின்றது எனலாம். மழையை வேண்டிநின்ற கன்னியர், தங்கள் பெண் குலத்திற்குத் தனி நாயகியாகத் திகழும் உமாதேவியைக் கருத்திற் கொள்வாராய் 'கொங்குண் கருங்குழலி' எனத் தொடங்கினர்.

'மணம் மண்டிக்கிடக்கும் கருநிறம் வாய்ந்த கூந்தலையுடைய உமையம்மையே! சிவந்த கண்ணை உடைய திருமாலினிடத்தும், நான்கு திருமுகங்களை உடைய படைப்புக் கடவுளாம் பிரமனிடத்தும், இந்திரன் முதலான தேவர்களிடத்தும், இன்னும் பிறிதாகவுள்ள அண்டங்களிலுள்ள உயிர்களிடத்தும், இல்லாததாகிய ஒப்பற்ற பேரின்பத்தை நம்மிடத்தில் கொண்டு கூட்ட, நம்மைக் குற்றங்களினின்றும் நீக்குதலும், இவ்வுலகில் நம் வீடுகளாகிய நெஞ்சங்கள்தோறும் எழுந்தருளி, தன் சிவந்த தாமரை மலரையொத்த அழகிய திருவடியைக் கொடுத்து நிலவுமாறு அருளுகின்ற வீரனாயும், அருள் பார்வை முற்றிலும் கொண்ட அரசனாயும், அவன் வழி வழி அடிமைகளாகிய எங்களுக்குத் தெவிட்டாத அமுதமாயும், நம் தலைவனாயுமுள்ள இறைவனை நன்மை பயக்குமாறு பாடி, தாமரை மலர்கள் நிறைந்து தோன்றும் தெளிந்த நீரையுடைய பொய்கையில் தாவிக்குதித்து நீராடுவோமாக' என்று கன்னியர்கள் கூறினர்.

இறைவன் அருளுகின்ற இன்பம் வேறு எவராலும் தரவொண்ணாத இன்பம் என்று குறிப்பிடும் நிலையில் 'எங்கும் இலாததோர் இன்பம்' என்றனர். 'செங்கண் அவன்' செங்கணவன் என்று நின்றது. சிவந்த கண்களை உடையவன் திருமால் ஆவன். கம்பநாடரும் இராமனைக் குறிக்குமிடத்து ''செங்கணும் கரிய கோல மேனியாகி எங்கணும் தோன்றுகின்றார் எனைவரோ இராமன் என்பார்'' என்று குறிப்பிடுவர். கண் அவன் கணவன் எனக் குறுகி நின்றது. செந்தாமரைக் கண்ணுடையவன் திருமாலாதலின் 'செங்கணவன்' என்றார். நான்கு திசைகளிலும் பார்க்கும் நான்கு முகங்களைக் கொண்டவனாதலின் பிரமன் திசைமுகன் எனப்பட்டான். இந்திரன் முதலானவர்களைக் குறிக்கத் தேவர்கள் என்றனர். 'எங்கும்' என்ற சொல் தேவருலகம் தவிர்த்துப் பிற உலகங்களையும் குறித்து நின்றது. இயலாததோர்

இன்பம் ஒப்பற்ற இன்பமாம் பரமன் அளிக்கும் பேரின்பத்தைச் சுட்டியதாகும்.

எங்கும் கிடைக்காத பேரின்பம் நமக்குக் கிடைக்க வேண்டுமென்றால் முதலில் நம் மனமாசுகள் நீங்குதல் வேண்டும். மனமாசுகள் நீங்கிய உள்ளத்தைத் தான் இறைவன் குடிகொண்டு எழுந்தருளும் கோயிலாகக் கொள்வான். இறைவன் நம்மீது கொண்ட கருணையினால்தான் இவ்வாறு எழுந்தருளுகின்றான் என்பதனை மாணிக்கவாசகரே,

**பத்தர் சூழ்ப் பராபரன் பாரில்வந்து பார்ப்பான் எனச்**
**சித்தர் சூழச் சிவபிரான் மூதூர் நடஞ்செய்வான்**
**தில்லை**
**எத்தனாகி வந்து இல்புகுந்து எமைஆளுங் கொண்டு**
**எம்பணி கொள்வான்**
**வைத்த மாமலர்ச் சேவடிக்கண் நம்சென்னி மன்னி**
**மலருமே** (சென்னிப்பத்து: 4)

என்பதனால் விளங்கும். ''கும்பிடுவான் யாரென்று தேடுகின்றான் கோவிந்தன்'' என்பது திவ்வியப் பிரபந்தத் தொடர்.

எவ்வளவுதான் முயன்றாலும் எளிதில் அவன் திருவருளைப் பெற்று உய்யுமாறில்லை. அவனருளைப் பெறுவதற்கும் அவனருள் வேண்டும். அவன் அடியினைப் பரவுவதற்கும் அவனருள் வேண்டும். இதனையே 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பர் மணிவாசகர் சிவபுராணத்தில். நம் மனத்தே அவன்தன் ஒப்பற்ற திருவடிகளைப் பொருந்தச் செய்தல் என்பது அருமையுடைய செயலாதலின், அதனை வெற்றிகரமாகச் செய்து முடித்த சிவனைச் 'சேவகன்' என்றார். 'சேவகன்' என்ற சொல் சிறந்த வீரன் என்னும் பொருளைத் தருவதாகும்.

ஆவகை நாமும் வந்து அன்பர் தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர் பாதங்கள் காட்டும்செல்வச்
சேவலம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெருமான் புரம்செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொற்செய் சுண்ணம் இடித்து நாமே
(திருப்பொற்சுண்ணம்: 16.)

என்னும் மணிவாசகரது திருப்பொற்சுண்ணப் பாட்டு, 'சேவகன்' எனச் சிவனாரைச் சித்திரிப்பது காண்க. தாமாகவே வந்து திருவடி அருளுகின்ற கருணையைப் போற்றுவார் 'அங்கண் அரசை' என்றனர். அரசன் தன் மக்களைக் காப்பது போல ஈண்டு அரசனாகிய சிவன் அனைத்து அண்டங்களிலுமுள்ள உயிர்களையும் காக்கும் தலைவனாக உள்ளமையால் 'அங்கண் அரசு' என்றும், அடுத்துக் காத்தலோடன்றி அடியவர்களுக்கு அமுதமாய் நின்று பேரின்பம் நுகருமாறு செய்தலின் 'அடியோங்கட்கு ஆரமுதே' என்றனர். நமக்கு நன்னலம் நல்குகின்ற இறைவனைப் பாடுதலே கடன் எனக் கருதுவார் 'நயந்திகழப் பாடி' என்றனர். இறைவன் திருவடிகளை உள்ளக்கிழியில் உருவெழுதி வைக்கவேண்டும் என்று அப்பர் பெருமானும் சுட்டியமை ஈண்டுக் கருதத்தக்கது.

வெம்மை நமன்றமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மை யுன்றாள் என்றன் நெஞ்சத்து எழுதி
வையீங்கிதழில்
அம்மையடியேற் கருளுதி என்பதிங்கு ஆரறிவார்
செம்மைதரு சத்திமுற்றத்துறையுஞ் சிவக் கொழுந்தே.
(திருச்சத்திமுற்றம்: 6)

கன்னியர்கள் இவ்வாறு சிவன் கழல் போற்றி தெள்ளிய நீரில் நீராடி மகிழ்ந்தனர்.

செங்க ணவன்பால்
    திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர்
    இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி
    நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள்
    தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந்
    தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை
    அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப்
    பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து)
    ஆடேலோர் எம்பாவாய்!

# 18. அண்ணாமலையான் அடிக்கமலம்

அண்ணா மலையான்
அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின்
மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி
கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித்
தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய்
அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி
இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய்
நின்றான் கழல்பாடிப்
பெண்ணே!இப் பூம்புனல்பாய்ந்(து)
ஆடேலோர் எம்பாவாய்!

திருவண்ணாமலை திருக்கோயில் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். 'நினைக்க முத்தி தரும் அண்ணாமலை' என்பர். 'ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை' என்று அருணகிரிநாதர் கூறுவார். 'உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய ஒருவன் அண்ணாமலையான்' என்பர் ஞானசம்பந்தப் பெருமான்.

உயிர்களின் பாகங்களைக் கட்டறுத்து, இறைவன் அருளுகின்ற எளிவந்த தன்மையினை இதுகாறும் சொல்லிவந்த மணிவாசகப் பெருந்தகையார், இத்திருப் பாட்டில் இறைவனது அத்துவித நிலையைக் கன்னியர்கள் வாய்வழிப் புலப்படுத்தி நிற்கின்றார். இங்குக் கன்னியர்கள் தங்களுள் ஒருத்தியைப் பெண்ணே என விளித்துப் பேசத் தொடங்குகின்றனர்.

''பெண்ணே! திருவண்ணாமலையில் திருக்கோயில் கொண்டுள்ள அண்ணாமலையானது திருவடித் தாமரை மலர்களைச் சார்ந்து வணங்கும் தேவர்களது முடியின்கண் விளங்கும் பலவகைப்பட்ட இரத்தினங்களும் பொலி விழந்து ஒளி மழுங்கியது போலவும், எங்கும் பரவி நிற்கும் இருள் நீங்க, உலகெங்கினும் காலையில் கதிரவன் ஒளி தோன்றலும், குளிர்ச்சி பொருந்திய ஒளி நீங்கி விண்மீன்கள் மறைந்து நிற்கின்ற தன்மை போலவும், பெண்ணாகியும் ஆணாகியும் அலியாகியும், ஒளியை உமிழும் இரு சுடர்களாம் சூரியன் சந்திரன் இவைகளைப் பொருந்திய ஆகாயமாகியும், நிலமாகியும், இவைகளுக்கெல்லாம் வேராகியும் ஞானத்தால் உணர்வார்க்கு அமுதமயமாகியும் கலந்து என்றும் எங்கும் நீக்கமற விளங்குபவனாகிய சிவபெருமானது திருவடிகளைப் பாடி இந்த அழகு நிறைந்த நீரினில் தாவிக் குதித்து நீராடுவோமாக'' என்று பேசினர்.

இறைவனும் உயிரும் ஒன்றிட்டு அத்துவிதமாய் நின்றபோது இருவரது நிலையும் இரண்டு உவமைகள் வழி ஈண்டு விளக்கப்படுகின்றன. அண்ணாமலையான் திருவடிகளைச் சென்று தொழும் விண்ணோர் தம் முடியின் மணியொளி வீறு அற்றாற் போலவும், கதிரவன் ஒளி வானிடைப் பரவலும் ஒளி மழுங்கிய தாரகைக் கூட்டத்தின் தன்மை போலவும் என உவமைகள் இரண்டு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இறைவனது திருமுடியை அன்னப்பறவை உருத்தாங்கித் தேடினான் பிரமன்.

அடியைத் தேடப் பன்றியுரு தாங்கிச் சென்றார் திருமால். அப்போது சிவன் இவர்கள் இருவரும் காணவொண்ணா நிலையில் அழற்பிழம்பாகக் காட்சி தந்தான். எனவே அண்ணலின் அடித்தாமரை மலர்கள் பேரொளிப் பிழம்பாகத் திகழும் தன்மையுடைத்தாகும். திருநாவுக்கரசர் பெருமானும் தம் திருவையாற்றுத் திருவிருத்தப் பாட்டில் (17)

**சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன தூமதியோடு**

என்று குறிப்பிடுவர். கண்டராதித்த தேவர் என்னும் சோழர் குலத்துதித்த ஞான வள்ளலும்,

**நெடியானோடு நான்முகனும் வானவரும் நெருங்கி**
**முடியான் முடிகள் மோதியுக்க முழுமணியின்திரளை**
**அடியார் அலகினால் திரட்டும் மணி தில்லையம் பலத்துக்கு**
**அடியார் கொன்றை மாலையானைக் காண்பதும் என்று கொலோ**

என்று தேவர்கள் தங்கள் மணி மகுடத்துடன் சென்று திருவருள் பெறச் சிவபெருமானைத் தரிசித்த பான்மையினைத் திருவிசைப் பாவினில் விளக்குவர்.

மேற்காட்டப் பெற்ற இரண்டு உவமைகளும் இறைவனும் உயிரும் முத்தி நிலையில் ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் ஆகாமல் கலந்து நிற்கும் பெற்றியினை அறிவித்தனவாகும்.

இவ்வாறு அத்துவிதமாய் நின்ற சிவன், அறிவுப் பொருள், அறிவில் பொருள்களோடும் கலப்பினால் பேதமற்றும், பொருட்டன்மையால் பேதமாயும், உயிர்க்குயிராதல் தன்மையால் பேதா பேதமாயும் விளங்குகின்றான் என்பார். பெண்ணாகி, ஆணாய், அலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும்

வேறாகிக் கண்ணார் அமுதமாய் நின்றான் என்றார். பெண்ணாகி ஆணாய் அலியாய் என்பது உயர்திணை அறிவுப் பொருள்களைக் குறித்து நின்றது. ''பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க'' என்று திருவாசகத் திருவண்டப் பகுதியானும் மணிவாசகர் இதனை உணர்த்துவர். அறிவில் பொருள்களைக் குறிக்க 'விண்ணாகி மண்ணாகி' என விளம்பினார். ஐம்பூதங் களின் முதலாக உள்ள விண்ணையும் இறுதியாக உள்ள மண்ணையும் குறிப்பிட்ட வகையினால் இடைப்பட்ட நீர், நெருப்பு, காற்று ஆகிய மூன்றனையும் உடன் குறிப்பிட்டவாறாம். ஆகாயம், கதிரவன், மதி, கணக் கிலாத நட்சத்திரங்களை உடைமை காரணம் பற்றிப் 'பிறங்கொளிசேர் விண்' எனப்பட்டது.

**இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி**
**இயமானனாய் எரியும் காற்றுமாகி**
**அருநிலைய திங்களாய் ஞாயிறாகி**
**ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகிப்**
**பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்**
**பிறருருவும் தம்முருவும் தாமேயாகி**
**நெருநலையாய் இன்றாகி நாளையாகி**
**நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே**

என்னும் திருத்தாண்டகமும் இக்கருத்தை வலியுறுத்தல் காணலாம்.

சிவனைக் கண்ணார் அமுதம் எனச் சொல்லியிருத்தல் கருதற்பாற்று.

'பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்தாடு' என்னும் தொடர், நீராடப் போந்த கன்னியர்கள் புலர்காலைப் போது வரை நீராடினார்கள் என்னும் குறிப்பினைத் தருவதாகும்.

திருவெம்பாவை திருவண்ணாமலையில் மாணிக்க வாசகப் பெருமானால் இயற்றப்பட்டது என்பதற்கு 'அண்ணாமலையான்' என்றது ஒரு குறிப்பென்பர்.

**கடல் வண்ணனும் வேதக்கிளர் தாமரை மலர்**
**மேலுறை கேடில் புகழோனும்**
**அளவாவணம் அழலாகிய அண்ணாமலை**

என்று திருஞானசம்பந்தரும் தம் தேவாரப் பதிகத்தில் (105) குறிப்பிட்டிருப்பது புராணக்கதையை உள்ளடக்கியதாகும்.

**அண்ணா மலையான்**
**அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்**
**விண்ணோர் முடியின்**
**மணித்தொகைவீ றற்றாற்போல்**
**கண்ணார் இரவி**
**கதிர்வந்து கார்கரப்பத்**
**தண்ணார் ஒளிமழுங்கித்**
**தாரகைகள் தாமகலப்**
**பெண்ணாகி ஆணாய்**
**அலியாய்ப் பிறங்கொளிசேர்**
**விண்ணாகி மண்ணாகி**
**இத்தனையும் வேறாகிக்**
**கண்ணார் அமுதமுமாய்**
**நின்றான் கழல்பாடிப்**
**பெண்ணே! இப் பூம்புனல்பாய்ந்(து)**
**ஆடேலோர் எம்பாவாய்!**

## 19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்

உங்கையிற் பிள்ளை
உனக்கே அடைக்கலம்என்(று)
அங்கப் பழஞ்சொற்
புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்!
உனக்கொன் றுரைப்போங்கேள்!
எங்கொங்கை நின்அன்பர்
அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லாது
எப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எங்கண்
மற்றொன்றுங் காணற்க!
இங்கிப் பரிசே
எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு(று)?
எமக்குஏலோர் எம்பாவாய்!

இறைனது அத்துவித நிலையை அறிவுறுத்திய மணிவாசகப் பெருந்தகையார் 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்ற இச்சிறந்த திருப்பாட்டில், உலக உயிர்கள் தம்மையெல்லாம் சிவபெருமானிடத்து அடைக்கலப் பொருளாக ஒப்புவித்த பின்னர் அவைகட்கு யாதொரு செயலுமின்றி, சிவன்மாட்டு வருபயன்களை

விரும்புதலும் தகுதிப்பாட்டிற்குக் குறைவானதென்று உணர்த்தத் தொடங்கும் வகையில் கருத்துகளைப் பெய்துள்ளார்.

இறைவனின் அத்துவித நிலையைப் புகழ்ந்து பாடிய கன்னியர்கள், ஏற்கெனவே உயிர்கள் அனைத்தும் சிவன் மாட்டு அடைக்கலம் புகுந்துள்ள செயலினை நினைவூட்டு வாராய் 'எங்கள் பெருமான்' என்று ஆண்டவனைத் தம்மோடு அகப்படுத்திக் கூறினர்.

''உங்கையிற் பிள்ளை உமக்கே அடைக்கலம்'' என்பது ஒரு பழமொழி. ஒருவரிடத்து ஒரு மகனைக் கையடை யாக — அடைக்கலமாக ஒப்புவித்தபோது அவனைக் காக்க வேண்டிய கடப்பாடு அப்பெரியவருடையது என்பதனை உணர்த்தி நிற்பது அப்பழமொழி. 'தமக்கு அன்புபட்டவர், பாரமும் பூண்பர்' என்பது அப்பர்தம் திருவாரூர் அறநெறித் தேவாரம் (2).

அந்நாளில் சின்னஞ்சிறியரை ஆசிரியர்பால் கல்விப் பயிற்சிக்காக இவ்வாறு சொல்லி ஒப்படைத்தல் வழக்கம் என்பது தெரியவருகிறது. அடைக்கலம் என்று ஒருவர் கேட்டு, அதனை ஏற்றுக்கொண்டபின் அவரைக் சாத்தல் என்பது கடமையாகி விடுகிறது.

புதுக்குதல் என்பது நல்ல சொல்; மீண்டும் சொல் லுதல், நினைவூட்டுதல் எனப் பொருள்படும். அடைக்கலம் தந்தவர்க்கு அவர்தம் கடமையை அறிவுறுத்துவது? அது கேட்டு அவர் உள்ளம் சினத்தலும், பொறாது சலித்தலும், என் செய்வதென்று கலங்கலும் கூடும். ஆயினும் தடங் கருணைப் பெருங்கடலாகத் திகழும் சிவனே உலக உயிர்களை அடைக்கலமாக ஏற்று இருப்பதனால் மென்மையாக அவனுக்கு எடுத்துரைக்கும் போக்கில் 'உனக்கென்று உரைப்போம், கேள்' என்கின்றனர் கன்னியர்கள்.

'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்' என்பது விநயமாக உரையாடும் கன்னியர் தம் பேச்சுத் திறத்தினை உணர்த்தி நின்றது.

**" பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்"**

என்பார் அப்பரடிகளும் (திருத்தூங்கானை மாடம், திருவிருத்தம் 1).

சிவபெருமானை மனமொழி மெய்களால் போற்றுவதே தம் கடன் என நினைப்பார் போல அதனை உடன் பாட்டான் அன்றி எதிர்மறை முகத்தான் உணர்த்துவார் போல,

**எங்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க**
**எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க**
**கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க**

என்றனர்.

எங்களது நகில்கள் உன்னுடைய அன்பர்கள் அல்லாதாரது தோள்களிலும் பொருந்தாதொழிவதாகுக. எமது கைகள் உனக்கன்றி வேறொருவருக்கும் எத்தகைய தொண்டுகளையும் செய்யாதொழிவனவாகுக. எமது கண்கள் இரவிலும் பகலிலும் உன்னையன்றி வேறொரு பொருளையும் காணாதொழிவதாகுக'' என்றனர்.

இறைவன் அடைக்கலமாகக் கொண்ட பிறகு நிகழும் செயல்கள் அனைத்தும் இறைவன் இச்சைப்படி நிகழும் செயல்களாதலின் கன்னியர் இவ்வாறு கருதினர்.

**அன்றே என்றன் ஆவியும் உடலும்**
**உடைமை எல்லாமும்**
**குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட**
**போதே கொண்டிலையோ**

**இன்றோர் இடையூறு எனக்குண்டோ**
**என்தோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய்**
**நானோ இதற்கு நாயகமே.**

(குழைத்தபத்து : 7)

சிவனடியார்களே தங்கள் கணவராக வாய்க்க வேண்டும் என்பதும், சிவனடிக்கே தொண்டு செயும் எங்கள் கைகள் என்பதும், இரவு பகல் எந்நேரமும் சிவனடியன்றிப் பிறிதொன்றை எங்கள் கண்கள் காணா என்பதும் கன்னியர் கொண்ட உறுதியாகும்.

**நனவிலும் கனவினும் நம்பா வுன்னை**
**மனவினும் வழிபடன் மறவேன் அம்மான்**

(திருவாவடுதுறை: 3)

என்பர் திருஞானசம்பந்தரும்.

இவ்விண்ணப்பங்களை முறையே நீ ஏற்றுக் கொண்டால் சூரியன் எந்தத் திசையில் உதித்தாலும் கவலை இல்லை எங்களுக்கு என்றார்கள். 'எங்கெழிலென் ஞாயிறு எமக்கு' 'ஏங்கெழிலென் ஞாயிறென விண்ணணம் வளர்ந்தோம்' என்பது சிந்தாமணி (1793).

சிவத் தொண்டர்கள் தங்கள் கரணங்கள் அனைத்தும் சிவன் திருப்பணிக்கே உரியன எனக் கருதினர்.

இத்திருப்பாட்டு, இறைவனுக்கு மனம், மொழி, மெய் ஆகிய முக்கரணங்களாலும் பணி செய்யும் பாங்கினை உணர்த்தி நிற்கின்றது.

**உள்ளத்தையும் இங்கு என்னையும்**
**நின்கையினில் ஒப்புவித்தும்**
**கள்ளத்தைச் செய்யும் வினையால்**
**வருந்தக் கணக்கும் உண்டோ**

பள்ளத்தில் விழும் புனல்போல்
படிந்து நின்பரம இன்ப
வெள்ளத்தில் மூழ்கினர்க்கே
எளிதாம் தில்லை வித்தகனே

எனும் தாயுமானார் வாக்கும் ஈண்டு நினைக்கத்தக்கது.

உங்கையிற் பிள்ளை
உனக்கே அடைக்கலம்என்(று)
அங்கப் பழஞ்சொற்
புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான்!
உனக்கொன் றுரைப்போங்கேள்!
எங்கொங்கை நின்அன்பர்
அல்லார்தோள் சேரற்க;
எங்கை உனக்கல்லாது
எப்பணியுஞ் செய்யற்க;
கங்குல் பகல்எம்கண்
மற்றொன்றுங் காணற்க;
இங்கிப் பரிசே
எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு(று)?
எமக்குஏலோர் எம்பாவாய்!

# 20. போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர்

**போற்றி அருளுகநின்**
**ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுகநின்**
**அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும்**
**தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றியெல் லாவுயிர்க்கும்**
**போகமாம் பூங்கழல்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும்**
**ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனும்**
**காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட்**
**கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீர்**
**ஆடேலோர் எம்பாவாய்!**

'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்ற மாலைத் திருப்பாட்டில் கன்னியர்கள், தங்கள் மனம், மொழி, மெய் என்னும் முக்கரணங்களும் ஊழி முதல்வனாம் சிவனின் திருப்பணிக்கே ஆடுமாறு விண்ணப்பித்த முறைமையை அறிவுறுத்திய மணிவாசகப் பெருமான், இத் திருப்பாட்டில், கன்னியர்கள் நீராடி முடித்துக் கொண்டு, சிவபெருமான் தம்மைக் காத்தருள வேண்டும் எனப் போற்றி நின்றதனை உணர்த்துகின்றார்.

''எங்களைப் பாதுகாத்து உன்னுடைய எப் பொருட்கும் முன்னே விளங்கிய திருவடி மலர்களை அருளு வாயாக'' என முதல் வேண்டுகோளினை விடுக்கின்றனர்.

இறைவன் திருவடிகளை வழுத்துவதே முறை. அவனுடைய திருவருளுக்கு உருவாயமைந்தது திருவடி நிலையேயாகும். திருவள்ளுவரும் தம் கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் ஏழு பாடல்களில் இறைவன் திருவடி களையே கூறினார். இறைவன் திருவடிகளைப் பரவுவதே உலக உயிர்களின் கடமையாகின்றது. பிறவியின் பெரும் பயன் இறைவன் அடிசேர்தலே என்பது பெரியோர் கண்ட துணிபாகும். முதலாக இருக்கும் இறைவனே முடிவாகவும் இருக்கிறான் என்பதனை உணர்த்த 'போற்றியருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்' என்றார். திருநாவுக்கரசர் பெருமானும் ''ஆதியும் அந்தமும் ஆவன ஐயாறன் அடித் தலமே'' (திருவையாறு:17) என்பர். திருவடிக்கு முதன்மை கூறுங்கால் மலரெனவும், ஈறு கூறுங்கால் செந் தளிர்களெனவுங் கூறியது ''ஒடுங்கி யுளதாம்'' (சிவஞான போதம்—சூத்திரம் 1) என்னும் சைவ வுண்மை புலப்படற் கென்க. ''தளிரினின்றே மலர் தோன்றும் உண்மை கருதத் தக்கது'' என்பது கதிர்மணி விளக்கம். இவ் ஆதியினுக்கும் அந்தத்திற்கும் இடைப்பட்டனவாக இறைவனது ஐந் தொழில்களைக் குறிப்பர்.

''போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற் பாதம்'' என்பதனால் படைப்புக் குறிக்கப்பட்டது. ''போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்'' என்றதனால் அளித்தல் குறிக்கப்பட்டது. ''போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்'' என்றதனால் மறைத்தல் தொழில் குறிக்கப்பட்டது. ''போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்'' என்ற தனால் அருளல் குறிக்கப்பட்டது. இவ்வாறு ஐந்தொழில் களையும் சிவபெருமானது திருவடிகளே செய்தன என்பார்

பொற்பாதம், பூங்கழல்கள், இணையடிகள், புண்டரிகம், பொன்மலர்கள் என்றார்.

இறைவன் சத்தியே திருவடிகளாய் விளங்குவதாகக் கூறுவர். இறைவன் ஒருவனே கதிரவனும் ஒளியும் போலச் சிவனும் சத்தியுமாய்த் தாதான்மிய ஒற்றுமையால் இரு கூறுபட்டுப் பொதுமையில் நிற்கும் என்பர் சைவ சித்தாந்திகள். தீ ஒன்றாயினும் அடுதல் தொழிலுக்கு உதவுங்காலையில் அடுஞ்சத்தியாகவும், ஒரு பொருளை எரிக்கும்பொழுது சுடுஞ்சத்தியாகவும் கருதப்படுவது போல, சிவசத்தியொன்றே காரிய வேறுபாட்டால் பரை, ஆதிதானம், இச்சை, ஞானம், கிரியை எனப் பெயரிய சத்திகளாகவும் விளங்கும் என்று கூறுப.

சிவப்பிரகாசம் என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூல் ஐந்தொழிலின் சிறப்பினை,

**ஏற்ற இவை அரனருளின் திருவிளையாட்டாக**
**இயம்புவர்கள் அணுக்களிடர்க்கடல் நின்று மெடுத்தே**
**ஊற்றமிகு அருள்புரிதல் ஏதுவாக**
**உரைசெய்வர் ஒடுக்கம் இளைப்பொழித்தல் மற்றைத்**
**தோற்ற மலபாகம் வரக்காத்தல் போகம்**
**துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தலாகும்**
**போற்றலரும் அருள் அருளேயன்றி மாற்றுப்**
**புகன்றவையும் அருளொழியப் புகலொணாதே** (18)

என்று குறிப்பிடும்.

எல்லாவுயிர்களுக்கும் உண்மையான இன்ப அனுபவமாக இருப்பன சிவனது திருவடிகளே. உலகியல் இன்பத்திலிருந்து தம்மை விடுவித்து, மாறாத இறையின்பத்தைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்பதனைக் குறிக்கு முகத்தான் மணிவாசகரே தம் அச்சோப் பதிகத்தில் (3)

**பொய்யெலாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே**
**மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்**

**தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்**
**வண்ணம்**
**ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே**
(அச்சோ:3)

என்று குறிப்பிடுவது கருதத்தக்கது.

திருநாவுக்கரசர் பெருமானும் ஐயாறன் அடித்தலமே சிந்திக்கத்தக்கது என்ற கருத்தமைய,

**சிந்திப் பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்**
**முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்து**
**இருண்டு**
**பந்தித்துநின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி**
**அந்திப் பிறையணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே**
(தேவாரம்:5041)

என்று பாடியிருப்பது எண்ணத்தக்கது.

சுந்தரர் தம் திருப்பாண்டிக் கொடுமுடிப் பதிகத்தில்,

**மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப் பாதமே**
**மனம் பாவித்தேன்**
**பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை**
**வந்தெய்தினேன்**
**கற்றவர் தொழுதேத்தும் சீர்கரையூரிற்**
**பாண்டிக் கொடுமுடி**
**நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும்நா**
**நமச்சி வாயவே**

என்பர்.

காரைக்காலம்மையாரும்,

**இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை**
**என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்து**
**அறவா நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க**
**என்றார்**

என்று இறைவன் திருவடியின்கீழ்த் தங்கியிருத்தலையே வேண்டியதாகத் தெய்வச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுவர்.

ஐந்தொழில்களையும் இயற்றும் திருவடிகள் தம்மைக் காத்தருள வேண்டும் என்று கூறிய கன்னியர்கள் அவ் இறைவனை வாழ்த்துவதற்குக் காரணமாயிருந்தது மார்கழி நீராயினமையின் அதுவும் தம்மைக் காத்தருள்க என்பார் ''போற்றியாம் மார்கழி நீராடு'' என்றார்.

''போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்'' என்று சிவன் திருவடிகளைச் சிறப்பித்துப் பேசிய கன்னியர்கள் பொய்கை நீரையும் ஏத்திப் போற்றி வீடு திரும்பினர்.

இவ்வாறு 'போற்றியருளுக' எனத் தொடங்கி மார்கழி ''போற்றியாம் மார்கழி நீராடலோர் எம்பாவாய்'' என முடிகின்றது.

**போற்றி அருளுகநின்**
**ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுகநின்**
**அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும்**
**தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றியெல் லாவுயிர்க்கும்**
**போகமாம் பூங்கழல்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும்**
**ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனும்**
**காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட்**
**கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீர்**
**ஆடேலோர் எம்பாவாய்!**

## 1. போற்றி என் வாழ் முதலாகிய பொருளே

போற்றி! என் வாழ்முதல்
ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு
இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து
எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின்
திருவடி தொழுகோம்;
சேற்றிதழ்க் கமலங்கள்
மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை
யாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்!பள்ளி
எழுந்தரு ளாயே!

தமிழில் வழங்கும் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று 'திருப்பள்ளியெழுச்சி' யாகும். மாணிக்கவாசகப் பெருமானால் அருளிச் செய்யப்பெற்ற திருவாசகத்தின் ஒரு பகுதியாக இது விளங்குகின்றது. சிவபெருமானைத் திருப்பள்ளியை விட்டு எழுந்தருளுமாறு வேண்டுவதே இதன் பொருளாகும். எனவே 'பள்ளி யெழுச்சி' எனும் தொடர், பள்ளியினின்றும் துயில் உணர்ந்து நீங்குதலைக் குறித்தது ஆகின்றது.

இப் ‘பள்ளியெழுச்சி’ என்னும் இலக்கிய வகை நம் நாட்டில் பழங்காலந் தொடங்கியே நிலவி வந்தது என்பதற்குத் தொல்காப்பியனாரின் தொல்காப்பிய இலக்கணமே சான்றாகத் துலங்குகின்றது.

**தாவின் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்**

—தொல்: புறத்திணை; 36

என்னும் நூற்பா குறிப்பிடும் துயிலெடை நிலையுள் திருப்பள்ளியெழுச்சி அடங்குகின்றது. தம் வலியால் வெற்றிக்கு வித்திட்டுவிட்டுப் பாசறைக்கண் ஒரு சிறிது மன வருத்தமும் இன்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் — அதாவது நின்றேத்துவோர் அரசனைத் துயிலினின்றும் நீங்கி எழப் பாடுவது துயிலெடை நிலை என்று கூறப்படும். வைகறையில் துயிலெழுவது வழக்கமாதலின் அரசர்கள் தங்கள் தங்கள் அரண்மனைகளில் வைகறையிற் பாடும் பாணர்களை நியமித்திருந்தனர் என்பது பழந்தமிழ் நூல்கள் கொண்டு உணரலாம். இவ்வாறு நியமிக்கப் பெற்ற பாணர்கள் தாம் வாழ்த்திப் பாடும் அரசனது வெற்றிப் பெருமைகளையும் அவனுடைய முன்னோர் பெருமைகளையும் ஏத்திப் பாடுவது என்பது மரபு. அவ்வாறு துயிலுணர்த்துவது விடியற்காலத்தில் நிகழ்வது ஆதலின் புறவுலகில் நிகழும் நிகழ்ச்சிகளையுங் கூறிப் பள்ளியெழுச்சி பாடுவாராயினர். எனவே பள்ளியெழுச்சிப் பாடல்களில் வைகறை வருணனை கட்டாயம் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

தமிழில் திருவாதவூரடிகளாம் மாணிக்கவாசகர், ஆழ்வார்களுள் தொண்டரடிப்பொடியாழ்வார், பிற்காலப் பெரியவருள் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஆகிய

மூவர் இயற்றியருளிய திருப்பள்ளியெழுச்சி நூல்கள் புகழ் மிக்கவை. மாணிக்கவாசகர் பாடியருளிய திருப்பள்ளி யெழுச்சி சொற் சுருக்கமும் பொருளாழமும் உடைய தாகும். திருவாசகத்துள் இப்பகுதி 'திரோதான சுத்தி' என்று வழங்கப்படுகிறது. திரோதானம் என்றால் மறைப்பு. சுத்தி தூய்மை செய்வது. 'மறைப்பின் நீக்கம்' என்பது இதன் பொருளாகும். உலக உயிர் களுக்கு மறைப்பினைக் காட்டி வினைப்பயன் நுகருமாறு பக்குவம் செய்துவந்த திரோதான சத்தி, அருட்சத்தி யாக வெளிப்படும் அவசரம் நினைந்து இறைவனைப் பள்ளியெழுந்தருள்கவென விரும்பியபடியாகத் திருப் பள்ளியெழுச்சிப் பாடல்கள் அமைகின்றன.

**நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குல் புறத்திருளும்**
**மாறவரும் திருப்பள்ளி யெழுச்சியினில்**

என்று தெய்வச் சேக்கிழார் பெருமான், திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் திருப்பள்ளியெழுச்சியின் பயனைக் குறிப்பிடுவர். திருப்பெருந்துறையில் மணிவாசகப் பெருமான் பாடிய பாடல்களின் தொகுதி திருப்பள்ளி யெழுச்சியாகும்.

திருப்பள்ளியெழுச்சியின் முதற்பாடல் 'போற்றி என் வாழ் முதலாகிய பொருளே' எனத் தொடங்குகின்றது.

துயிலில் அழுந்தியுள்ள அரசனை அவன் பெயரும் பெருமையும் பாடி வைகறைப் பாணர் எழுப்புவதுபோல, மாணிக்கவாசகப் பெருந்தகையும் இறைவனது பெயர் களையும் பெருமைகளையும் கூறித் தமக்கும் தன் தலைவனுக்கும் இடையே அமைந்துள்ள தொடர்பால் தான் பெற்ற பயன் கருதி அழைப்பார்போல 'என் வாழ் முதலாகிய பொருளே போற்றி' என்று முதற்கண்

கூறினார். ‘இதழ்களையுடைய தாமரை மலர்கள் மலருகின்ற சேற்றினையுடைய வயல்களால் சூழப்பெற்ற திருப்பெருந்துறை என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமானே’ என்று புறநிலையிலும் அப்பெருமானைக் கண்டு ‘சேற்றிதழ் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப்பெருந்துறையுறை சிவபெருமானே’ என்றார். இது சிந்தனைக்கும் எட்டாத நிலையில் விளங்கும் இறைவன், நினைவாரது உள்ளத் தாமரைகளில் வீற்றிருக்க வருவன் என்பது குறித்தவாறாம். திருப்பெருந்துறை எனும் திருத்தலத்தின் சிறப்பினைத் திருவாதவூரடிகள் புராணம் இயற்றிய கடவுள் மாமுனிவர்

**வெம்பிறவி வேலைதனில் வீழ்வர்கள் எல்லாம்**
**நம்புசிவ நாமமெனும் நற்புணை பிடித்தால்**
**எம்பரன் அருட்கரையில் ஏறுதுறை யாமால்**
**அம்புவி மொழிந்துள பெருந்துறை அதன்பேர்** (58)

என்று உரைப்பர். உயிர்களை அருட்கரைக்கு ஏற்றுகின்ற துறையாதலின் இவ்வூர் திருப்பெருந்துறை என வழங்கப் படலாயிற்று.

‘ஏறு உயர் கொடி உடையாய்’ என அடுத்து அச்சிவபெருமானைப் பாராட்டினார். இடபம் பொறித்த உயர்த்திய கொடியை உடையவனே என்பதனால் உருவம் புலப்படும். முதலிற் கூறிய வாழ்முதலே அருவ நிலையை உணர்த்தும். திருப்பெருந்துறை சிவபெருமானே என்பது அருவுருவ நிலையைக் குறிக்கும். ‘எனையுடையாய்’ என்று அடுத்து மாணிக்கவாசகர் குறிப்பிட்டது இறைவன் உருவம் கொள்வதெல்லாம் உயிர்களைப் பக்குவப்படுத்தித் தன்னடிமைகள் என்று அவைகள் உணருமாறு செய்தலே யாதலால் அவ்வாறு அழைத்தார் எனலாம். அடுத்து ‘எம்பெருமானே’ என்றார், தன்னை அடிமை கொண்ட காரணத்தால் சிவபெருமான் தனக்குத்

தலைவன் ஆயினான் என்பது கருதி. இவ்வாறு மாணிக்க வாசகர், வாழ்முதலே என்றும், திருப்பெருந்துறை சிவபெருமானே என்றும், ஏறுயர் கொடியுடையாய் என்றும், எனை உடையாய் என்றும், எம்பெருமான் என்றும் ஐந்து தொடர்களான் விளித்தமையை இறைவன் செம்முகம் ஐந்துடையவன் எனும் குறிப்பில் என்றும், அம்முகங்கள் ஈசானம், தற்புருடம், அகோரம், வாம தேவம், சத்தியோசாதம் என்பன என்றும், இவை முறையே வடகிழக்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்குத் திசைகளை நோக்குவன என்றும், இதனால் இறைவன் எங்கும் நிறைந்து விளங்குவதோர் பொருளென்றும், சர்வ வல்லமை உடையவன் என்றும், உயிர்களுக்கு உயிராகும் தன்மையுடையவன் என்றும், ஞானம் ஊட்டுபவன் என்றும், உயிர்கள் அறம், பொருள், இன்பம் நுகருமாறு செய்பவன் என்றும், அவரவர்களுக்குப் போகங்களை வேகமாகக் கூட்டுபவன் என்றும் இம்முகங்கள் அறிவித்து நிற்கின்றன என்றும் பெரியோர் கூறுவர்,

அடுத்து, பொழுது விடிந்ததனைப் பணிவாகச் சொல்வார் போற்றி, புலர்ந்தது என்றார். அழகிய திருவடிகளின்மீது இணைக்கப்பட்ட இரு மலர்களாகிய விடு மலர்களைத் தூவி, உன் திருமுகத்தில் நாங்கள் உய்யும்படி அருளுகின்ற அழகிய புன்னகையைக் கண்டு நினது திருவடிகளை வணங்கும் முறைமையுடையோம் என்று கூற, ‘பூங்குழற்கு இணை துணைமலர் கொண்டு ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும் எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்’ என்றார். இறுதியில் ‘பள்ளி எழுந்தருளாய்’ என்று முடித்தார்.

திருமுகத்தால் பெறுவது அருளாகும். திருமுகம் அருளுவதால்தான் திருவடி தொழுகை வாய்க்கும் என்பது ‘அவனருளாலே அவன் தாள் வணங்கி’ எனும் திருவாசகச் சிவபுராணப் பகுதியானும் விளங்கும். உன்னைத்

தொழுவதையே நாங்கள் கடமையாகக் கொண்டிருக்கிறோம் என்பதையும் உணர்த்தி, சிவபெருமானைப் பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு வேண்டுவார் 'பள்ளி யெழுந்தருளாய்' என்றார்.

போற்றி!என் வாழ்முதல்
ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற்கு
இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து
எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின்
திருவடி தொழுகோம்;
சேற்றிதழ்க் கமலங்கள்
மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடை
யாய்!எனை உடையாய்!
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

## 2. அருணன் இந்திரன்

அருணன்இந் திரன்திசை
அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம்நின்
மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன்
எழஎழ, நயனக்
கடிமலர் மலரமற்
றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம்
முரல்வன; இவையோர்;
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும்
ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி
எழுந்தரு ளாயே!

மேலைத் திருப்பாட்டில் பொழுது புலர்ந்தது என்று அறிவுறுத்திய மாணிக்கவாசகப் பெருமான், அப்புலர் காலைப் பொழுதில் நிகழ்வனவாகிய அறிகுறிகளை உணர்த்த முற்படுவார் திருப்பெருந்துறை சிவபெருமானே என்றும், அருள்நிதி தரவரும் ஆனந்தமலையே என்றும், அலைகடலே என்றும் ஆண்டவனை விளித்தார். இங்கு இறைவனைக் கடலாகவும் மலையாகவும் விளித்திருப்பது ஒரு காரணம் பற்றியதாகும். மலை வறட்சிக் காலத்

யாவும் வளந்தரும் வள்ளண்மை கொண்டதாதலின் 'அருள்நிதி தரவரும் ஆனந்தமலையே' என்றார். தன்னை வணங்கும் அடியவர்களுக்கு இறைவன் சேமவைப்பாக விளங்கும் பேரின்ப வடிவான மலை போன்றவன் என்பதனை

**ஆராத இன்பம் அருளும்மலை போற்றி**

(சிவபுராணம்: 16)

என்றும்,

**இருள் கடிந்து அருளிய இன்ப வூர்தி**
**அருளிய பெருமை அருள்மலை யாகவும்**

—கீர்த்தித் திருவகவல்: 123—124.

என்றும்,

**நெஞ்சத்து இருளகல வாள்வீசி இன்பமருமுத்தி**
**அருளுமலை என்பது காணாய்ந்து**

—திருத்தசாங்கம்: 5

என்றும் வரும் திருவாசகத் தொடர்கள் கொண்டே அறியலாம்.

கடல் என்பது இறைவன் நெகிழ்ச்சியுடன் கூடிய பரமானந்தமாயிருத்தலைக் குறித்ததாகும். 'பரமானந்தப் பழங்கடல்' (திருவண்டப் பகுதி 66) என்னும் தொடரால் மணிவாசகர் திருவண்டப் பகுதியில் இறைவனைச் சுட்டுவர். நிற்பதும், நடப்பதுமாய பொருள்கள் அனைத்தும், நுரை திரை முதலியன கடலினிடத்தே தோன்றி யொடுங்குவது போல, இறைவனிடத்தே தோன்றி அவன்பாலே ஒடுங்கும் எனும் உண்மையினை 'முற்றத் துறந்த' பட்டினத்தடிகள்

**...............உளர்தரும்**
**அரையும் திரையும் நொட்புறு கொட்பும்**
**வரையில் சீகா வாரியும் குரைகடல்**
**பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி**

**எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்**
**தன்மை போலச் சராசர மனைத்தும்**
**நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்**
—கோயில் நான்மணிமாலை: 24

என்பர். பிறவி நோயைத் தீர்க்க மலைமேல் மருந்தாகவும், தேவர்கள் சாகாமலிருக்கக் கடலமுதமாகவும் விளங்கிய காரணத்தால் இறைவனை மலையென்றும் கடலென்றும் கூறினார் எனினும் அமையும்.

இவ்வாறு இறைவனை விளித்துவிட்டு, புறத்தே நிகழும் காலை நிகழ்ச்சிகளை அறிவிக்கத் தொடங்குவார் 'அருணன் இந்திரன் திசை அணுகினன்' என்றார். அருணன் கதிரவனது தேர்ப்பாகன். இந்திரன் திசையாவது கிழக்கு. இந்திரன் கிழக்கிலும், அக்கினி தென் கிழக்கிலும், இயமன் தெற்கிலும், நிருதி தென்மேற்கிலும், வருணன் மேற்கிலும், வாயு வடமேற்கிலும், குபேரன் வடக்கிலும், ஈசானன் வடகிழக்கிலும் வீற்றிருப்பர் என்பது வழக்கு. எட்டுத்திக்குப் பாலர்களான இவர்கள் எண்திசையிலும் காவலாக அமைவர். கதிரவன் கிழக்குத் திசையில் தோன்ற அதன் காரணமாக இருள் நீங்க ஒளி பரவுகிறது என உரைப்பாராய், இருள்போய் உதயம் அகன்றதென்றார். ஒளி வானில் பரவுகின்றமை சூரியன் மேலெழுகின்றமையான் என்பது விளங்க, 'நின்மலர்த் திருமுகத்தின் கருணையின் சூரியன் எழஎழ' என்றார். கதிரவன் எழுதலும் தாமரை மலர்கள் மலர்ந்தன என்பார் 'அண்ணலங் கண்ணாம் நயனக் கடிமலர் மலர' என்றார். இறைவனுடைய திருக்கண்களுக்கு ஒப்பாகத் தாமரை மலரைக் கூறுவது மரபு. தாமரை மலர்கள் மலர்ந்த அளவில் அம்மலர்களில் இதுகாறும் தங்கித் தேனை உண்டு மயங்கியிருந்த வண்டுகள் இசை பாடின என்பார் 'திரள்நிரை அறுபதம் முரல்வன' என்றார். வண்டுகள் வைகறைப்போதில் இசைபாடும் இயல்பின என்பது,

**மழலைவண்டு தடமலர் குடைந்துபுது**
**மதுவருந்தி நறுமல்லிகைச் சேக்கையின்**
**வடிபசுந் தமிழினிசை பயின்றபெடை**
**யொடுதுயின்றினிய செவ்வழிப் பாட்டினை**
**வருவிபஞ்சி பயிறரு மதங்கர் தெரு**
**மரமுரன்று நெடுவைகறைப் போய்ச்செழு**
**மலரிலஞ்சி தொறுமுலவு கந்தபுரி**
**மருவுகந்தனை யெமையனைக் காக்கவே**

என்னும் குமரகுருபர அடிகளாரின் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்ப் பாடல் கொண்டு தெளியலாம்.

கதிரவன் கீழ்த்திசையை நெருங்கிய அளவில் ஒளி பரவியதெனவும், ஒளி பரவியதும் தாமரை மலர்கள் மலர்ந்தன எனவும், தாமரை மலர்கள் மலர்ந்த அளவில், வண்டுக் கூட்டங்கள் இசை பாடின எனவும், ஒரு செயலோடு ஒரு செயலைத் தொடர்பு படுத்தித் திருவாத வூரடிகள் பாடியுள்ளது காணும்பொழுது நெஞ்சில் மகிழ்ச்சி மிகுகின்றது.

புறவுலகில் இச்செயல்கள் நடைபெற, இறையெனும் ஞானச்சுடர் நெருங்கி அன்பர்தம் மனத்தில் கவிந்திருந்த அகவிருளை நீக்கியது. இருள் அகன்ற இடத்தில் ஒளி உட்புகுவதும், இருள் மண்டிக் கிடக்கும் இடத்தில் ஒளி உட்புகுந்து, இருளை அகற்றுவதும் இயல்பிலே நிகழ் வதாகும். இறைவனின் கருணைக் கண்கள் ஞான வொளியை உமிழ்ந்த அளவில் ஆன்மாக்களின் நெஞ்சி னுள்ளே இதுகாறும் நிறைந்திருந்த அறியாமை இருள் அகன்றது. கதிரவன் கிழக்குத் திசையில் தோன்றி, மேலே சிறிது சிறிதாக எழ எழ, எவ்வாறு புறவிருள் நீங்கி, உலகம் துலக்கமுறத் தொடங்குகின்றதோ அதைப் போல இறைவனின் திருக்கண்களிலிருந்து ஞானச்சுடர் படிப்படியாக அவனை வணங்கிப் பாடித் தொழும் அடியவர்பால் படியவும், அகமாசுகள் அகன்று, ஒளி

வெள்ளம் நிறைந்தது என்று நயமாக மாணிக்கவாசகர் சொல்லுகின்றார்.

வண்டு பாடின எனுங் குறிப்பால் இறைவன் அடியார்களும், அவன் பொருள்சேர் புகழை இன்பத்தோடு பாடி நின்றனர் எனும் கருத்துப் புலப்பட்டமை காணத்தக்கது.

இவ்வாறு குறிப்பிட்டு, பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு வேண்டினர் என்பதாம்.

**அருணன்இந் திரன்திசை**
**அணுகினன்; இருள்போய்**
**அகன்றது; உதயம்நின்**
**மலர்த்திரு முகத்தின்**
**கருணையின் சூரியன்**
**எழஎழ, நயனக்**
**கடிமலர் மலரமற்**
**றண்ணல்அங் கண்ணாம்**
**திரள்நிரை அறுபதம்**
**முரல்வன; இவையோர்;**
**திருப்பெருந் துறையுறை**
**சிவபெரு மானே!**
**அருள்நிதி தரவரும்**
**ஆனந்த மலையே!**
**அலைகடலே! பள்ளி**
**எழுந்தரு ளாயே!**

## 3. கூவின பூங்குயில் கூவின கோழி

கூவின பூங்குயில்;
கூவின கோழி;
குருகுகள் இயம்பின;
இயம்பின சங்கம்;
ஓவின தாரகை
ஒளி; ஒளி உதயத்(து)
ஒருப்படு கின்றது;
விருப்பொடு நமக்குத்
தேவ!நற் செறிகழற்
றாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
யாவரும் அறிவரி
யாய்!எமக் கெளியாய்!
எம்பெரு மான்!பள்ளி
எழுந்தரு ளாயே!

சென்ற திருப்பாட்டில் கதிரவன் உதயம் காணு தலையும், அதன் காரணமாக விரிந்து பரந்த வானில் ஒளி பரவுதலையும், இரவெல்லாம் கூம்பியிருந்த தாமரை மலர்கள் மலர்தலையும், அது பொழுது தாமரை மலர் களில் தங்கியிருந்த வண்டுக் கூட்டங்கள் இன்னிசை பாடி யதனையும் விளங்கப் பாடிய மாணிக்கவாசகர், 'கூவின பூங்குயில் கூவின கோழி' எனத் தொடங்கும் இத்திருப் பாட்டில் பின்னர் நிகழும் காலை நிகழ்ச்சிகளை அறிவிக்க

முனைவார் முதற்கண் இறைவனை விளிப்பாராய்த் 'தேவ' என்றார். 'தேவ' என்னும் விளி அண்மை சுட்டியாகும். அவன் தேவ தேவனாக விளங்கும் திறத்தைச் செப்பியது. தேவர்களுக்கெல்லாம் தேவ னாக — மகாதேவனாக விளங்கும் இறைவன், உலக உயிர்களிடத்துக் கொண்ட அளவற்ற அருள் காரணமாகத் திருக்கோயில்களில் விளக்கமாக எழுந்தருளியுள்ளான் என்பதனை எடுத்து மொழிவார் போல் 'திருப்பெருந் துறையுறை சிவபெருமானே' என்றார். இறைவனை அவன் காட்டக் காட்டினால் அறியலாமே அன்றிப் பிறரால் எளிதில் அறியவொண்ணாதவன் என்பதனை விளக்க முற்படுவாராய் 'யாவரும் அறிவரியாய்' என்றார்.

**பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்**
**யாராலுங் காண்டற்கரியார் எமக்கெளிய பேராளன்**

—திருவம்மானை: 2

என்று மணிவாசகரே திருவம்மானைப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளபடி, பிறருக்கு அரியனாக விளங்கும் இறைவன் தன்னை வணங்கும் அடியவர்க்கு எளியவனாக இருக்கும் தன்மையை உணர்த்தியவாறாம். எனவே 'எமக்கு எளியாய்' என்றார். மேலைத் திருப்பாட்டுப் போன்றே, இத்திருப்பாடலிலும் 'தேவ' என்றும், 'திருப் பெருந்துறை சிவபெருமானே' என்றும், 'யாவரும் அறி வரியாய்' என்றும், 'எமக்கு எளியாய்' என்றும், 'எம்பெருமான்' என்றும் ஐந்து முறை ஆண்டவனை விளித்தனர்.

இனிக் காலைப்போதில் நிகழும் நிகழ்ச்சிகளை அறிவுறுத்துவான் வேண்டிப் 'பூங்குயில் கூவின' என்றார். குயில் இனிய இசையுடன் பாடக் கூடிய குறுந்தாளுடைய பிள்ளைப் பறவைகளில் ஒன்றாகும். அழகான குயில் இனிமையான குரலில் கூவிற்று.

ஈண்டு ஒரு நயமும் கூறுவர். குயிலை எவரும் பிடித்து வளர்க்க முற்பட மாட்டார்கள். குயில்கள் சோலைகளில் தங்கி, தமக்கு மகிழ்ச்சி மிகுகின்றபொழுது இனிய குரலெடுத்துக் கூவுவது வழக்கம். இவ்வாறு வெளியிற் பரந்து திரியும் பறவையான குயில் கூவிற்று. வீட்டில் வளரும் பறவைகள் கூவினவோ என்று வினவ முற்படு வார்க்கு விடை சொல்வதே போல, 'கோழி கூவின' என்றார். ஈண்டுக் கோழி என்பது சேவலைக் குறித்தது. அது வீட்டுப் பறவையாக நாட்டு மக்களால் வளர்க்கப் பெறுவது. வைகறையில் 'கொக்கரக்கோ' என்று குர லெடுத்துக் கூவி, உறங்குபவரை எழுப்புவது கோழியின் செயல். கொக்கு — மாமரம்; அதாவது மாமரமாக வடிவெடுத்து நின்ற சூரன். அது — வெட்டும் கோ — தலைவன் முருகன் — அதாவது பத்மாசூரனை வதஞ் செய்த முருகவேள் என்பதாகும். கோழி வைகறையில் மாமரமாக நின்ற சூரனைக் கொன்ற சுப்பிரமணியரைக் கூவி நிற்கிறது என்பர் முருக அடியார்கள்.

**பொறிமயிர் வாரணம் வைகறை இயம்பி (673)**

என்பது மதுரைக்காஞ்சி.

சேவலொடு பிற பறவைகளும் ஒலித்தன என்பார் 'குருகுகள் இயம்பின' என்றார். குருகுகள் சிறு பறவை களைக் குறிக்கும் அஃறிணை உயிர்களாகிய குயில், கோழி, குருகுகள் ஒலித்தன; ஆனால் மனிதர்கள் இன்னும் எழவில்லையே எனக் கேட்பார்க்கு விடையாகச் 'சங்கம் இயம்பின' என்றார். சங்கம் — சங்கு தானாக முழங் காது. அதனை ஊதி ஒலியெழுப்புவர் ஒருவர் வேண்டும். திருப்பாவைத் திருப்பாட்டிலும்,

**எங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள்**
**செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்**
**கூம்பினகாண்**

**செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்**
**தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்**

—திருப்பாவை; 14)

என்றார். அதிகாலையில் சங்கங்கள் இறையடியார்களால் ஊதப்பெறுவது மங்கல வழக்கென்று காட்டும்,

**விருப்பொடு வெண்சங்கம் ஊதா ஊரும்**

—தனித் திருத்தாண்டகம்: 5

என்று திருநாவுக்கரசரும்,

**வால்வெண் சங்கொடு வகைபெற் றோங்கிய**
**காலை முரசம் கனைகுரல் இயம்ப**

—சிலம்பு; ஊர்காண் காதை: 13—14

என்று இளங்கோவடிகளும் வைகறையில் சங்கம் முழங்குதலைக் குறிப்பிட்டுள்ளனர். கதிரவன் ஒளி மேல்நோக்கி வானத்தில் எங்கும் பரவுதலும், விண்மீன்களின் ஒளி மழுங்கின என்பார் 'ஒவின தாரகை யொளி யொளியுதயத் தொருப்படுகின்றது' என்றார்.

இவ்வாறு வைகறை நிகழ்ச்சிகளை வனப்புடன் மொழிந்து மாணிக்கவாசகர் இறைவனது தாளிணைகளைக் காட்டுமாறு, 'தேவ! நற்செறிகழற் றாளிணை காட்டாய்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். அதுவும் விருப்பத்துடனே அவன் வீரக்கழல் அணிந்த நன்மையை அருளும் திருவடிகள் இரண்டினையும் காட்ட வேண்டும் என்கிறார்.

**காண்பார்யார் கண்ணுதலாய் காட்டாக்காலே**

—தனித் திருத்தாண்டகம்: 3

என்ற அப்பரடிகளின் தனித் திருத்தாண்டகத் தொடர் இறைவன் திருவடிகள், அவன் திருவருளால் காட்டினால் அன்றிக் காண முடியாமையை அறிவுறுத்தி நின்றது.

இவ்வாறு கூறிப் பின் பள்ளி எழுந்தருள்க எனப் பணிந்து வேண்டுகின்றார் மணிவாசகர்.

கூவின பூங்குயில்;
கூவின கோழி:
குருகுகள் இயம்பின;
இயம்பின சங்கம்;
ஓவின தாரகை
ஒளி;ஒளி உதயத்(து)
ஒருப்படு கின்றது;
விருப்பொடு நமக்குத்
தேவ!நற் செறிகழற்
றாளிணை காட்டாய்!
திருப்பெருந்துறையுறை
சிவபெரு மானே!
யாவரும் அறிவரி
யாய்!எமக் கெளியாய்!
எம்பெரு மான் !பள்ளி
எழுந்தரு ளாயே!

## 4. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்

இன்னிசை வீணையர்
யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம்
இயம்பினர் ஒருபால்;
துன்னிய பிணைமலர்க்
கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர்
துவள்கையர் ஒருபால்;
சென்னியில் அஞ்சலி
கூப்பினர் ஒருபால்;
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்(டு)
இன்னருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி
எழுந்தரு ளாயே!

சென்ற திருப்பாட்டில் இறைவனை விளித்தது போன்றே, 'இன்னிசை வீணையர் யாழினர்' எனத் தொடங்கும் இத்திருப்பாட்டிலும், மாணிக்கவாசகர் இறைவனைத் திருப்பெருந்துறை சிவபெருமானே என்றும், எம்பெருமானே என்றும் விளித்துள்ளார்.

அறிவிற் சிறந்த ஔவை பிராட்டியார் 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார். அரியதாகிய

மானிடப் பிறவி எதற்கு வாய்க்கின்றது என்றால் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' வீடுபேறு பெறுவதற்காகும். உலக இன்பங்களைத் துய்த்து, பின் பற்றறுத்து, பரமன் தாளினை அடைய வேண்டும் என்பது தமிழர் கண்ட நெறி. 'கற்றதனால் ஆய பயன் இறைவன் நற்றாள் தொழுவது' என்பார் திருவள்ளுவர். எனவே உலக உயிர்கள் வைகறையில் துயிலெழுந்து எவ்வெவ் முறையில் இறைவன் திருப்பாதங்களை வணங்கி நிற்கின்றன என்பதனை உணர்த்துவாராய் மாணிக்கவாசகப் பெருமான் முதலில் 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்' என்றார். இனிமை பயப்பதும், பிறரை நம்மாட்டு இசையச் செய்வதும் இசையாதலின் இதற்கண் இசையினைக் குறிப்பிட்டார். வீணையிலும் யாழிலும் இசை சிறக்கின்றது. 'இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க' என்று திருவண்டப்பகுதி (35)யில் மணிவாசகரே இறையின் வீணை இசையை விரும்பியவன் என்று குறிப்பிடுகின்றார். இசைக் கருவிகளாம் வீணையும் யாழும் கொண்டு இசைவாணர்கள் இறைவன் புகழை ஒரு மருங்கு —பக்கம் பாடி நின்றனர் என்று குறிப்பிடுகின்றார். பிறிதொரு பக்கத்தில் இன்னிசையோடு மந்திரமும் தோத்திரமும் ஓதினர் என்று குறிப்பிடு முகமாக 'இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்றார். நால் வேதங்களாம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனப் படுவனவற்றுள் முதலாவதாகத் திகழும் வேதம் இருக்கு வேதமாகும். இது வடமொழியில் அமைந்தது. தோத்திரப் பாக்கள் தமிழ் மொழியில் அமைந்தனவாகும். இறைவனுக்கு நீராட்டும்பொழுது மந்திரம் ஓதுதல் மரபாகும்.

**தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரியின் நன்னீர்**
**கொண்டிருக் கோதியாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி**

(தனித்திரு நேரிசை:1)

என்று திருநாவுக்கரசர் வாக்கு கொண்டு இதனை உணர லாம். மேலும் அவரே,

**மருதங்களா மொழிவர் மங்கையோடு**
**வானவரு மாலயனுங் கூடித் தங்கள்**
**சுருதங்களால் துதித்துத் தூநீராட்டித்**
**தோத்திரங்கள் பலசொல்லித் தூபங்காட்டி**

(திருவெண்காடு; திருத்தாண்டகம்:8)

என்று கூறியிருத்தலினால் தோத்திரம் தமிழாதல் அறிய லாம். தோத்திரம் தென்றமிழ்க் கீதமென்றே குறிக்கப் பட்டது.

**சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்**

என்றும்,

**கீதத் திசையோடும் கேள்விக் கிடையோடு**
**வேதத் தொலியோ வாவீழி மிழலையே**

(திருவீழிமிழலை)

என்று திருஞானசம்பந்தரும்,

**சொற்பால பொருட்பால சுருதியொரு நான்குந்**
**தோத்திரமும் பலசொல்லித் துதித்துத்**
**தன்திறத்தே**
**கற்பாருங் கேட்பாருமாய் எங்கு நன்கார்**
**கலைபயில் அந்தணர்வாழுங் கலயநல்லூர் காணே**

(திருக்கலய நல்லூர்:5)

என்று சுந்தரரும் கூறியுள்ள பாடல்கள் கொண்டு, அந் நாளில் ஊர்தோறும் வடமொழி வேதமும் தென்றமிழ்த் தோத்திரமும் பயிலப்பட்டன என்று அறியலாம்.

''அர்ச்சனை பாட்டேயாகும் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறைபாடும் வாயால்'' என்னும் பெரிய புராணத் தொடர், தமிழ்ப் பாடல்களை உவந்த இறைவன் திறத்தை உணர்த்தும். இவ்வாறு வைகறையில்

இறைவன் புகழைச் சொன்மாலை தொடுத்துப் பாடுவோர் ஒரு புறமிருக்க, பிறிதோர் பக்கம் மலர் மாலை புனைந்து அதனை இறைவனுக்குச் சாத்தி மகிழ்ந்து நிற்கும் தொண்டர்களைக் காணலாம். 'துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்'. மற்றொரு புறத்தில் தொழுதகை துன்பம் துடைப்பவன் இறைவன் என்று உட்கொண்டு நிற்கும் அடியவர்கள் பலர் திரண்டுள்ளனர். 'தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்'. கூடும் அன்பு மிகமிகத் தொழுத கையராய் நிற்போருடன், சிவனைக் கண்டதனால் அன்பினால் உருகி ஆனந்தக் கண்ணீர் சொரிபவர் 'அழுகையராய்' உள்ளனர். இவ்வாறு அன்பினால் உருகி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி நிற்பவரின் உடலில் அசைவு தோன்றுதலின் அவரைத் துவள்கையர்' என்றார். இவ்வாறு தொழுகையர், அழுகையர், துவள்கையர் ஆன அடியவர்தம் முத்திறச் செயல்களும் திருநாவுக்கரசர் பெருமானிடத்துத் துலங்கினமையைச் சேக்கிழார் பெருமான்.

**கையும் தலைமிசை புனையஞ் சலியன**
**கண்ணும் பொழிமழை ஒழியாதே**
**பெய்யும் தகையன கரணங் களுமுடன்**
**உருகும் பரிவினபேறு எய்தும்**
**மெய்யும் தரைமிசை விழும்முன்பு எழுதரும்**
**மின்தாழ் சடையொடு நின்றாடும்**
**ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்**
**ஆர்வம் பெருகுதல் அளவின்றால்**

—திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்:167

நம் பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளமை படித்து இன்புறத்தக்கது.

மேலும் சேக்கிழார் பெருமானே சிவன் திருவடிக்கழல் நினைந்து உருகும் அடியவர்களை,

**ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்**
**பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை**
**மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்**
**கூசியே உடல்கம் பித்திடுவார் மெய்க்குணமிக்கார்**

—பத்தராய்ப் பணிவார் புராணம்:6

என்று பத்தராய்ப் பணிவார் புராணத்தில் பாராட்டுவர்.

'என்னையும் ஆண்டு கொண்டு இன்னருள் புரியும்' என்று வேண்டி, 'எம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே' என்று பள்ளியெழுச்சிப் பண் இசைத்து நிற்கிறார் திருவாசகம் எனும் அருள்வாசகம் தந்த மணிவாசகப் பெருமான்.

**இன்னிசை வீணையர்**
**யாழினர் ஒருபால்;**
**இருக்கொடு தோத்திரம்**
**இயம்பினர் ஒருபால்;**
**துன்னிய பிணைமலர்க்**
**கையினர் ஒருபால்;**
**தொழுகையர் அழுகையர்**
**துவள்கையர் ஒருபால்;**
**சென்னியில் அஞ்சலி**
**கூப்பினர் ஒருபால்;**
**திருப்பெருந் துறையுறை**
**சிவபெரு மானே!**
**என்னையும் ஆண்டுகொண்(டு)**
**இன்னருள் புரியும்**
**எம்பெரு மான்!பள்ளி**
**எழுந்தரு ளாயே!**

## 5. பூதங்கள் தோறும் நின்றாய்

''பூதங்கள் தோறுநின்
    றாய்'' எனின் அல்லால்
''போக்கிலன் வரவிலன்''
    எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல்
    ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக்
    கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப்
    பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி
    யாய்! எங்கண் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை
    ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி
    எழுந்தரு ளாயே!

மாணிக்கவாசகப் பெருமான் திருப்பள்ளியெழுச்சியின் ஐந்தாம் திருப்பாடலைப் 'பூதங்கள்தோறும் நின்றாய்' என்று தொடங்குகின்றார். மேலைத் திருப்பாட்டில் இறைவனுக்குப் பணியாற்ற அடியவர்கள் இறைவன் வருகையை விருப்புடன் எதிர்நோக்கி நிற்றலை அறிவுறுத்திய திருவாதவூரடிகள், இறைவன் தன் கண்முன் எழுந்தருள வந்து தன் குற்றங் களைந்து தனக்கு அருள்

புரிய வேண்டுமென்று விண்ணப்பிக்கு முகத்தான் அமைந்துள்ளது.

'திருப்பெருந்துறை மன்னா' என்றும், 'சிந்தனைக்கு அரியாய்' என்றும், 'எம்பெருமான்' என்றும் தொடக்கத்தில் இறைவனை விளித்தலைக் காணலாம். திருப்பெருந்துறை நீர்வளமும் அதன்வழி நிலவளமும் மிக்கது என உரைப்பாராய்ச் 'சீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா' என்றார். நீர்பொருந்திய வயல்களால் சூழ்ந்த திருப்பெருந்துறைக்கரசே' என்பதனால் பிறவிக்கு ஆட்பட்ட உயிர்களின் வெப்பம் நீக்குவான் வேண்டி, அவன் குளிர்ச்சி நிறைந்த நிலங்களுக்கு அரசனாக இருக்கிறான் என்பதனைக் குறிப்பால் உணர்த்தினார் எனலாம். அடுத்து, அன்பர்க்கு எளியவனாகவும், அல்லாதார்க்கு அரியவனாகவும் இருக்கிறான் என்பதனைப் புலப்படுத்த, 'சிந்தனைக்கும் அரியாய்' என்றார். இங்ஙனம் ஏனையோர்க்கு அரியவனாக இருந்தாலும் கருணை மிகக்கொண்டு எளியவந்த தோற்றங்கொண்டு தன்னை ஆட்கொள்ளும் திறமுடையோனாதலின் 'எம்பெருமான்' என்று குறிப்பிட்டார்.

இறைவனை இவ்வாறு மூன்றுபெயர் தந்து அழைத்த பின்னர், அவனைக் காண்பதற்கு விருப்பம் மிகுதலால் அதனை அறிவிப்பார், 'பூதங்கள் தோறும் நின்றாய் எனின் அல்லால் போக்கிலன் வரவிலனென நினைப்புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்றார். பூதங்கள் தோறும் நின்றாய்' என்பதனால் ஐம்பெரும் பூதங்களாம் நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்பனவற்றுள் பொருள்கள் ஒவ்வொன்றிலும விளங்கும் தன்மை உணர்த்தப்பட்டது. 'போக்கிலன் வரவிலன் என நினைப்புலவோர் கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால் கேட்டறியோம் உனை' என்றார். இறைவனைப் 'போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே' என்று மாணிக்கவாசகரே

சிவபுராணத்தில் (77) இறைவனைக் குறிப்பிடுவர். ‘பிறப்பிலார் இறப்பிலார்’ என்று அப்பர் பெருமானும் திருப்பந்தணை நல்லூர்ப் பதிகத்தில் (8) கூறுவர். இவை புலவர்தம் வாய்மொழியாம் அருட்பாடல்கள் வழிதான் இறைவனை அறிய முடியும் என்பதை உணர்த்தி நிற்கின்றன. ஈண்டுப் புலவர் என மணிவாசகப் பெருமானால் குறிக்கப் பெறுவோர் கேட்டுச் சிந்தித்து, தெளிந்து நிட்டை கூடிய மெய்யுணர்வினை உடையோர் என்பர் சைவப் பெரு நூல்களை நன்குணர்ந்த பெரியோர். கீதம் ஈண்டு இசையொடும் கூடிய பாடல்களைக் குறிப்பிடும். இசைப்பாட்டைப் பாடுதலேயன்றி ஆடுதலுங் செய்தார் என்பது உணர்த்தப்படுகின்றது. எனவே அடியவர்கள் ஒவ்வொரு பூதத்தினிடத்தும் விளங்குகின்றாய் என்பதும் அல்லாமல், இறப்பற்றவன். பிறப்பற்றவன் என்று இசைப்பாடல்கள் பாடப்பெறுவதும் பேசப்பெறுவதும் அல்லாமல் உன்னை அனுபவித்து உணர்ந்தவர்களை நாங்கள் கேள்விப்படவில்லை. எங்கள் கண்கள் காணுமாறு எங்கள் முன் திருவுருக்கொண்டு தோன்றி, எங்கள் குற்றங்களைக் களைந்து, எங்களை அடிமை கொண்டு அருள் புரிவீர்களாக, எனவே இறைவனாகிய நீங்கள் பள்ளியெழுந்தருள வேண்டும் என்று வேண்டுகின்றார்கள்.

இத்திருப்பாட்டில் முன் திருப்பாடல்களிற் காணப்பட்ட இயற்கை வருணனைகள் இல்லை. ஆயினும் தங்கள் மனத்தே மண்டி கிடக்கும் மும்மலங்களை அகற்றித் தம்மை அடிமை கொண்டு ஆட்கொண்டருள வேண்டும் என்று அடியவர்கள் ஆண்டவனை வேண்டிக் கொண்டனர். சிவஞானத்தில் திளைத்து இன்புற வேண்டும் என்று உலக உயிர்கள் விரும்பின என்பது இப்பாட்டால் அறியப்பெறுகின்றது.

இத்திருப்பாட்டின் தனிச்சிறப்பியல்புகள் ஆழ்ந்து நோக்கத்தக்கன. முதலாவதாக இறைவன் ஐம்பூதங்கள்

அனைத்திலும் நிறைந்து நிற்பவன் என்னும் கருத்தும் பெறப்பட்டது. அவனுக்கு இறப்பு இல்லை; பிறப்பும் இல்லை. சிட்டுக்குருவிக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை அமைய ஒரு புலவர் இடைக்காலத்தில் தனிப்பாடல் ஒன்று பாடினார். 'பிறப்பிறப்பில்' என்றார். சிட்டுக்குருவி யைக் குறிப்பிடும்பொழுது, அச்சிட்டுக்குருவியின் பிறப்பு இறவாணத்தில் என்று பொருள்படும். சிவபெருமானோடு கொண்டு கூட்டும்பொழுது 'பிறப்பு இறப்பு இல்' அதாவது பிறப்பு இறப்பு இல்லை என்றார். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் இயற்றியருளிய குடவாயிற் கோட்டத்து அரச துறந்திருந்த இளங்கோவடிகள், சிவபெருமானைப் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்றார். மணிவாசகரும் திருவெம்பாவையின் முதற்பாட்டினையே 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி' எனத் தொடங் கினார். 'போக்கும் வரவும் அற்ற புண்ணியன்' என்று சிவபெருமானைக் குறிப்பிடுவதற்குக் காரணம் அவன் இறப்பதும் இல்லை; பிறப்பதும் இல்லை; இத்தகைய பண்பாளனைப் புலவர்கள் இசைப் பாடல்களை முழக்கிக் கொண்டே இன்ப மயக்கத்தில் ஆடவும் செய்கின்றனர். இவ்வாறு இறைவன் புகழைப் பாடினார்களேயல்லாமல் அவனைக் கண்டவர்கள் இல்லை; கேட்டறிந்தவர்கள் இல்லை. இறைவனைக் கண்டும் கேட்டும் உணர்ந்தவர் களைக் கண்டறிந்தவர்கள் இல்லை. ஆனாலும் சிவ பெருமான் தம் கண்முன் வந்து தோன்ற வேண்டும் என அறிவார்ந்த அடியவர்கள் விரும்புகின்றனர். எனவே 'கீதங்கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா' என்றும், 'சிந்தனைக்கும் அரியாய்' என்றும் கூறி எம்பெருமானே நீ எங்கள் கண் முன் வந்து நிற்க வேண்டும்; அவ்வாறு நிற்பதோடு அல்லாமல் 'ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டருள்புரியும்' என்கின்றனர். உலக உயிர்கள் குறை வுடையனவாகும். அக்குறைகள் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். அவற்றை மும்மலங்கள் என்பர்

ன்றோர். இம் மும்மலங்களை நீக்குவதென்பது இறைவன் ஒருவனால் மட்டுமே முடியக் கூடிய செயலாகும். எனவே இறைவனை வேண்டும்பொழுது, அவன் தம் முன் வந்து குற்றங்கள் அனைத்தையும் களைந்து அடிமை கொண்டு ஆதரிக்க வேண்டும் என்று விண்ணப்பிக்கின்றார்கள், 'பள்ளி எழுந்தருளாய்' என்று இறுதியில் கூறி முடிக்கின்றனர்.

**''பூதங்கள் தோறுநின்**
**றாய்'' எனின் அல்லால்**
**''போக்கிலன் வரவிலன்''**
**எனநினைப் புலவோர்**
**கீதங்கள் பாடுதல்**
**ஆடுதல் அல்லால்**
**கேட்டறி யோம்உனைக்**
**கண்டறிவாரைச்**
**சீதங்கொள் வயல்திருப்**
**பெருந்துறை மன்னா!**
**சிந்தனைக் கும்அரி**
**யாய்! எங்கண் முன்வந்(து)**
**ஏதங்கள் அறுத்தெம்மை**
**ஆண்டருள் புரியும்**
**எம்பெரு மான்! பள்ளி**
**எழுந்தரு ளாயே!**

## 6. பப்பற வீட்டிருந்து

பப்பற வீட்டிருந்து
உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத்
தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர்
மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்,அணங்
கின்மண வாளா !
செப்புறு கமலங்கண்
மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே !
இப்பிறப் பறுத்தெமை
ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் !பள்ளி
எழுந்தரு ளாயே !

'பதங்கள் தோறும் நின்றாய்' என்று தொடங்கிய சென்ற திருப்பாட்டில் சி பெருமான் தங்கள் மன மாசு களைக் களைந்து தங்களை அடிமை கொண்டு ஆட்கொண் டருள வேண்டும் என்று குறிப்பிட்ட மாணிக்கவாசகர், இத் திருப்பாட்டில் அடியவர்கள் இறைவனை வழிபாட்டி னால் அடைந்தனர். யானும் அவ்வாறே தொடர்வேன், எனக்கும் அருள் புரிக என வேண்டுவார் முதற்கண்

சிவபெருமானைப் புகழ்ச்சிச் சொற்களோடு முன்னிலைப் படுத்த எண்ணி 'அணங்கின் மணவாளா' என்றார்.

'உமையம்மையின் கணவனே' என விளித்துள்ள முறையைச் சற்று ஆழ நோக்கி ஓர் உயரிய உண்மையை உணரவேண்டும். ஏனெனில் இதில் தமிழ்ப் பண்பாடு அமைந்துள்ளது. இறைவன், இயற்கை, பெண்மை இவற்றைப் போற்றுவதென்பது தமிழ்ப் பண்பாடும் மரபும் ஆகும். இறைவனின் தோற்றப் பொலிவு இயற்கையில் ஒளி விடுகின்றது. எங்கெங்கெல்லாம் அழகு கொலு வீற்றிருக் கின்றதோ அங்கங்கெல்லாம் இறைவன் திருக்கோயில் கொண்டிருப்பதாக நம் முன்னோர் கருதினார்கள். திருமுருகாற்றுப்படை இத்தகைய இடங்களைப் பட்டிய லிட்டுக் கூறும். மூன்றாவதாகப் பெண்மையின் மென்மை யில் இறைவனின் அருள் உள்ளத்தைக் காணலாம். கடவுள் எங்கும் இலங்கினாலும் தாயைப் படைத்து அவளிடத்தில் அளவற்ற அன்பையும் படைத்திருக்கிறான் என்பர். இத்தகு பெருமைக்குரிய பெண் பிறவியினைச் சிறப்பித்துப் பேசுவது தமிழர் மரபாகும். ''மங்கையராகப் பிறப்ப தற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா'' என்பர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. ஏனெனில் ''அவர் பங்கயக்கை நலம் பார்த்துத்தான் பாரில் அறங்கள் வளருமம்மா'' என்று மேலும் குறிப்பிடுவர். உமை அம்மை 'அறம் வளர்த்த நாயகி'யாகத் திகழ் கிறாள். சிவன் அளித்த இருநாழி நெல் கொண்டு காஞ்சி புரத்தில் காமாட்சியாகக் கணக்கற்ற அறங்களை இயற்றி னாள் என்று நூல்கள் கூறும்.

உலக வழக்கில் இன்ன ஆணினுடைய மனைவிதான் இவர் என்று பெண்ணை அறிமுகப்படுத்தும் மரபு உளது. ஆனால் தமிழின் தொல்பழம் வழக்கு இவ்வாறில்லை. திருமுருகாற்றுப்படையில் முருகப் பெருமானை நக்கீரர் பெருமான் 'மறுவில் கற்பின் வாணுதல் கணவ' என்று குறிப்பிட்டுள்ளார். 'குற்றமற்ற கற்பினையுடைய

தெய்வயானையின் கணவனே' என்பது இத்தொடரின் பொருளாகும். அதுபோன்றே ஈண்டு 'அணங்கின் மணவாளா' என்று 'உமையம்மையாரின் கணவனே' என்று சிவபெருமான் அழைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். இவ்வாறு பெண்ணைக் கூறி, அப்பெண்ணின் கணவனே என்று அழைக்கும் மரபினை நோக்கப் பெண்ணின் பெருமை விளங்கும். குறுந்தொகைப் பாட்டொன்றிலும் தலைவன் ஒருவன் ''நல்லோள் கணவன் இவன் எனப் பல்லோர் கூற யாம் நாணுகம் சிறிதே'' என்று குறிப்பிடு வதும் நோக்கப் பெண் பெற்ற பெருவாழ்வு விளங்கும். நல்ல — உத்தமமான பெண்ணின் கணவனாக விளங்குவது என்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

அடுத்து, ''செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ் திருப்பெருந்துறை உறை சிவபெருமானே'' என்றார். சிவப்பு நிறம் வாய்ந்த தாமரை மலர்கள் விரிந்துள்ள — குளிர்ச்சி பொருந்திய வயல்களாற் சூழப்பட்ட திருப் பெருந்துறையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே!'' என்பது இதன் பொரு ளாகும்.

எம்பெருமான்—எனது தலைவனே! எனத் தொடங்கி, 'பப்பு அற வீடு இருந்து உணரும் நின் அடியார்' என்று அடியவரைக் குறிப்பிடுகின்றார். பரப்பு நீங்கப் பேரின்ப நிலையினின்றும் உணர்கின்ற உனது அடியவர்கள் என்ப தனால் வேகமான வாழ்க்கையினை மேற்கொண்ட அடிய வர்களை ஆட்கொள்ளல் உனது கருத்தாக இருக்க வேண்டும் என்றார். ''வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க'' என்ற சிவபுராணத் தொடரும் இவ்வுண்மை யினை உணர்த்தும். இவ்வடியவர்கள் 'பந்தனை வந்துறுத் தார் அவர் பலரும்' என்றார். பந்தனை என்பது பாசக் கட்டு. பிறந்துவிட்ட காரணத்தால் வினையினை நுகர வேண்டும். வினை நுகர்ந்து கழிவுண்டாய பிறகு நல்லறிவு

கொளுத்தப்பட்டு உடலுறுப்புகளால் இறைவனை வழி படற்கு இயலும் என்க. அப்பொழுதுதான் பாசக் கட்டறுதல் என்பதும் நேரும்.

'மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின் வணங்கு கின்றார்' என்னும் தொடர் 'மையின் தன்மை சூழப் பொருந்திய கண்களுடைய குல மகளிரும் அறிவுடைமைக்கு அறிகுறியாகும் சிறப்பினால் சிவனைப் பணிகின்றார்கள்' என்னும் பொருள் கொள்ளும்.

''மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலை'' எனும் திருஞான சம்பந்தர் திருமயிலாப்பூர்த் தேவாரம் (2) மையினைப் பூசுதல் மகளிர் வழக்கு என்பதனை உணர்த்தும். அடியார் பலரும், பாசத்தினை அறுத்தவர் பலரும், கண்ணியர் பலருமாகச் சிவனை வழிபடல் மேற்கொள்ளுகின்றனர் என்பதனை மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார்.

இறைவனை வணங்குவதென்பதே மானுடத் தன்மை களுள் ஒன்று என்று புலப்பட மானுடத் தன்மையின் வணங்குகின்றார் என்பர். ''கோளிற் பொறியிற் குண மிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை'' என்று திருக்குறளும் இதனை உணர்த்தும். இறைவன் உடலுறுப்புகளைப் படைத்திருப்பதே அவ்வுறுப்புகளைக் கொண்டு அவனை வணங்குவதற்கே என்பர். ''தலையே நீ வணங்காய்'' என்ற தேவாரத் திருப்பட்டாலும் இவ் வுண்மையை உணரலாம். ''கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழஅர் எனின்'' என்ற குறளும் கடவுளை வணங்குதலே கற்றதன் சிறப்பாக அமையும் என்பர். மனிதர் அறிவுடையோர் எனக் கருதப் படவேண்டுமானால், அவர்கள் தீயன சிறிதும் நெஞ்சில் கருதாமலிருக்கவேண்டும் என்பர்.

'செப்புறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ் திருப் பெருந்துறையுறை சிவபெருமானே' என்று இறைவனைக்

குறிப்பிட்டு 'எமை ஆண்டு இப்பிறப்பு அறுத்து அருள் புரியும்' என வேண்டுகின்றார்.

எங்களை அடிமை கொண்டு, நாங்கள் பெற்றிருக்கும் இப்பிறவியினை யொழித்து எங்கட்கு அருள் புரிவீராக என்று விண்ணப்பித்து, இறுதியாக 'எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே' என்கின்றார்.

தம்மை அடிமை கொண்டு, பிறவி வேரை அறுத்து, புவியில் மீண்டும் பிறவாமற் காத்து அருள வேண்டும் என்பதனையே இத்திருப்பாடல் உணர்த்துகின்றது.

பப்பற வீட்டிருந்து
உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத்
தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர்
மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்,அணங்
கின்மண வாளா !
செப்புறு கமலங்கண்
மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை
சிவபெரு மானே !
இப்பிறப் பறுத்தெமை
ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் !பள்ளி
எழுந்தரு ளாயே !

# 7. அது பழச்சுவையென அமுதென

**அதுபழச் சுவையென**
**அமுதென அறிதற்(கு)**
**அரிதென எளிதென**
**அமரரும் அறியார்;**
**இதுஅவன் திருவுரு,**
**இவன்அவன் எனவே**
**எங்களை ஆண்டுகொண்(டு)**
**இங்கெழுந் தருளும்**
**மதுவளர் பொழில்திரு**
**உத்தர கோச**
**மங்கையுள் ளாய்! திருப்**
**பெருந்துறை மன்னா !**
**எதுஎமைப் பணிகொளும்**
**ஆ(று)?அது கேட்போம்;**
**எம்பெரு மான்!பள்ளி**
**எழுந்தரு ளாயே!**

சென்ற திருப்பாட்டில் மாணிக்கவாசகர் வழிபாட்டின் சிறப்பினை உணர்த்தினார். தம்மை இறைவன் பிறப் பறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளினை வினயமாக விடுத்தார். 'அது பழச்சுவையென'த் தொடங்கும் இத்திருப்பாட்டில் சிவானந்தானுபவம் இன்ன தன்மையது என்று விளக்க முற்படுவார், இறைவனை 'மதுவளர் பொழில் திருவுத்தரகோச மங்கையுள்ளாய்' என்றார். 'தேன் ததும்பும் மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்து விளங்கும் திருவுத்தரகோச மங்கையெனும்

திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ளவனே' என்று மாணிக்கவாசகர் இறைவனை விளித்தற்குக் காரணம் உளது. உத்தரகோச மங்கை என்னும் சிவத்திருத்தலம் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளதாகும். இத்தலமும் மணிவாசகப் பெருமானாரால் இறையருள் விளக்கம் பெற்ற பதியாகும். உத்தர கோச மங்கை என்னும் பதியினைக் குறிப்பிட்ட அடிகளாருக்குத் தம் நெஞ்சில் எப்பொழுதும் நீங்காது குடிகொண்டிருக்கும் பதியாம் திருப்பெருந்துறை நினைவுக்கு வருகிறது. திருப்பெருந் துறையில்தான் மணிவாசகப் பெருமானைச் சிவபெருமான் ஆட்கொண்டார். எனவே அப்பதி அவர் ஊனிலும் உயிரிலும் கலந்து நிற்கின்றது.

இனிச் சிவானந்தானுபவம் எப்படிப்பட்டது என விளக்கப் புகுகின்றார். ''அது பழச்சுவையென அமுதென அறிதற்கரிதென எளிதென அமரரும் அறியார்'' என்றார். தேவர்கள் யாவரும் சிவானந்தானுபவம் கனிந்த பழத்தின் சுவை போன்றது என்றும், அமுதம் போன்றது என்றும், அறிதற்கு இயலாதது என்றும் அறிதற்கு எளியது என்றும், அறிய மாட்டார்கள் என்றார். சிவானந்தானுபவம் எவ்வாறு இருந்தது என விளக்கப்பட முடியாததாகும். ஆனால் உவமை வாயிலாக ஒருவாறு உணர்த்தலாம். சிவானந்தானுபவம் பழச்சுவை போல் இருக்கும் எனலாம். அமுதெனத் தித்திக்கும் எனலாம். ஆனால் இவ்வாறு உவமைவழி விளக்க முடியாதவன் இறைவன். இங்குக் காட்டப் பெற்ற பொருள்கள் எல்லாவற்றையும் விட இனியவன், சுவை மிகுந்தவன் என்ற கருத்தில் திருநாவுக்கரசர் பெருமான்,

**கனியினும் கட்டிபட்ட கரும்பினும்**
**பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்**
**தனிமுடி கவித்தாளு மரசினும்**
**இனியன்தன் அடைந்தார்க்குஇடை மருதனே**

—திருவிடை மருதூர் : 10

என்று திருவிடை மருதூர்த் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். அச்சிவானந்தானுபவம் விளைந்த நிலையினை அப்பரடிகளே தனிக் குறுந்தொகைப் பாட்டொன்றில் (10)

**தெள்ளத்தேறித் தெளிந்து தித்திப்பதோர்**
**உள்ளத் தேறல் அமுதவொளி வெளி**
**கள்ளத்தேன் கடியேன் கவலைக் கடல்**
**வெள்ளத்தேனுக் கெவ்வாறு விளைந்ததே**

என வியப்புப் பொருளில் பாடியிருப்பது காண்க.

இவ்வாறு விளையும் சிவானந்தானுபவம் சிவனன்பர் அல்லாதார்க்கு அறிதற்கரியதாகும்; அதே நேரத்தில் சிவனடியார்களுக்கு எளிதாகக் கைகூடும் எனவேதான் 'அறிதற்கரிதென எளிதென' மாணிக்கவாசகர் உரைத்தார்.

''இங்கு இது அவன் திருவுரு இவன் அவன் எனவே எழுந்து எங்களை ஆண்டு கொண்டு அருளும்'' என்றார். 'இவ்வுலகத்தில் இப்பிறப்பிலே வந்து அமைந்ததாகிய உடலாகிய இது, சிவபெருமானது திருமேனியாகத் திகழுமாறும், இவ்வுடம்பில் விளங்கும்—வீற்றிருக்கும் உயிராகிய இவன், அவனாகிய சிவமாக விளங்குமாறும் அருளி நின்று எங்களை ஆட்கொண்டருள்வாயாக' என்று வேண்டுகின்றார்.

உடல் சிவன் திருமேனியாதலும் அவ்வுடம்பின் உள் நின்ற உயிர் அருளொடுங் கூடிச் சிவமாய் நின்றதெனக் கொள்ளலாம். 'சித்தமறுத்துச் சிவமாக்கி எனையாண்ட அச்சன் நல்கியது யார் தருவார் அச்சோவே'' என்று மணிவாசகரே பிறிதோரிடத்தில் கூறியுள்ளபடி, அடியவர்கள் தத்தம் உடம்பை இறைவன் கோயில் கொண்டுறையும் ஆலயமாக அமைத்துக் கொண்டால் சிவன் திண்ணமாக அவ்வுடலில் எழுந்தருளுவான் என்பதாம். இதனையே திருவாசகம் கீர்த்தித் திருவகவல் (9 : 8)

**அடியார் உள்ளத் தன்பு மீதூரக் குடியாக் கொண்ட**
**கொள்கையும் சிறப்பும்**

எனக் குறிப்பிடுகின்றது.

''ஆன்மாவின் வேறாய்ச் சிவன்கண்ணேயுளவாகிய முற்றுணர்தன் முதலிய எண்வகைக் குணங்களும் ஆன்மாவின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்தவின்பம்; ஆன்மா அதுவாய் அழுந்திநின்று அவ்விளக்கத்தை அறிதலே அநுபவம் எனப்படும்'' எனும் சிவஞான பாடியத்தானும் (398) வலியுறுத்தப்படுவது காண்க எனச் சைவ சித்தாந்த சாத்திர வல்லுநர்கள் குறிப்பிடுவர்.

''எது எமைப் பணி கொளுமாறு அது கேட்போம்'' எங்களை ஏவல் கொள்ளுதற்கமைந்த பணி யாது? அதனைக் கேட்க முந்துகின்றோம் யாம் — என்றார்.

ஓர் உடலில் இறைவன் குடிகொண்டு விட்ட பிறகு, நிகழ்வன எல்லாம் இறைவனின் அருளிச் செயல்களேயாகும்.

**வேண்டத் தக்கது அறிவோய் நீ**
**வேண்ட முழுதும் தருவோய் நீ**

என்று மாணிக்கவாசகரே பிறிதோரிடத்தில் நுட்பமுற நவின்றுள்ளார். இவ்வாறு சிவபெருமானிடம் விண்ணப்பித்து, அவரைப் பள்ளியை விட்டு எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொள்ள வேண்டியது அவர்தம் தலையாய கடனாகும் என்று குறிப்பிடுகின்றார் மாணிக்கவாசகர்.

**அதுபழச் சுவையென**
**அமுதென அறிதற்(கு)**
**அரிதென எளிதென**
**அமரரும் அறியார்;**
**இதுஅவன் திருவுரு,**
**இவன் அவன் எனவே**

எங்களை ஆண்டுகொண்(டு)
　　இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு
　　உத்தர கோச
மங்கையுள் ளாய்!திருப்
　　பெருந்துறை மன்னா!
எதுஎமைப் பணிகொளும்
　　ஆ(று)?அது கேட்போம்;
எம்பெரு மான்!பள்ளி
　　எழுந்தரு ளாயே!

## 8. முந்தியும் முதல் நடு இறுதியுமானாய்

முந்திய முதல்நடு
   இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர்,
   யாவர்மற்(று) அறிவார்?
பந்தணை விரலியும்
   நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந்
   தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு
   மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை
   கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும்
   காட்டிவந்(து) ஆண்டாய்!
ஆரமு தே!பள்ளி
   எழுந்தரு ளாயே!

சிவானந்தானுபவம் விழைந்து, அதனைப் பெற்றுத் துய்க்க நினைத்த மாணிக்கவாசகப் பெருமான் ''முந்தியும் முதல் நடு இறுதியும் ஆனாய்'' என்று தொடங்கும் இத்திருப்பாட்டில் தனக்கென ஓர் ஊரில்லாதவனும் பேர் இல்லாதவனுமான சிவபெருமான் ஓர் உருக்கொண்டு வந்தருளும் சிறப்பினைக் கூறத் தொடங்கி 'ஆரமுதே' என விளித்தார். ஈண்டு 'ஆரமுதும்' என்ற சொல் பெறுதற்கரிய முத்தி இன்பத்தினை உணர்த்தி நிற்கும்.

எவ்வளவு பருகினாலும் தெவிட்டாது மேலும் மேலும் பருகத் தூண்டும் ஒரு பொருளே ஆரமுதாகும். முத்தி யின்பமாக விளங்கும் இறைவன் உயிர்கட்கு ஆதாரமாய்ப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் களிலும் உடனாய் விளங்கும் முறைமையை அருளுவார் 'முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்' என்றார். 'முந்திய' என்ற சொல், அளவிலாத அண்டங்களிலெல்லாம் உறையும் உயிர்களுக்கு முன்னரே தோன்றி, அனைத் துயிர்களுக்கும் ஆதாரமாய் இருக்கும் தன்மை குறிக்கும். 'முதல் நடு இறுதி' என்பது முத்தொழில்களைக் குறிக்கும். படைப்புத் தொழில் செய்பவன் பிரமன்; காத்தல் தொழில் செய்பவன் திருமால்; அழித்தல் தொழில் செய்பவன் உருத்திரன். இம்முத்தொழில் செய்வாரும் அறிய முடியாதவன் என்றபடி. மூல முதற்பொருளாய் விளங்கும் சிவபெருமான், தானும் தன் துணைவி சத்தியு மாய் அடியார் நெஞ்சினுள் புகுந்து நிறையும் மேன்மை யுடையவன் ஆதலின் 'பந்தணை விரலியும் நீயும் நின்னடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே' என்றார். பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூவரும் நின்னை அறிதற்கு வல்லார் அல்லர்; அப்படி யென்றால் வேறு யார் உன்னை அறியப் போகின்றார்கள்? எவரும் அறியப் போவதில்லை என்றபடி. ''பந்தினை யணைந்த விரல்களையுடைய உமையம்மையும் நீயும் உன்னுடைய அடியவர்களது பழமை வாய்ந்த குடிசை களாகிய நெஞ்சங்கள்தோறும் திருக்கோயில் கொண்டு விளங்கும் மேலானவனே'' என்று சிவபெருமானை மாணிக்கவாசகர் விளிப்பதில் ஒரு நுண்பொருள் அடங்கிக் கிடக்கின்றது. பந்தினைக் கையிலேந்தியிருத்தல் மகளிரின் பொதுவிலக்கணமாகும். ஞானசம்பந்தப் பெருமானும் ''பந்துசேர் விரலாள்'' என்று உமையம்மையைத் திருப்பந்தராய்ப் பதிகத்தில் குறிப்பிடுவர். காலங்கால மாகச் சிவ பரம்பொருளையன்றி வேறொரு தெய்வத்தை

வணங்கி அறியாதவர்களை அவர்கள் வசிக்கும் பழைய குடிசைகளில் கண்டு அருளுவது என்பதும் ஒரு குறிப்பினை உள்ளடக்கியதாகும். புறத்தே உலகிற் காணலாகும் குடிசைகள் காலவெள்ளத்தில் கழிவுக்கு உட்பட்டு நைந்து சிதைந்து போகும். அதுபோல ஆன்மாக்களும் திருவருளினால் நைந்துருகி உலகக் கட்டு ஒரு நாள் சிதைந்து காணப்பெறும். உலகிற் காணலாகும் குடிசை இலை, தருப்பைப்புல், கீற்று முதலியவற்றால் முடையப்பட்டு உறைவிடமாகும். அதுபோல் சிவன் அன்பில் தோய்ந்து சிறந்த உறைவிடமாயாதலின் அடியவர் உள்ளம் குடில் என உருவகம் செய்யப்பட்டது.

**நகமெலாந் தேயக் கையால்**
**நாண்மலர் தொழுது தூவி**
**முகமெலாம் கண்ணீர் மல்குமுன்**
**பணிந்தேந்துந் தொண்டர்**
**அகமலாற் கோயில் இல்லை**
**ஐயன் ஐயாற னார்க்கே**

—திருவையாறு: 8

என்னும் திருநாவுக்கரசர் தம் திருநேரிசைப்பாட்டு அன்பர் உள்ளமே ஆண்டவன் உறையும் கோயில் என்பதனைப் புலப்படுத்தும்.

**நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்**
**அன்பே மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே**

என்றார் தாயுமான தயாபரர். 'பாரெனவும் பொய்யெனவே முற்றத் துறந்த' பட்டினத்தடிகளும் தம் மனக் கோயிலில்,

**அருள் நனி சுரக்கும் பிரளய விடங்கநின்**
**செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற**
**அமையாக் காட்சி இமையக்**

**கொழுந்தையு முடனே கொண்டுஇங்கு**
**எழுந்தருளத் தகும் எம் பெருமானே**

— திருக்கழுமல மும்மணிக்கோவை: 4

என்று சிவனும் உமையும் தம் உள்ளத்தே எழுந்தருள வேண்டுமென்று விழைந்தது புலப்படுகின்றது.

'செந்தழல் புரை திருமேனியுங்காட்டி' என்பது முதல் நிலை. சிவந்த நெருப்பையொத்த நிறம் வாய்ந்த வடிவத்தைக் காட்டியருளி என்பது இத்தொடரின் பொருள். சிவன் செந்நிறத்தினன். தீப்போலும் அவன் மேனியைக் காட்டி நிற்கிறான்.

இரண்டாவது, 'திருப்பெருந்துறையுறை கோயிலுங் காட்டி' என்பது, திருப்பெருந்துறையில் கோயில் கொண்டு விளங்குதலைக் காட்டியும் என்று பொருள் படும்.

மூன்றாவது, 'அந்தணன் ஆவதும் காட்டி' என்பதாகும். வேதியனாகிய உருக்கொண்ட நிலை காட்டி என்பதனுள் மாணிக்கவாசகர் வாழ்க்கைக் குறிப்பொன்று ஒளிந்து நிற்கின்றது. குருந்த மரத்தினடியில் இறைவன் வேதியனாக வேடந்தாங்கி வந்து மாணிக்கவாசகருக்கு உபதேசம் செய்ததைக் குறிக்கும். 'அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிற்கும் பரம்பொருள், ஓர் உருவந் தாங்கி வெளிப்பட்ட நிலையினை இது குறித்தவாறு, அவ்வாறு வேதியனாக உருக்கொண்டு வந்து, குருந்த மரத்தடியின்கீழ் அமர்ந்து தமக்கு உபதேசித்த செயல் தம்மை அடிமை கொள்ள—ஆட்கொள்ள வந்த செயலே ஆகுமென்பார் 'அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்' என்றார்.

இவ்வாறு உயிர்களுக்கெல்லாம் உரிய காலத்தில் அருள் செய்வதனையே கடமையாகக் கொண்டிருக்கும்

எம்பெருமானே! நீவிர் திருப்பள்ளிவிட்டு எழுந்தருள்க— என வேண்டுகின்றார் மாணிக்கவாசகர்.

முந்திய முதல்நடு
இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர்,
யாவர்மற்(று) அறிவார்?
பந்தணை விரலியும்
நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந்
தருளிய பரனே!
செந்தழல் புரைதிரு
மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை
கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும்
காட்டிவந்(து) ஆண்டாய்!
ஆரமு தே!பள்ளி
எழுந்தரு ளாயே!

## 9. விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா

விண்ணகத் தேவரும்
நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே!உன
தொழுப்படி யோகங்கள்
மண்ணகத் தேவந்து
வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை
யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று
களிதரு தேனே!
கடலமு தே!கரும்
பே!விரும் படியார்
எண்ணகத் தாய்உல
குக்(கு)உயி ரானாய்
எம்பெரு மான்! பள்ளி
எழுந்தரு ளாயே!

முன்னைத் திருப்பாட்டில் சிவபெருமானின் உண்மை நிலையையும் அவன் உலக உயிர்களிடத்துக் கருணை காரணமாகக் கொள்ளும் மூவகைத் திருமேனிகளையும் உணர்த்திய மாணிக்கவாசகர் 'விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா' எனத் தொடங்கும் இத்திருப் பாட்டில் சிவபெருமானால் உயிர்களுக்கு விளையும் பேரின்ப நிலையின் திறம் நினைவு கொள்வார் 'விண்ணகத்

தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே' என விளித்தார்.

'குறவரும் ஏற அஞ்சும் மலை' என்பது போல 'விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா' என்பதிலுள்ள உம்மை சிறப்பும்மையாகும். உயர்ந்த வானுலகங்களில் வாழும் தேவர்களாலும் நெருங்கவும் முடியாத மிகச் சிறந்த பொருளாய் விழுப்பொருளாய் இருப்பவன் சிவ பெருமான் என்னும் கருத்து இதனால் அறிவுறுத்தப் பட்டது. நண்ணவும் என்று கூறியவதனால் நெருங்கவும் மாட்டாத—அடையவும் மாட்டாதவர் என்பது பெறப் பட்டது. இவ்வாறு வானுலகில் வாழும் தேவர்களுக்கு நெருங்கவும் முடியாத—அடையவும் மாட்டாத ஒரு சிறந்த அரிய உயர்ந்த பொருள், இம்மண்ணுலகில் வாழும் தொண்டர்களுக்கு எளிமையாக அருளின் காரணமாக வெளிப்பட்டு அவர்களைப் பேரின்பத்தில்—சிவானந்தானு பவத்தில் திளைக்கச் செய்யும் தன்மையுடையதாகும் என்று குறிப்பிடுவார் 'உனதொழுப்படி யோங்கண் மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே' என்றார். இவ்வாறு மண்ணுலகத்தில் வந்து பிறவியெடுத்தல் என்பது சிவபெருமானது விருப்பின் காரணமாக நடைபெறுவ தல்லது உலக உயிர்களின் இச்சை காரணமாக நிகழ்வ தன்று.

''வான்பழித்து மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்'' என்ற திருவாசகத் தொடர் இக்கருத்தினைத் தெளிவுறுத்தும்.

'வண்திருப் பெருந்துறையாய்' என்று மீண்டும் சிவ பெருமானை உளங்கசிய அழைத்துருகும் குறிப்பு, அவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருப்பெருந் துறை நிலவளமும் நீர்வளமும் பெற்றிருப்பதோடன்றி உலக உயிர்கள் அருள் பெற வைக்கும் திருத்தலமாகவும் திகழ்கின்றது என்னும் கருத்தினை விளக்க வந்தது. திருக்

கோயிலை நாள்தோறும் வலம் வந்து சிவபெருமானைத் தொழுதெழுந்து அவன் உகந்த பணிகளை ஆற்றும் அடிமைகளாகும் செம்மாப்பு உடையோராதலின் அவர் களை 'வழியடியோம்' என்றார். பரம்பரை பரம்பரை யாகத் தொடர்ந்து அவனடி வணங்குதலே அவர்தம் தொழிலாகும். இவ்வாறு விளங்கும் திறனுடைய அடியவர் மனத்தில் பேரின்ப ஊற்றெனச் சுரந்து இனிமை நுகருமாறு இறைவன் செய்தலின் 'கண்ணகத்தே நின்று களிதருதேனே' என்றார். தேன் ஊனிற்கு மருந்தாய் நின்று நலம் சேர்ப்பதாகும். நாட்டில் அது மருத்துவப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆதலின் இனிமை சேர்ப்பதுடன் உடலுக்கு நலம் சேர்க்கும் இயல்பும் தேனிற்கு உண்டு. 'கண்ணகத்தே நின்று களி தருதேனே' என்பது ஒரு நுண்பொருளை உணர்த்தி நின்றதெனலாம். ஈண்டுக் 'கண்' என்பது ஞானத்தைக் குறிப்பதாகக்கொண்டு பொருள் காணின் சிவபெருமான் ஞானத்தைத் தந்து உயிர்கள் பேரின்பத்தில் திளைக்கு மாறு செய்கிறான் என்று ஆகும். தேன், நோய் நீக்கும் மருந்தாகத் திகழ்ந்தாலும் உண்ணும்பொழுது கசப்புத் தருதலின்றி இனிப்புத் தருதலையும் நோக்க வேண்டும். கசப்பு மருந்துகளை உட்கொள்ளத் தேனோடு சேர்த்து உண்ணல் உலகியல் வழக்கம். மேலும் தேன் இனிமையும் நலமும் உடலிற்குப் பயப்பதோடன்றி உயிரினை வளர்க்கும் இயல்பும் கொண்டதாகும். எனவே இறைவன் உயிரிற் கலந்து தேனாகத் தித்திக்கின்றான் என்றும் கொள்ளலாம்.

அடுத்துக் 'கடலமுதே' என்று இறைவனை விளித்தார் மணிவாசகர். தேவரும் அசுரரும் கடல் கடைந்தது அமுதம் பெறுவதற்காக. ஆனால் முதலில் வெளிப் பட்டதோ நஞ்சு. அதனைக் கண்ட அனைவரும் அஞ்சி யோடச் சிவபெருமான் உலக உயிர்கள் வாழவேண்டி அக்கடு நெஞ்சையும் உண்டு தேவரையும் பிறரையும்

சாவிலிருந்து காத்தான். திருநீல கண்டனானான். 'நீலமணி மிடற்றான்' என்று சங்ககாலந் தொட்டே அழைக்கப் பெறலானான். பிறர் உய்யும் பொருட்டுக் கடும் நஞ்சையும் உண்டு கறுத்த கழுத்தினனாகச் சிவ பெருமான் திகழ்வது என்பதே அவனுடைய அளவற்ற அருளின் பரப்பினைக் காட்டும். சிவானந்தம் என்பது இறுதிவரையில் உறுதி பயப்பது ஆன காரணத்தினால் இறவாமை தரும் மருந்து என்று புலப்படும் வகையில் சிவபெருமானைக் 'கடலமுதே' எனக் கட்டுரைத்தார் மணிவாசகப் பெருமான்.

அடுத்துக் 'கரும்பே' என்றார். கருப்பஞ்சாறு தீஞ் சுவை நிரம்பியது. எப்பருவத்தினரும் விரும்பிக் குடிப்பது. நோய்கள் சிலவற்றிற்கு மருந்தாகவும் அமைவது. எனவே சிவபெருமானை ஈண்டு மாணிக்கவாசகர் 'கரும்பே' என விளித்தார். திருவிடை மருதூர்த் தேவாரத் திருப் பதிகத்தில் நாவுக்கரசர் 'கட்டிபட்ட கரும்பினும் இனியன் தன் அடைந்தார்க்கு இடை மருதனே' என்பர்.

'விரும்பு அடியார் எண் அகத்தாய்' என்று மேலும் மாணிக்கவாசகர் சிவபெருமானைக் குறிப்பிடுவது 'அன்புடைத் தொண்டர் கருத்தில் உள்ளவனே' என்பதனைக் குறித்து நின்றதாகும். வீட்டின்பத்தை விரும்பி வழங்கும் சிவபெருமான் தன்னை இமைப்பொழுதும் மறவாது உள்ளத் தாமரையில் உருக்கொண்டெழுதி வழி படுபவர் உள்ளத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி விளங்கும் காரணம் பற்றியதாகும்.

'உலகுக்கு உயிரானாய்' என்ற தொடர் உலக உயிர் களுக்கெல்லாம் அவன் உயிராக—நாயகனாக விளங்கும் தன்மையை விளக்கி நின்றது. 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' எனச் சிவபுராணத் தில் குறிப்பிட்ட மாணிக்கவாசகர் இங்கும் 'என் அகத்

தாயும் உயிராயும்' விளங்கும் சிவனைச் சிந்தித்து வழுத்துகின்றார்.

'பள்ளி எழுந்தருளாய்' எனக் கூறி முடிக்கின்றார். எல்லாவுயிர்க்கும் முதற்பொருளாய், உயிர்ப் பொருளாய் விளங்கும் சிவபெருமான் தமக்குத் தலைவனாகத் திகழ்கிறான் என்று குறிப்பிட்டு, அப்பெருமானைத் திருப்பள்ளியை விட்டு எழுந்தருளுமாறு அன்போடும் ஆர்வத்தோடும் வேண்டி நிற்கின்றார் மாணிக்கவாசகர்.

**விண்ணகத் தேவரும்**
**நண்ணவும் மாட்டா**
**விழுப்பொரு ளே!உன**
**தொழுப்படி யோகங்கள்**
**மண்ணகத் தேவந்து**
**வாழச்செய் தானே**
**வண்திருப் பெருந்துறை**
**யாய்வழி அடியோம்**
**கண்ணகத் தேநின்று**
**களிதரு தேனே!**
**கடலமு தே! கரும்**
**பே!விரும் படியார்**
**எண்ணகத் தாய்உல**
**குக்(கு)உயி ரானாய்**
**எம்பெரு மான்! பள்ளி**
**எழுந்தரு ளாயே!**

## 10. புவனியிற் போய்ப் பிறவாமை

புவனியிற் போய்ப்பிற
வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ
மே, இந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற
வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை
வாய்!திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும்,
மலரவன் ஆசைப்
படவும்,நின் அலர்ந்தமெய்க்
கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை
ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தே!பள்ளி
எழுந்தரு ளாயே!

மேலைத் திருப்பாட்டில் இவ்வுலகில் வாழும் உயிர்களைச் சிவானந்தக் கடலில் திளைக்கச் செய்து பேரின்ப வெள்ளத்தில் ஆழ்த்தி, அப்பெருமான் உயிர்க்குயிராய் நின்ற நிலையினை உணர்த்திய மாணிக்கவாசகப் பெருமான் 'புவனியிற் போய்ப் பிறவாமை' என்று தொடங்கும் திருப்பள்ளியெழுச்சியின் இறுதிப் பாடலில், இவ்வுலகின்கண் திருமால், பிரமன் ஆசைப்படும்படி எம்மை அடிமை கொள்ளவேண்டும் என்று விரும்பி

வேண்டி விண்ணப்பிக்க முற்படுவாராய் அம்முழு முதற் பொருளாம் சிவபரம்பொருளை 'ஆரமுதே' என விளித்தார். அமுதே ஒருவரைச் சாகாமல் வைத்திருக்கும் தன்மையைச் செய்ய வல்லது. அதிலும் அருமையுடைத் தான அமுதென்றால் அதன் பயனைச் சொல்லில் அடக்கும் தன்மை இல்லை. மேலும் உலகிற் கிடைக்கும் அமுது தித்தித்துத் திகட்டும் இயல்புடையது. இறைவ னோடு தித்தித்துத் தித்தித்துத் திகட்டாத தன்மையுடை யவனாய் எப்பொழுதும் தித்தித்துக் கொண்டிருப்பவ னாவன். பிறவி என்னும் பெருநோய் மீண்டும் ஒருவரைப் பற்றாமலிருக்க அவன் அருளும் வீட்டின்பமாகிய அமுது துணை செய்கின்றது. பிறவியொழிந்தால் அது துன்பத் தொடர்வற்ற நீங்காத இன்பமாகி விடுகின்றது. பிறவியை அறுத்துப் பேரின்ப நிலையை அளிப்பவன் சிவன். ''செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' என்று சிவபுராணத்தில் குறிப்பிடும் மாணிக்கவாசகப் பெருமான் பிறவி என்னும் கட்டறுத்துச் சிவானந்தாநுபவத்தில் திளைக்க விரும்புகின்றார். இவ் ஈடில்லா இன்பத்தினைத் தருவது 'ஆரமுதாய்' விளங்கி அண்ணிக்கும் ஆண்டவ னுடைய கருணைப் பெருக்காகும். 'இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கி' என்று அடுத்து மொழிகின்றார் மணிவாசகர். இந்தப் பூவுலகம் சிவன் உலக உயிர்களைத் தன் அருளால் எடுத்து ஆட்கொள்ளு கின்ற இடம் என முதலில் அறிய வேண்டும். அவ்வாறு உலக உயிர்கள் அறியாத காரணத்தால்தான் ''புவனியிற் போய்ப் பிறவாமையினால் நாள் அவமே போக்கு கின்றோம்'' என்றார்.

**மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்கு காயம்**
**ஆனிடத்து ஐந்துமாகும் அரன்பணிக்காக அன்றோ**
**வானிடத் தவரும் மண்மேல் வந்து அரன்தனை**
**அர்ச்சிப்பர்**
**ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ**

என்று அருணந்தி சிவாச்சாரியார் சிவஞான சித்தியாரில் (182) செப்பியுள்ளவை இக்கருத்தை வலியுறுத்தக் காணலாம். இந்த மானிடப் பிறவி வாய்த்ததே 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' அவனடி சேர்ந்து மாறா இன்பத்தில் திளைப்பதற்கேயாம்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியினைப் பெற்றும், நாள்தோறும் சிவனை நினைத்து வழிபடாத நாட்கள் **வீழ்** நாட்களாகும்.

**வீழ்நாள் படாமை நன்றாற்றின் அ∴தொருவன்**
**வாழ்நாள் வழியடைக்குங் கல்**

என்பார் திருவள்ளுவர். (38) சிவபெருமானுடைய புகழைப் புகழ்ந்து பேசாத நாட்களெல்லாம் பிறவா நாட்கள் என்னும் கருத்தில் தாண்டக வேந்தராம் திருநாவுக்கரசர் பெருமான்,

**பிறந்தேன்நின் திருவருளாலே பேசின் அல்லால்**
**பேசாத நாளெல்லாம் பிறவா நாளே**

—திருவாவடுதுறை; திருத்தாண்டகம்: 101

என்றும்,

**துன்பம் நும்மைத் தொழாத நாட்கள் என்பாரும்**
**இன்பம் நும்மை ஏத்து நாட்கள் என்பாரும்**

—திருவாரூர்: 9


என்றும் கூறியுள்ளமை கொண்டு தெளியலாம்.

தங்கள் வாழ்நாட்கள் வீழ்நாட்கள் ஆகாதிருக்கத் திருமாலும் நான்முகனாம் பிரமனும் இந்தப் பூமியை விரும்பினார்கள் என்பார் 'திருமாலாம் அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்' என்றார். திருமால் விருப்பப்பட்டார்; பிரம்மன் ஆசைப்பட்டார் என இரண்டு வினையான் சொல்லியிருப்பதில் ஒரு நயம் உண்டு. விருப்பம் வேறு; ஆசை வேறு. விருப்பம் உயர்ந்த

பொருளிலும்; ஆசை அதனினும் சற்றுத் தாழ்ந்த பொருளிலும், வரும். எனவே திருமால் கொண்டது விருப்பம் என்றும், பிரமன் கொண்டது ஆசை என்றும் அறிவுறுத்தினார். இவ்வாறு தேவர்களாலும் விரும்பப் படும் இவ்வுலகத்தில் 'நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும் அவனியிற் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்' என்றார். 'நினது பரந்து விரிந்த பொய்யாத அருட் காட்சியாக விளங்கும் அருட்சத்தியும் தேவரீராகிய நீரும் இவ்வுலகின்கண்ணே போந்தருளி எங்களை அடிமை கொள்ள வல்லவனே' என்பது இத்தொடரின் பொரு ளாகும். ஈண்டு 'அலர்தல்' என்னும் சொல் 'உயிர்கள் தோறும் மறைந்து நின்று இறைவன் அவ்வுயிர்களை வினைப்பயன் நுகருமாறு செய்தும் மனப்பக்குவமும் செய்து வந்த திரோதான சத்தி அருட்சத்தியாக வெளிப் படும் திறத்தினை உணர்த்தி நின்றது. உலகில் வாழும் எந்த உயிரின் கருணையும் அளவும் காலமும் கருதிய தாகலாம். எந்த வுயிரின் ஆற்றலுக்கும் அருளுக்கும் ஓர் எல்லை உண்டு. ஆனால் சிவபெருமான் வரம்பற்ற ஆற்றல் உடையவன். திருபுரத்தையே எரித்தவன். அவ்வாறு வரம்பற்ற ஆற்றல் கொண்டிருத்தல் போலவே அளவற்ற அருளையும் கொண்டவனாய் உள்ளான். அதனால்தான் பிறரைச் சாகச் செய்யும் கடு நஞ்சைத் தானே உண்டு, தேவர்களையும் பிறரையும் சாவிலிருந்து காப்பாற்றினான். எனவே அவனது திருவருள் என்றும் பொய்யாத தன்மை கருதி 'மெய்க்கருணை' என்றார் மாணிக்கவாசகர். எனவே இவ்வுலக உயிர்களுக்கு அருள் செய்வான் வேண்டி, இவ்வுலகத்தே உமையம்மையோடும் வந்து போந்த சிவபெருமான் உயிர்கள் அனைத்தையும் அடிமை கொள்ளும் ஆற்றல் மிக்கவன் என்பது தோன்ற 'எமை ஆட்கொள்ள வல்லாய்' என்றார். யான் விரும்புவ தெல்லாம்—நின்பால் வேண்டுவதெல்லாம் எங்களை ஆட்கொள்ள வேண்டும் என்பதே என்பதைக் குறிப்பிட்டு,

துயிலுணருமாறு வேண்டுவார் 'ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே' என்று வேண்டி நின்றார். இவ்வாறு மாணிக்கவாசகர் சிவபெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடியருளினார்.

**புவனியிற் போய்ப்பிற**
**வாமையில் நாள்நாம்**
**போக்குகின் றோம்அவ**
**மே,இந்தப் பூமி**
**சிவன்உய்யக் கொள்கின்ற**
**வாறென்று நோக்கித்**
**திருப்பெருந் துறையுறை**
**வாய்!திரு மாலாம்**
**அவன்விருப் பெய்தவும்,**
**மலரவன் ஆசைப்**
**படவும்,நின் அலர்ந்தமெய்க்**
**கருணையும் நீயும்**
**அவனியிற் புகுந்தெமை**
**ஆட்கொள்ள வல்லாய்!**
**ஆரமு தே!பள்ளி**
**எழுந்தரு ளாயே!**



**சி.பா.**

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரி பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு. அங்கு முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம்.லிட். பட்டமும், சேர நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள். நல்ல நடைகொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில். சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர்.

இருபது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று. அண்மையில் வந்துள்ள அணிகலன் பெருந்தகை மு. வ.' 'ஆங்கிலத்தில் ஒரு நூல்' சங்க கால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசைப் பெற்றது. அண்ணாமலை அரசர் பரிசு உரூபா இருபதாயிரத்தினை இவருடைய 'சேர நாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்' என்னும் நூல் பெற்றுள்ளது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள் : புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ் நாட்டு நல்வழி நிலையம்), சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்) சங்கத் தமிழ்ச் செல்வர் (தருமபுர ஆதீனம்).

பெருந்தகை மு.வ. வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி; இலக்கியப் பேச்சில் இன்ப அருவி; எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி.

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி. இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு.

— **மா. செ.**